விலை ரூபா 20 பக்கங்கள் 36

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 195 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 27, புதன்கிழமை 10.06.2015

விகாரைகளில் அரசியல் நடத்தும் மஹிந்த ராஜபக்ஷ பக். 16

## போதைப்பொருள் விற்பனை சமூகத்தை அழிக்கும் குற்றம்

### மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் சீற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

போதைப் பொருளைப் பயன்படுத்துதல், அதனை வைத்திருத்தல், விற்பனை செய்தல் என்பன ஒரு சமூகத்தை அழிக்கக் கூடிய சக்தியைக் கொண்ட பெரும் குற்றங்களாகும் என்று கடுமையாகக் கருத்துத் தெரிவித்தார் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

ஒரு கிலோ கிராமுக்கும் மேற்பட்ட கஞ்சா போதைப்பொருளைத் தன் உடைமையில் வைத்திருந்ததோடு விற்பனையும் செய்த வருக்கு அபராதம் விதித்த நீதிபதி, போதைப் பயன்பாடு குறித்த தனது கடுமையான கண்டனத்தையும் தெரிவித்தார்.

இளவாலையைச் சேர்ந்த மர்சலின் ஜெஸ்டின் டானியல் என்பவர் 2012 ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் திகதி கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார். அவர் அதனை விற்பனை செய்த பொழுது கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 75 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டிருந்தது. அவர் பக்.24

## வடக்கில் மீள்குடியமர்வை நாங்களே செய்யவேண்டும்

### மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கு மாகாணத்தில் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை அரசு பல்வேறு குழுக்கள் ஊடாக செய்வதற்கு எத்தனிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ள வடக்கு மாகாணசபை, வடக்கில் மேற்கொள்ளப்படும் சகல மீள்குடியமர்வு நடவடிக்கைகளையும் வடக்கு மாகாண சபையே மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கு நாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட அவசர பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் 30 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவினால், அவசர பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்தப் பிரேரணையில், பக்.24

நாடாளுமன்றக் கலைப்பு 20 ஆவது திருத்தத்தில் தங்கியுள்ளது! பக். 17

# மது விற்பனை உரிமங்களை மீள் பரிசீலனை செய்யுங்கள்

### வடக்கு மாகாண சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கில் தற்போது அதிகரித்துள்ள மனித நேயமற்ற கலாசாரத்துக்கு மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனை பிரதான காரணம். இதனடிப்படையில் வடக்கில் கடந்த காலங்களில் வழங்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்களுக்கான உரிமைப் பத்திரங்களை மீளாய்வு செய்ய வேண்டும். உரிய முறையில் - அனுமதி இன்றி அமைக்கப்பட்ட மதுபான நிலையங்களின் உரிமங்களை இரத்துச் செய்ய வேண்டும். மேலும் புதிதாக மதுபான நிலையங்கள் திறப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு வலியுறுத்தும் தீர்மானம் ஒன்று நேற்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.

வக்கிரமான குற்றவாளிகளால் புங்குடுதீவு மாணவி கோரமாகக் கொலை செய்யப்பட்ட பின்னர் வடக்கில் போதைப் பொருள் மற்றும் மது பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோஷம் தீவிரம் பெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம்கூட இது தொடர்பில் கொழும்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், வடக்கு பக்.24

## மாணவி கொலை மற்றொருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

புங்குடுதீவு மாணவி, வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் ஒருவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவரை பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க பொலிஸார் நீதிமன்றின் அனுமதியைக் கேட்டிருந்தனர். 48 மணி நேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதியளித்தது.

வேலணைப் பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். வேலணைப் பிரதேச சபையில் பணிபுரியும் பணியாளர் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. புங்குடுதீவு மாணவியின் கொலை தொடர்பில் ஏற்கனவே 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-4)

### புகைத்தல், மதுபானம் ஒழிக!



புகைத்தலையும் மதுபானத்தையும் ஒழிக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் இது தொடர்பில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். தம்மால் வரையப்பட்ட புகைத்தலுக்கு எதிரான சித்திரங்களையும் மதுபானப் பயன்பாட்டுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் மாணவர்கள் தமது கைகளில் தாங்கியிருந்தனர்.

மாவட்டத்தில் காணப்படும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையிலும், போதை பொருள்களால் மனிதனுக்கும், இயற்கைக்கும் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் விளக்கும் சித்திரங்களையும் மாணவர் கள் தமது கைகளில் தாங்கியிருந்தனர். (உ-21)

## வவுனியா அரச அதிபரை மாற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

### நேற்று மாகாண சபையினுள் நடந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 10

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை அவமானப்படுத்திய, வவுனியா மாவட்ட அரச அதிபரை இன்னமும் இடமாற்றம் செய்யப்படாமைக்கு கண்டனம் தெரிவித்து, வடக்கு மாகாணசபையின் சபா பீடத்தினுள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 30ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது. அவைத் தலைவர் ஆசனத்தில் அமர்ந்ததும், தமது இருக்கைகளை விட்டு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பக்.24

## மோதிவிட்டு தப்பிய வாகனம் ஓட்டோவும் சாரதியும் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

தொழிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியவரை மோதிக் கொன்றுவிட்டு நிற்காமல் தப்பிச் சென்றதாகக் கருதப்படும் ஓட்டோவைக் கைப்பற்றிய பொலிஸார் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை மதவடியில் நேற்றுமுன்தினம் காலை 5.30 மணி அளவில் இடம்பெற்ற விபத்தில் சுதுமலை தெற்கு சாவற்கட்டைச் சேர்ந்த கடற்றொழிலாளியான சுப்பிரமணியம் உதயநாதன் (வயது -38) என்பவர் உயிரிழந்தார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவரை மோதிய வாகனம் நிற்காமல் தப்பிச் சென்றிருந்தது.

காக்கைதீவுக் கடலில் பக்.24

## ரயில் மோதி நேற்று குடும்பஸ்தர் சாவு!

### பாதையைக் கடக்க முற்படுகையில் பரிதாபம்



யாழ்ப்பாணம், ஜூன் 10

ரயில் வருவதை அவதானிக்காது ரயில் பாதையைக் கடக்க முயன்ற குடும்பஸ்தர் ரயில் மோதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் கோண்டாவில் ரயில் நிலையத்தை அண்மித்த நந்தாவில் கற்புலத்து மனோன்மணி ஆலயத்துக்கு பக்.24

## பேகர் இன மக்களை ஒன்றிணைக்க அமைப்பு

### யாழ்ப்பாணத்தில் உருவாக்க முழு முயற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்ப்பாணத்தில் சிதறுண்டு வாழும் பேகர் இன மக்களை ஒன்றிணைத்து, யாழ்ப்பாண பேகர் சமூக அமைப்பொன்றை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள லெயிற்றன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பேகர் சமூக அமைப்பு, திருகோணமலை பேகர் சமூக அமைப்பு என்பன ஏற்கனவே உருவாக்கப்பட்டு இயங்கி வரும் நிலையில் யாழ்ப்பாணத்திலும் இது போன்ற அமைப்பை ஏற்படுத்த திருகோணமலை பேகர் சமூக அமைப்பின் இணைத் தலைவர் பக்.24

## மேலும் 16 பேருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 10

கடந்த மாதம் யாழ்ப்பாணம் நீதிமன்றத் தொகுதி தாக்கப்பட்டமை மற்றும் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 15 மாணவர்கள் உள்ளிட்ட 16 பேருக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 33 சந்தேகநபர்கள் தொடர்புடைய வழக்கில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரும், பன்னிரண்டு மாணவருக்கும் 14 சந்தேகநபர்கள் தொடர்புடைய வழக்கில் மூன்று மாணவர்களுக்கும் யாழ் நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று 47 சந்தேகநபர்கள் தொடர்பான இரு வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளால் வழமை போன்று பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்றின் நுழைவாயில்களில் பாதுகாப்பு தடைகள் அமைக்கப்பட்டு தண்ணீர் பீரங்கி வாகனம் நிறுத்தப்பட்டு அதிரடிப்படையினருடன் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட் பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி, உண்மை, இழப்பீடு மூன்றும் எங்கள் உரிமை

## இவற்றைத் தொடர்ந்து வலியுறுத்தவேண்டும் என்கிறார் பெரு நாட்டின் உண்மை ஆணைக்குழுவின் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

நீதி, உண்மையை நாடுதல், இழப்பீடு ஆகிய மூன்றையும் புறக்கணிக்க முடியாது. அவை எமது அடிப்படை உரிமையும் சர்வதேச மட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமையுமாகும். எனவே நாம் அந்த விடயங்களைத் தொடர்ந்து வலிறுத்தி வரவேண்டும். அப்போதுதான் நீதி கோரும் விசாரணையை, உள்நாட்டில் மாத்திரமல்ல சர்வதேசத்திலும் கோர வழி வகுக்கும். அதற்கு உதாரணங்களும் உண்டு என்று பெரு நாட்டின், உண்மை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் எட்வாடோ கொன்ஸாலெஸ் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

யாழ்.நகரிலுள்ள ரில்கோ விடுதியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துக்களை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் உண்மை, நியாயம் மற்றும் நல்லிணக்கச் செயன் முறைக்குப் புத்துயிரூட்டும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் என்ன நடந்தது என்பதனைக்கொண்டு அதன் மூலமாக என்ன கற்றுக்கொள்ள முடியும் என நோக்க வேண்டும். சிலி நாட்டில் பொது மன்னிப்புச் சட்டங்களை ராணுவமே கொண்டு வந்தது. 1978 முன்னர் இடம்பெற்ற காணாமல்போனமை உள்ளிட்ட சம்பவங்கள் பற்றி பின்னர் கொண்டு வரப்பட்ட சட்டம் மூலமாக நடவடிக்கை எடுக்கமுடியாது என்று கூறப்பட்டது. ஆனால் அத்தகைய குற்றங்கள் அதன் பின்னரும் தொடர்ந்ததால் அதனைச் செய்யலாம் என்று கோரிக்கை பல தடவைகள் முன்வைக்கப்பட்டுப் பின்னர் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு வெற்றியளித்தது.

எனவே அதனைத் தாண்டுவதற்கான உபாயத் திட்டங்களை நாம் தான் செயற்படுத்த வேண்டும். அதற்கு நாம் அழுத்தம் கொடுக்கவேண்டும். நாம் அவ்வாறு அழுத்தம் கொடுத்தால் தான் அந்த விடயங்கள் கிடப்பில் போடப்படாது கவனத்தில் கொள்ளப்படும். அதனைச் செய்ய வேண்டியது எம்மிடமேயுள்ளது. எமது தலைவர்களிடமே உள்ளது.

உதாரணமாகச் சிலி நாட்டில் நடந்த குற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகோரி நீதிமன்றுக்கு வழக்கு வந்தது. ஆனால் அது பல தடவைகள் நிராகரிக்கப்பட்டது. ஆனால் அதனை முன்னெடுத்தவர்கள் அதனைக் கைவிடவில்லை. தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். காலவோட்டத்தில் அது வேறொரு நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனை நாம் உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

எனவே நீதி கோரும் விடயத்தை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டும். நீதி கோரும் விசாரணை உள்நாட்டில் மாத்திரமல்ல சர்வதேச விசாரணையையும் கோர வழிவகுக்கும். நீதி எல்லாம் ஒன்று தான். நீதி, உண்மையை நாடுதல், இழப்பீடு ஆகிய 3 உரிமைகளும் எமக்கானவை.

காணாமல்போதல், பெண்கள் வன்புணர்வுக்கு உள்ளாகுதல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்கு எங்கு நிவாரணம் தேடுவது என்பது பிரச்சினையாகவே இருக்கிறது – என்றார்.

இதேவேளை– உண்மையைக் கூறுவது என்பதன் கருத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பதே. ஆணைக்குழுக்கள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். உண்மையைக் கண்டறிவதற்கு மனித இதயங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று தென்னாபிரிக்க அரசமைப்பு நீதிமன்றின் முன்னாள் நீதியரசர் அல்பீ சக்ஸ் நேற்றுக் கருத்துரைத்தார். அவர் கொள்ளை ரீதியாக மண்டேலாவுடன் இருந்தவர். முன்னர் ஒரு போராளியாக இருந்தவர். அதனால் அவருக்கு வலது கை இல்லை. எனினும் இத்தகைய கலந்துரையாடல்களில் அவர் ஈடுபடுகின்றார்.

அதிகாரத் தரப்பினர் தமது குற்றங்களை ஏற்றுக் கொள்வதென்பது குறைவு. ஆனாலும் சில இடங்களில் அதனை ஏற்றுக்கொண்டனர். தென்னாபிரிக்காவில் யுத் ஆணைக்குழுக்கள் மூலமாகப் போர் விடயங்களை வெளிக் கொணர்ந்தனர். ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி நீதியைப் பெறுவது சாதாரண விடயமல்ல. போதிய காலஅவகாசம், ஆதாரங்கள் தேவை என்று அல்பீ சக்ஸ் தெரிவித்தார்.

(த–4)



மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை குணமடைய வேண்டி யாழ்.பல்கலைக் கழகத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வு பெற்ற பேராயர் ஜெபநேசன் தலைமையில் யாழ். கைலாசபதி கலையரங்கில் நேற்று விசேட ஆராதனை இடம்பெற்றது. இந்த ஆராதனையில் மதகுருமார்கள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த–101)

# முழங்கையின் கீழ் இழந்தோருக்கு இலவசமாக நவீன செயற்கைக் கை

## யாழ்.ரோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

முழங்கையின் கீழ் கை இழந்தவர்களுக்கு, வினைத்திறனுடன் செயலாற்றக் கூடிய செயற்கைக் கை இலவசமாகப் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. யாழ்ப்பாணம் ரோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயற்பாடு யாழ்.நகரில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களால், கை பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன, யாழ்.நகரில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமையும், மறு நாள் சனிக்கிழமையும் காலை 9.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரையில் இந்தச் செயற்பாடு நடைபெறும்.

முழங்கைக்கு கீழே பத்து சென்றி மீற்றர் நீளத்துக்குக் கையின் துண்டு இருக்கவேண்டும். அதன் கீழான கைவிரல்கள் உள்ளிட்ட கைத் துண்டு இல்லாதவர்களுக்கே, கை பொருத்தப்படவுள்ளது. பொருத்தப் பட வுள்ள கை வினைத்திறனுடன் செயலாற்றக் கூடியது.

இந்தக் கை பொருத்தியவர்களை, அந்தக் கையைப் பயன்படுத்தித் தமது இயல்பான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(த–5)

# ஆசிரியர் வீட்டில் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொக்குவிலில் பட்டப்பகலில் யாருமற்ற நேரம் வீடு புகுந்த திருடர் 10 பவுண் நகைகள் உட்பட பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில் இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது.

வீட்டிலுள்ள கணவன் ஆசிரியர் என்றும், மனைவி வங்கியில் பணிபுரிகிறார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். பிள்ளைகளும் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து வீட்டுக் கதவை உடைத்து உள்ளே சென்று நகைகளையும் பணத்தையும் திருடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு கைரேகை பதிவு செய்ததோடு விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

(த–4)

# ஏமாற்றினார் சட்டத்தரணி

## கைதானவர்களின் உறவுகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். நீதிமன்றத் தாக்குதலின் பின்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களைப் பிணையில் எடுப்பதாகக் கூறி 5 லட்சம் ரூபா வரை பணம் பெற்ற பிற மாவட்ட சட்டத்தரணி ஒருவர் நேற்று வழக்கு நடவடிக்கைக்கு வராமல் ஏமாற்றியுள்ளதாகக் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்கள் பகுதி பகுதியாகப் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர். அவ்வாறு விளக்கமறியலில் உள்ளவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கான பத்திரங்களைச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறி கைது செய்யப்பட்டுள்ளவர்களிடமிருந்து தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 11 பேரிடம் அந்தச் சட்டத்தரணி பணம் பெற்றுள்ளதாகக் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர் கூறுகின்றனர்.

அதற்குத் தரகர் ஒருவர் இணைப்பாளராகச் செயற்பட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் குறித்த சட்டத்தரணி நேற்று யாழ்.நீதிமன்றில் வழக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அதனால் பணம் கொடுத்த தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும், சட்டத்தரணி ஏமாற்றியுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

(த–4)

# காங்கேசன்துறை பொலிஸ் நிதிப் பிரிவில் பண மோசடி

## முகாமைத்துவ உதவியாளர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தின் கட்டளைப் பணியகத்தில் கடமையாற்றிய முகாமைத்துவ உதவியாளரை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்க கொழும்பு கோட்டை நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியக் கட்டளைப் பணியகத்தின் நிதிப் பிரிவில் கடந்த ஆண்டு காலப் பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்க வேண்டிய 2 இலட்சத்து 92 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டிருந்தது.

இவ்விடயம்தொடர்பில்பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து, பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் அடிப்படையில் அந்த நிதிப் பிரிவில் முகாமைத்துவ உதவியாளர் பிரிவு 2 இல் பணியாற்றித் தற்போது, கொழும்பில் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் சந்தேகநபரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

அவரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார், கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, வழக்கை விசாரித்த நீதிவான் அவரை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர் தொடர்பான வழக்கு விசாரணைகளை மல்லாகம் நீதிமன்றுக்கு அதே திகதி பாரப்படுத்துமாறு, விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

(த)

# தெற்கு சுற்றுலாப் பயணிகள் தங்கிய வீடு மீது தாக்குதல்

வலி. வடக்கு, ஜூன் 10

தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கி நின்ற வீட்டின் மீது இனம் தெரியாத விசமிகள் கல்லெறிந்தமையால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான நிலை ஏற்பட்டது.

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் இல்லங்களில் இரவைக் கழித்து வருவது வழக்கமாகும்.

இந்த வகையில் மல்லாகம் பகுதியில் உள்ள தனியார் வீடு ஒன்றில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கி நின்றுள்ளனர்.

இதன்போது நள்ளிரவு நேரம் சில விசமிகள் சிலர் திட்டமிட்டு அந்த வீட்டின் மீது கல்லெறிந்து தாக்கி விட்டு ஓடியுள்ளனர்.

இதனால் பதற்றம் அடைந்த சுற்றுலாப்பயணிகள் உடனடியாக அந்த வீட்டில் இருந்து நள்ளிரவே வெளியேறிவிட்டனர்.

ஆயினும் குறிப்பிட்ட சம்பவம் குறித்துத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

(த–86)

# குளத்தில் மூழ்கி இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

நண்பர்களுடன் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தவர் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா சிதம்பரபுரம் குளத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இ.சத்தியசீலன் (வயது 19) என்பவரே அதில் உயிரிழந்தார்.

குறித்த இளைஞன் நண்பர்களுடன் குளத்திற்கு அருகிலிருக்கும் மரத்திற்கு மேல் ஏறி குதித்துக் குளித்துள்ளதாகவும், அதன்போதே அவர் நீரில் மூழ்கியதாகவும் ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் மூச்சுப் பேச்சற்ற நிலையில் இளைஞன் மீட்கப்பட்டு உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டமை பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் மேலதிக விசாரணை முன்னெடுப்பதாகப் பொலிஸார் மேலும் கூறினர்.

(த–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரிச் சந்தை விற்பனைப் பிரிவு அரைகுறை நிலை

*வியாபாரிகள், பொதுமக்கள் தினமும் பெரும் சிரமம்*

தென்மராட்சி, ஜூன் 10
சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட விற்பனைப் பிரிவுக்கான வேலைகள் பூர்த்தி செய்து வழங்கப்படாததால் சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் பொதுமக்களும் தினமும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
விற்பனைப் பிரிவுக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆறு மாதங்களாகியும் ஏனைய வேலைகள் செய்யப்படாமல் காலத்தை இழுத்தடிப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,
கடந்த வருடம் எம்முடன் தொடர்பு கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையினர், சந்தை வளாகத்தில் பல்வேறு கட்டடங்களில் காணப்படும் விற்பனைப் பிரிவுகளை ஒன்றிணைத்து இரு பெரிய விற்பனைக் கூடங்களை தென்னிலங்கையில் உள்ள சந்தைகளைப் போல அமைத்துத் தருவதாகக் கேட்டனர். அவ்வேளை மழை காலம் என்பதால் ஜனவரி மாதத்துக்குப் பின்னர் ஆரம்பிக்கலாமெனக் கூறினோம். அப்போது 2014 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு என்பதால் உடனடியாக வேலைகள் ஆரம்பிக்கவேண்டும். வேலைகள் பூர்த்தி செய்து இரண்டு மாதங்களில் அதாவது டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படுமென வாக்குறுதியளித்தனர்.
வேலைத்திட்டத்தில் இரு பெரிய விற்பனைக் கூடங்கள், பொதுமலசலகூடம், உள்ளக வீதிகள், நிலப் பகுதி கொங்கிறீற் கற்களால் செப்பனிடுவதுடன் ஒரு பகுதியைப் புற்றரையாக அமைப்பதெனவும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.
இதனையடுத்து வியாபாரிகள், பொதுமக்களை மழை காலத்தில் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கென அவசர அவசரமாகத் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. அந்த வியாபாரிகளும் பொதுமக்களும் இன்றுவரை பல்வேறு காரணிகளால் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.
விற்பனைப் பிரிவுகளுக்கான கட்டடம் டிசெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டபோதிலும் ஏனைய வேலைகள் செய்வது தாமதமடைந்தன. ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பின்னர் வேலைகள் இழுத்தடிக்கப்பட்டு இப்போது மந்தகதியில் உள்ளன.
ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் பல்வேறு இயற்கை இடர்கள் ஏற்பட்ட வேளையில் எமது வியாபாரிகளும் பொதுமக்களும் சொல்லொணாத துயரங்களை அனுபவித்துள்ளனர்.
இது தொடர்பாக கடந்த மே மாதம் இரண்டாம் திகதி நகர அபிவிருத்தி அமைச்சரான ஹக்கீமுக்கு, வேலையை விரைவில் முடித்து தர நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பியிருந்தேன். அதற்குப் பதில் கிடைக்காததால் மீண்டும் கடந்த முதலாம் திகதி மேலும் ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன். இவைகளுக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.
எமது ஆட்சிக்காலமும் இன்னும் ஒன்றரை மாதத்தில் முடிவுறவுள்ளதால் அதற்கு முன்னர் புதிய விற்பனைப் பிரிவைத் திறந்து வைக்க வேண்டுமெனச் சபையினர் விரும்புகின்றனர். ஆனால் ஒப்பந்தத்துக்குரிய முழுத் தொகையும் ஒப்பந்தகாரரால் டிசெம்பர் மாதத்தில் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் வேலைகள் இன்னமும் முழுமையாக செய்து முடித்து கையளிக்கப்படவில்லை.
இடைநடுவில் பொதுச் சந்தையைச் சபை பொறுப்பேற்றால் அதன் பின்னர் ஏற்படும் அனைத்துச் செலவுகளையும் சபையே செய்யவேண்டிய நிலை ஏற்படும் .பொதுமக்களும், வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும் தினமும் தற்காலிகக் கொட்டகைகளில் ஏற்படும் பாதிப்புத் தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் தெரிவித்தவண்ணமுள்ளனர்.
இது தொடர்பாக நகர அபிவிருத்தி சபையின் யாழ். மாவட்டப் பணிப்பாளருக்குப் பல தடவைகள் கடித மூலமும் நேரடியாகவும் தெரியப்படுத்தியும் பயன் கிடைக்கவில்லை. இருப்பினும் எமது முயற்சிகளைக் கைவிடாது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை .சேனாதிராசா மூலம் நகர அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது–என்றார். (த–9)

## எரிபொருள் நிலையத்தில் பணம் திருடி கமராவில் சிக்கினார்கள் சகோதரர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10
எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதிகாலை நேரம் மேசையிலிருந்த பணத்தைத் திருடிச் சென்ற சகோதரர்கள் இருவர் சி.சி.ரி.வி கமரா மூலமாகக் இனங்காணப்பட்டுக் கைது செய்யப்பட்டனர்.
திருநெல்வேலியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் குறித்த சம்பவம் இடம் பெற்றது.
குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் எரிபொருள் நிரப்பச் சென்ற குறித்த இருவரும் அங்கு பணியாளர்கள் நித்திரையில் இருந்ததைக் கண்டுள்ளனர். அதனால் வெளியே இருந்த மேசை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சுமார் 37 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.
நித்திரையால் விழித்த பின்னரே பணியாளர்கள் திருட்டு நடந்ததைக் கண்டறிந்தனர். பின்னர் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமரா மூலமாகப் பார்த்தபோதே குறித்த இருவரும் பணம் திருடிச் செல்லும் காட்சி பதிவாகியுள்ளதைக் கண்டறிந்தனர்.
அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை முன்னெடுப்பதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த–4)

## நோயாளர்களுக்கு உளவள ஆற்றுகை

*சாவகச்சேரி வைத்தியசாலையில்*

தென்மராட்சி, ஜூன் 10
சாவகச்சேரி வைத்தியசாலையில் உளவளப் பிரிவுக்கென இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருகின்றனர்.
இவர்கள் மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவு விடுதிகள் மற்றும் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்களுக்குத் தேவையான உளவள ஆலோசனைகளை வழங்கி நோயாளர்களையும் அவர்களுடன் வருவோரையும் ஆற்றுகைப்படுத்தி வருகின்றனர்.
நட்புறவுடன் என்னும் நிறுவனத்தினரால் ஒரு வார வதிவிடப் பயிற்சி பெற்ற இந்த உத்தியோகத்தர்கள் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலையில் பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதி அங்குள்ள கட்டடமொன்றில் உளவள ஆற்றகைப்படுத்தவென வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கத்தினர் தேவையான தளபாடங்களை வழங்கியுள்ளனர்.
இந்த உத்தியோகத்தர்கள் வைத்தியசாலைக்கு வரும் வெளிநோயாளர்கள், விடுதி நோயாளர்கள், கிளினிக் நோயாளர்கள் ஆகியோருக்கு அந்தந்த இடத்தில் வைத்து உளவள ஆற்றுகைகளை மேற்கொண்டு வருவதையும், இதனால் நோயாளர்கள் ஆற்றுப்படுத்தப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருவதையும் காணமுடிகிறது.
இந்த உத்தியோகத்தர்களின் சேவையினால் பதற்றநிலையில் வரும் நோயாளர்கள், உறவினர்கள் வழமை நிலைக்கு திரும்பிச் சிகிச்சை பெற்றுச் செல்வதையும் காணமுடிந்தது. (த–9)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் வாகனப் பாதுகாப்பு நிலையம்

தென்மராட்சி, ஜூன் 10
சாவகச்சேரி வைத்தியசாலையில் நீண்டகாலமாகக் குறைபாடாகக் காணப்பட்ட அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கான வாகன பாதுகாப்பு நிலையம் மருத்துவமனைவளாகத்தில்அமைக்கப்படவுள்ளது.
இதற்கான ஏற்பாடுகள் யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்திடம் வேலைகள் மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதுவரை காலமும் வைத்தியசாலையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது வாகனங்களை வைத்தியசாலை வளாகத்தில் உள்ள மரநிழல்களில் விட்டதாகவும், மழை காலங்களில் தமது வாகனங்கள் நனைந்த நிலையில் காணப்பட்டதால் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் இ.கேதீஸ்வரனிடம் தமது தேவைகளைக் கூறியபோது, விரைவில் தேவையை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்திருந்ததாகவும், தற்போது அது நிறைவேறவுள்ளதாகவும் ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
வைத்தியசாலை வளாகத்தில் பொது மக்களுக்கெனவும் மருத்துவ அதிகாரிகளுக்கெனவும் தனித்தனி வாகனத் தரிப்பிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–9)



*கனேடியத் தூதரகத்தின் கவுன்சிலர் ஜெனிபர் ஹாட் நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டார். உதயன் அலுவலகத்துக்கும் வருகை தந்த அவர், உதயன் முகாமைத்துவ இயக்குநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். (த)*

## கர்ப்பிணியை தாக்கிய கும்பல்

தென்மராட்சி, ஜூன் 10
கர்ப்பிணியையும் அவரது கணவரையும் கும்பல் தாக்கியதில் கர்ப்பிணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது கணவனும் 2 பிள்ளைகளும் வீட்டுக்குச் செல்ல அச்சம் காரணமாக மருத்துவமனை வளாகத்தில் இரவு தஞ்சமடைந்திருந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சரசாலை தெற்கில் இடம் பெற்றது.
தமது வீட்டில் இரவு உணவு அருந்திக் கொண்டிருந்தவேளை, வளவினுள் அத்துமீறி உள்நுழைந்த கும்பல் கணவனையும் கர்ப்பிணிப் பெண்ணையும் கண் மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கான இவர்கள் 119 அவசர அம்புலன்ஸ் சேவைக்குத் தகவல் அனுப்பினர். இதனையடுத்து இருவரையும் இரு குழந்தைகளையும் மீட்ட அவர்கள் மருத்துவமனையில் அனுமதித்தனர்.
நிறைமாதக் கர்ப்பிணியான இதே இடத்தைச் சேர்ந்த அனஸ்தீபன் அகிலா ( வயது 23 ) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரது கணவனும் 2 பிள்ளைகளும் இரவு மருத்துவமனை வளாகத்தில் தங்கி விட்டு நேற்றுக் காலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த–9)

## டெங்கு பெருகும் சூழல்; 7 பேருக்கு எதிராக வழக்கு

தென்மராட்சி, ஜூன் 10
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினால் நடத்தப்பட்ட விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாட்டின்போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் காணிகளை வைத்திருந்த 7 பேருக்கு எதிராகச் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.
சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்ட விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் கடந்த 4 ஆம், 6 ஆம், 8 ஆம் திகதிகளில் பிரதேசத்தில் டெங்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக இனங்காணப்பட்ட மூன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
கடந்த. நான்காம் திகதி மண்டுவில் சாவகச்சேரி வடக்கு ஆகிய பிரிவுகளிலும், ஆறாந் திகதி மீசாலை கிழக்கு பிரிவிலும், நேற்றுமுன் தினம் மந்துவில் பிரிவிலும் சுகாதாரப் பகுதியினருடன் பொலிஸார், படையினர் ஆகியோர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
மூன்று பிரிவுகளிலும் ஆயிரத்து 7[illegible] இல்லங்களில் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும், இவர்களில் மண்டுவில், சாவகச்சேரி வடக்கு ஆகிய பிரிவுகளில்இருவரும்,மீசாலை கிழக்குப் பிரிவில் மூவரும், மந்துவில் பிரிவில் இருவருமாக மொத்தம் ஏழுபேர்டெங்குநுளம்புஉற்பத்தியாகக் கூடிய நிலையில் காணிகளை வைத்திருந்ததாக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 1, 2 மாணவர்களுக்கான பல்மட்ட கற்பித்தல் கண்காட்சி



தென்மராட்சி, ஜூன் 10
தென்மராட்சி கல்வி வலயத்தால் 'யுனிசெப்' நிறுவன அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட தரம் 1 தரம் 2 மாணவர்களுக்கான பல்மட்டக் கற்றல் கற்பித்தல் செய்முறை தொடர்பான கண்காட்சியும் இது தொடர்பான செயலட்டைகளை பாடசாலைகளுக்கு வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சுகிருஷ்ணகுமார் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் வடமாகாணகல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், மாகாண கல்வித் திணைக்கள ஆரம்பப் பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம், கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட், யுனிசெப் நிறுவன கிளிநொச்சி கல்வி அலுவலர் செல்வி எஸ்.கார்த்திகேயினி, சுகாதாரம் மற்றும் போஷாக்கு தொடர்பான அலுவலர் என்.சுதர்மன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்

கண்காட்சியை கல்வி அமைச்சின் செயலாளர் மாகாண கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கூட்டாகத் திறந்து வைத்தனர். கண்காட்சியை பெருமளவு பெற்றோர் பார்வையிட்டனர்

பாடசாலைகளுக்கென தயாரிக்கப்பட்ட செயலட்டைகள் அடங்கிய பொதியை வலயக் கல்விப் பணிப்பாளர் சுகிருஷ்ணகுமார் வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரிடம் வைபவரீதியாக கையளித்தார். அதன் பின்னர் செயலட்டைப் பொதிகளை தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களிடம் கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கினார். (ற-9)

# நயினாதீவு செல்லும் யாத்திரிகர்களுக்கு போதிய வசதிகள்

## அதிகாரிகளுக்கு யாழ். அரச அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாத்திரிகர்கள் வசதியான போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியதாகப் படகுச் சேவையும், இ.போ.ச. பஸ் மற்றும் தனியார் பஸ் போக்குவரத்துச் சேவையும் சீரான முறையில் இடம்பெறச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஒழுங்குகளை முன்னெடுக்குமாறு யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் படகு உரிமையாளர்களையும், இ.போ.ச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைக்குப் பொறுப் பானவர்களையும் கேட்டுள்ளார்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. உற்சவத்தையொட்டிய ஏற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் உட்பட பிரதேச சபையினர், இ.போ.ச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைப் பிரதிநிதிகள், மின்சார சபையினர், சுகாதார திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், கடற்படையினர், ஆலய அறங்காவலர் சபையினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பஸ் கட்டணத்தில் மிகுதிப் பணம் வழங்குவதற்கான பிரச்சினைகள் உள்ளதால் இ.போ.ச பஸ் சேவையில் பிரயாணி ஒருவருக்கு ரூபா 80 அறவிட வேண்டியுள்ளதாக இ.போ.ச. அதிகாரிகள் தெரிவித்தனர். இதனை நிராகரித்த அரச அதிபர், வழமை போன்றே கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனவும், கட்டண அதிகரிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதெனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். படகுச் சேவைக்கான கட்டணமும் வழமை போன்றே இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயச்சுற்றாடலில் சுகாதார சேவைகள் உரிய முறையில் இடம்பெறவும், உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார வசதிகள் மக்களுக்குப் பாதிப்புக்களை உண்டு பண்ணாதவகையில் அமையவேண்டும் எனவும், உரிய முறையில் கையாளப்படாத உணவகங்கள் மூடப்படும் எனவும், உணவு நிலையங்களில் கடமையில் இருப்பவர்கள் புகைத்தல், வெற்றிலை, பாக்கு மற்றும் மது வகைகளைப் பயன்படுத்தி இருப்பது காணப்படின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரச அதிபர் கூறினார்.

அத்துடன் மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வசதிகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும், உற்சவ காலங்களில் மதுப் பாவனை முற்றாகத் தடைப்படுத்தப்பட்டிருக்கும் எனவும், பரல்களில் மதுபான வகைகளை எடுத்து வரும் முயற்சிக்கு முழுத் தடை விதிக்கப்படுவதாகவும், பொலிஸார் இது விடயத்திலும் ஏனைய குற்றச் செயல்கள் குறித்தும் தீவிர கண்காணிப்புக்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் அரச அதிபர் பணித்தார்.

உற்சவ காலத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு ஏற்படக் கூடிய நோய்கள் குறித்து கண்காணிப்பதுடன், அவசர நோயாளர்கள் எனில் அவர்களை ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லக்கூடியதாக அம்புலன்ஸ் மோட்டார் படகுடன் கடற்படைப் படகும் சேவையில் ஈடுபடுத்தப்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உற்சவ காலத்தில் தற்காலிகமாக ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்படும் வைத்திய நிலையத்துக்கு அம்புலன்ஸ்களை ஆலய வளாகத்தினுள் எடுத்துச் செல்ல முடியாதாகையால் ஆலயத்துக்குச் சமீபமாக பிரதான வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் தற்காலிக வைத்திய சாலையை அமைக்க வேண்டும் என நயினாதீவு வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் கடற்படையினரும், பொலிஸாரும் ஈடுபடுவார்கள்.

குடிதண்ணீர் விநியோகச் சேவையில் உள்ள பவுஸர் வண்டிகளின் நீர்கொள்கலன்கள் துருப்பிடித்துள்ளதாகவும், புதிய கொள்கலன்கள் தேவைப்படுவதாகவும் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் குறிப்பிட்டார்.

இந்துக்கள் மட்டுமன்றி பிற மதத்தவர்களுடன் வெளிநாடுகளைச் சேர்ந்த மக்களும் உற்சவத்தில் பெருமளவு கலந்துகொள்வதால் அனைத்து மக்களும் உரிய வசதிகளைப் பெறக்கூடியதாக சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் சிறப்பான பணியை முன்னெடுப்பதன் மூலம் உற்சவம் சிறப்பாகவும், அமைதியாகவும் இடம்பெறக் கூடியதாக முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறும் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் கேட்டுக் கொண்டார். (த-7)

## மாற்றுவலுவுடையோர் சம்மேளனத்துக்கு காணி

### கரைச்சி பிரதேச சபை உப தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 10
நல்ல நிலையில் இயங்கி தங்களுடைய செயற்பாடுகளை விஸ்தரித்து வந்த கிளிநொச்சி மாற்று வலுவுடையோர் சம்மேளனம் தற்போது முன்னைய ஆட்சியாளர்கள், அரச அதிபர்கள் செய்த தவறுகளால் நிரந்தரமான கட்டட வசதிகள் கூட அற்ற நிலையில் காணப்படுகின்றது என்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை உப தவிசாளர் நகுலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாற்று வலுவுள்ளோர் சம்மேளன திறப்பு விழாவில் கலந்த கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பரந்தனில் உள்ள விழிப்புணர்வற்றோர் சம்மேளனத்துக்கு, இப்போது இங்கே திறந்து வைக்கபட்டுள்ள மாற்று வலுவுள்ளோர் சம்மேளனம் போன்றவற்றுக்கு ஒரு நிரந்தரமான இடம் இல்லை. கிளிநொச்சியில் ஆரம்பகாலங்களில் இருந்த அட்சியாளர்கள், அரச அதிபர்கள் இவ்வாறனவர்களுக்கு செய்யவேண்டிய பொறுப்புகளில் இருந்து தவறி விட்டார்கள்.

ஆனால் இப்போது இவர்களுக்கு உரிய இடமான கிளிநொச்சி டிப்போ சந்தியில் உள்ள முக்கால் ஏக்கர் நிலப்பரப்பை இந்த மாற்று திறனாளிகளுக்கு அரச அதிபருடன் இணைந்து பெற்றுக் கொடுப்பதுடன், கரைச்சி பிரதேச சபையும் இந்த அரச அதிபருடன் இணைந்து செயற்படும். நல்ல நிலையில் உள்ள நாங்களே வாழ்வதற்கு விஸ்தாரணமான இடம் தேவை என்று கேட்கின்ற போது இந்த மாற்று திறனாளிகளுக்கு இந்த இடம் போதாது. எனவே அவர்களுக்கான உரிய இடத்தைப் பெற்று தருவதற்கான ஆவன செய்யவேண்டும்.- என்றார். (ற-21)

## கனரக வாகனங்கள் பயணிக்கும் நேரத்தைக் கட்டுப்படுத்த கோரிக்கை

வவுனியா, ஜூன் 10
பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் காலைவேளையிலும், பாடசாலை முடிவடைந்து வீடு செல்லும் நேரத்திலும் கனரக வாகனங்கள் செல்வதை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த நேரங்களில் கனரக வாகனங்கள் வவுனியாவின் பிரதான வீதிகளில் வேகமாகப் பயணிப்பதால் மாணவர்கள் வீதி விபத்துக்களை சந்திப்பதை அடுத்தே பொலிஸாரின் ஒத்துழைப்பை மாணவர்கள் கோரியுள்ளனர்.

வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் பிரதான வீதிகளில் 15 க்கு மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. ஏ-9 வீதி, ஹொறவப்பத்தான வீதி, மன்னார் வீதி, கண்டிவீதி ஆகிய பிரதான வீதிகளில் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் நேரமான 7 மணியில் இருந்து 8 வரையும் பின்னர் பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் நேரமாகிய பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 2 வரையும் கனரக வாகனங்கள் பிரதான வீதிகளில் வேகமாகப் பயணிப்பதால் மாணவர்கள் விபத்துக்களைச் சந்திக்கின்றனர்.

கடந்த ஆண்டு கனரக வாகனங்களை கண்டி வீதியிலும் ஏ- 9 வீதியிலும் மன்னார் வீதியிலும் பொலிஸார் மறித்து வைத்து மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். ஆனால் இவ்வாண்டு கடந்த சில மாதங்களாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் நேரத்திலும் வீடு திரும்பும் நேரத்திலும் கனரக வாகனங்கள் செல்ல பொலிஸார் அனுமதி அளித்திருக்கின்றமை மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த நேரத்தில் வீதி விபத்துக்களையும் காலதாமத்தையும் தவித்துக் கொள்ள கனரக வாகனங்களை குறித்த நேரத்தில் மறித்து ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-402)

## பிரேக் இல்லாத சைக்கிளால் மாணவன் விபத்து

தென்மராட்சி, ஜூன் 10
பிரேக் இல்லாத சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் அதனைச் செலுத்தி வந்த பாடசாலை மாணவனுக்கு தலையில் பலத்த காயமேற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவில் தவசிக்குளம் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி பிரசாந்த் (வயது-17) என்னும் மாணவனே காயமடைந்தவராவார்.

அங்குள்ள ஆலயமொன்றில் நடைபெற்ற விசாகப் பொங்கலுக்கு நாலா புறமுமிருந்து பறவைக் காவடிகள் வந்தவண்ணமிருந்தன. இதனைப் பார்வையிட வேகமாகச் சைக்கிளில் சென்ற வேளையில் வீதி வளைவில் எதிர்த் திசையிலிருந்து மோட்டார் சைக்கிள் வந்ததையடுத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மதிலுடன் சைக்கிள் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பிரதேச மருத்துவமனை அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ற-9)

## போபஸ்கம மாமடுவவில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

### வீதியை புனரமைத்து தருமாறு



வவுனியா, ஜூன் 10
தமது கிராமத்துக்கான வீதியை விரைவில் புனரமைக்குமாறு கோரி போபஸ்கம மாமடுவ மக்கள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். போகஸ்கம மாடுவ ஆகியபகுதிகளுக்கு செல்லும் வெளிக்குளம் பாடசாலையை அண்மித்த வீதியின் முன்பக்கம் குறுக்காக பெருமளவான மக்கள் ஒன்று கூடி பதாகைகளை ஏந்தியவண்ணம் போராட்டம் மேற்கொண்டனர். அதன்போது எந்தவொரு கனரக வாகனமும் இவ்வீதியால் செல்லவிடாது போராட்டதில் ஈடுபட்டமக்கள் தடுத்தனர். அதனால் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது.

போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த பொதுமக்கள்,

எமது கிராமத்துக்குச் செல்லும் 17 கிலோ மீற்றர் நீளமான வீதி கடந்த மூன்று ஆண்டுகளாக திருத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்ற போதும் குறிப்பிட்டளவு கிலோ மீற்றர் நீளமான வீதி மட்டும் கடந்த மூன்று ஆண்டுக்குள் மண்ணால் திருத்தப்பட்டது. 10 கிலோமீற்றருக்கு மேற்பட்ட நீள முடைய வீதி திருத்தப்படாத நிலையில் உள்ளது. அதனால் மழைகாலங்களில் இந்த வீதியால் பயணிக்கமுடியாது இவ் நாம் சிரமப்படுகின்றோம். கடந்த அரசிடம் கிடைத்த ஒத்துழைப்புக் கூட இந்த அரசால் இப்போது கிடைக்காதுள்ளது.- என்றனர். (ற-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் விகிதாசாரம் அம்பாறையில் வீழ்ச்சி

## மாவை எம்.பி. தெரிவிப்பு

நிந்தவூர், ஜூன் 10

அம்பாறை மாவட்டம் பல வழிகளிலும் பின்தங்கியுள்ளது. முஸ்லிம் மக்களின் பெரும்பான்மைத்துவம், பெரும்பான்மையினத்தவரின் குடியேற்றம் போன்றவற்றால் 21சதவீதமாகவிருந்த தமிழ் மக்கள் இன்று 18 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளனர்."

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மருத்துவர் மயில் வாகனம் தேவாராஜாவின் 31 வருடகால சேவை நலன் பாராட்டு விழா, அக்கரைப்பற்று வை.எம். சி.ஏ. மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. அதில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழர்களின் விகிதாசாரம் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழர்களாகிய நாம் எந்த நிலத்தில் வாழ்கின்றோமோ, அதை தமிழ் நிலமாகக் குறிப்பிடுவதே வரலாறாகும்.



அந்த நிலத்தை தமிழினமில்லாமல் மாற்றிவிட்டால், எங்களது ஆட்சி தமிழினத்தில் இடம்பெற முடியாது செய்து எங்களது அரசியல் அதிகாரத்தையும் நாங்கள் தீர்மானிப்பதிலிருந்து எங்களை வீழ்த்தவேண்டும் என நினைக்கின்றார்கள்.

தமிழர்களின் நிலத்தை விடுவிக்க சிலர் விரும்பவில்லை. ஆனால், தமிழ் மக்களின் ஒரு அங்குல நிலத்தையேனும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாரில்லை. அதற்காகப் போராடுவோம்" – என்றார்.

இடர் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சி.அமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அமைச்சர் கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (த)

# ஜோன் கெரியை ஏமாற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## குற்றஞ்சாட்டுகிறார் நிமல்

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை. குற்றவாளிகளான 200 புலி உறுப்பினர் கள் மட்டுமே உள்ளனர் – என நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்தை வரவேற்ற எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, இலங்கையில் அரசியல் கைதிகள் இருப்பதாகக் கூறி அமெரிக்க இராஜாங்கச் செயலாளரையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றிவிட்டது என்றும் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கையில் அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள் என்று எமது அரசின்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதைக் கூறியது. அதுமட்டுமல்ல, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி கூட இங்குவந்து நிகழ்த்திய விசேட உரையில், அரசியல் கைதிகளைப் பற்றி கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில், அரசியல் கைதிகள் எவரும் இல்லை. குற்றவாளிகளான 200 புலி உறுப்பினர்கள் மட்டுமே இருக்கின்றனர் என நீதி அமைச்சர் விஜே தாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார். இந்தக் கருத்தை நான் வரவேற்கின்றேன்.

இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளினூடாக அமெரிக்க இராஜாங்க செயலாளரே ஏமாற்றப்பட்டுள்ளார்–எனத் தெரிவித்தார். (த)

# வென்று காட்டுங்கள்

## ரணிலுக்கு எதிரான பிரேரணை தொடர்பில் அரசுக்கு விமல் சவால்

கொழும்பு, ஜூன் 10

அரசு போலிக் காரணங்களைக் கூறி திசை திருப்ப முற்படக்கூடாது. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுக்க இடமளித்து வாக்கெடுப்பில் வென்று காட்டட்டும்."

இவ்வாறு சவால் விடுத்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.

கொழும்பு, நாரஹேன்பிட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தற்போதைய நிலையில் நாட்டின் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் கையளிக்கப் பட்டுள்ளதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இதன் மூலம் தற்போதைய பிரதமர் அந்தப் பதவியை வகிப்பதற்கான சட்ட ரீதியான உரித்தைக் கொண்டிருக்கவில்லை என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளோம்.

இன்று அதற்கு முகங்கொடுக்க முடியாது, கையொப்பங்களை எண்ணிக் கதையளந்து கொண்டிருக்கின்றனர் ஒவ்வொரு குறைகளாகக் கூறிக்கொண்டு அதனைத் தவிர்க்க முனைகின்றனர். பொய்களைக் கூறிப் பிரச்சினையிலிருந்து நழுவிச் செல்ல முயற்சிக்கின்றனர். அரசமைப்புச் சபையை நியமிக்க விசேட நாடாளுமன்ற அமர் வைக் கூட்ட முடியுமானால் அதனை விட முக்கியமான பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முக்கியத்துவ மளிக்க வேண்டும்.

விசேட தினத்திலாவது நாடாளுமன்றைக் கூட்டி விசாரணை செய்து வாக்களிப்பிற்கு இடமளிக்குமாறு அரசுக்கு நாம் சவால் விடுக்கின்றோம். நாடாளுமன்ற விவகாரங்களைப் பெரும்பாலும் தீர்மானிப்பது அரச தரப்பாக இருப்பதால் இது விடயத்தில் விசேட திகதியில் நாடாளுமன்றைக் கூட்டுமாறு நாம் சபாநாயகரிடம் கோருகின்றோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று இருக்கையில் அதனை வைத்துக்கொண்டு வேறு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பது உகந்த விடயமல்ல. அது நாடாளுமன்ற சம்பிரதாயத்திற்கு முரணானது.

மீண்டும் நாம் கோருகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியினருக்குப் பயமில்லை என்றால் தயவுசெய்து விசேட தினத்தை ஒதுக்கி நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்து வாக்கெடுப்பில் வென்று காட்டுமாறு சவால் விடுக்கின்றோம்" –என்றார். (த)

# வில்பத்து விவகாரம் குறித்துப் பிரேரணை

மட்டக்களப்பு, ஜூன் 10

வில்பத்து விவகாரம் மற்றும் மன்னார் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் ஏற்பட்டுள்ள தடை தொடர்பில் எதிர்வரும் 16ஆம் திகதி கிழக்கு மாகாண சபையில் தனி நபர் பிரேரணையொன்றை முன்வைக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் நேற்றுத் தெரிவித் தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

அரசியலுக்கு அப்பால் சமூகம் சார்ந்த விடயங்களில் நான் அக்கறை செலுத்திவருகின்றேன். அந்த வகையில், மேற்படி பிரச்சினையை வடபகுதி முஸ்லிம்களின் பிரச்சினை என்று பார்க்காது, ஒட்டுமொத்த சமூகத்தின் பிரச்சினையாகப் பார்க்கின்றேன். இதனால், மேற்படி பிரச்சினை தொடர்பில் தனி நபர் பிரேரணையை கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கவுள்ளேன்' என்றார். (த)

# மஹிந்த தேசப்பிரிய பணியிலிருந்து ஓய்வு

## ஆணைக்குழு அமைக்கப்படும்வரை தற்காலிகப் பணி

கொழும்பு, ஜூன் 10

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கடந்த சனிக்கிழமை முதல் பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

கடந்த சனிக்கிழமை 60 வயதைப் பூர்த்திசெய்ததால் அவர் அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார் எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.



எனினும், 19ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டத்தின்படி தேர்தல்கள் ஆணைக்குழு அமைக்கப்படும் வரை அவர் தற்காலிகமாகத் தனது பணியில் நீடித்திருப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளார் எனவும் அது தொடர்பில் ஜனாதிபதியின் அனுமதிக் கடிதம் இன்னும் ஓரிரு தினங்களில் அவருக்கு வழங்கப்படும் எனவும் தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (த)

# மனித உரிமை விழிப்புணர்வு முகாம்

திருமலை, ஜூன் 10

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்தியக் காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்டத்தின் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது அரச அலுவலகங்களில் பணிபுரியும் அரச அதிகாரிகளின் பொறுப்பு தொடர்பான விரிவுரைகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்வி அதிகாரியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கபிலன் வில்வராஜாவினால் வழங்கப்பட்டது. (த)

# எமது பேரம் பேசும் சக்தியை ஒழிக்கப் பேரினவாதிகள் சதி

## ஜனாதிபதி இடமளிக்கக் கூடாது என்கிறார் ஹரீஸ் எம்.பி

கல்முனை, ஜூன் 10

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தேர்தல் முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வந்து சிறுபான்மை மக்களின் பேரம் பேசும் சக்தியை இல்லாமல் செய்ய எத்தனிக்கும் பேரினவாதிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடமளிக்கக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனைத் தொகுதி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள [illegible] தொழில்நுட்ப ஆய்வுகூடத்தின் [illegible] திறப்பு விழா, நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இன்று சில பேரினவாத கட்சிகள், 20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து வடக்கு–கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து அவர்களின் பேரம் பேசும் சக்தியை இல்லாமல் செய்ய முயற்சிக்கும் நடவடிக்கையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இதற்கு எதிராகச் சிறுபான்மைக் [illegible] வின் [illegible] கைகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களை முன்னெடுத்துச் செல்வதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முக்கிய பங்கை வகிக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் அந்தஸ்தையும் அதிகாரத்தையும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவே இத்தேர்தல் முறையில் மாற்றத்தைக் கொண்டு வருகின்றோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால், தொகுதிவாரி தேர்தல் முறை மூலம் தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமித்தாலும் அவர்களுக்கான கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் என்பன சட்ட ரீதியாக வழங்கப்படவில்லை. எனவே, ஜனாதிபதி இத்தேர்தல் முறை மாற்றத்தினை கொண்டுவர முனைவதை சிறுபான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை–என்றார். (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினரின் செயற்பாடு மகிழ்ச்சியளிக்கும். தொழில், வியாபாரத்தில், அதிர்ஷ்டவசமாக வருமானம் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சி குறித்த பேச்சில், முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**இடபம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான வருமானம் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான பொருளை வாங்குவீர்கள்.உறவினர் ஒத்துழைப்புகிடைக்கப்பெறுவீர்கள்.

**மிதுனம்**: தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள்.

**கடகம்:** எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில், ஆதாயத்துக்கு குறைவிருக்காது. பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள் ஊக்கத்துடன் படிப்பர்.

**சிங்கம்**:ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபட்டு இலாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**கன்னி**: அன்றாடப் பணிகளில் ஆர்வம் அதிகரிக்கும். தொழிலில், சாதனை படைக்கும் எண்ணம் மேலோங்கும். அதிர்ஷ்டவசமாக பணம் வர வாய்ப்புண்டு. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

**துலாம்**: தொழில், வியாபாரத்தில், விரிவாக்க முயற்சி வெற்றி பெறும். இலாபம் அதிகரிக்கும். புத்திரரின் எதிர்கால நலனில், அக்கறை கொள்வீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**விருச்சிகம்**: எதிர்கால நலன் குறித்து ஆலோசிப்பீர்கள். தொழிலில், தடைகளைச் சந்தித்தாலும், இலாபத்துக்கு குறைவிருக்காது. மனைவி வழி உறவினர்களால் உதவியுண்டு. மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**தனுசு**: மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை படைப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நடக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மகரம்**: பிறரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம். திடீர் செலவால், சேமிப்பு கரையும். தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் கிடைக்கும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**: உடல் நலனில் கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய ஒப்பந்தம் மூலம் வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும்.

**மீனம்**:பணிகளைச சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். நண்பர்களின் உதவியைக் கேட்டுப் பெறுவீர்கள். தொழில், வருமானத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். திடீர் பயணத்தால், சந்தோஷமான அனுபவம் பெறுவீர்கள்.




## யூடியூப்பிலிருந்து விலகிய விஜய் தொலைக்காட்சி

இதுவரைவிஜய்தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அனைத்து நிகழ்ச்சிகளையுமே யூடியூப்பிலும் கண்டுகளிக்கலாம். ஆனால், இப்போது விஜய் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை யூடியூப்பில் பார்க்க முடியாது.

காரணம், ஹொட்ஸ்டார். கொம் என்றொரு இணையத்தளத்தை தொடங்கியுள்ள விஜய் தொலைக்காட்சி அதன் மூலம் மட்டுமே தமது நிகழ்ச்சிகளை பார்க்க வழி செய்திருக்கிறது. ஆனால் நீண்டகாலமாக யூடியூப்பில் விஜய் நிகழ்ச்சிகளைப் பார்த்து வந்த உலக தமிழ் ரசிகர்களுக்கு இந்தத் தகவல் தெரியாததால் இப்போது விஜய் தொலைக்காட்சியின் பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

அத்தோடு, விடயம் தெரிந்து ஹொட்ஸ்ரார். கொமில் வந்து நிகழ்ச்சிகளை பார்ப்பவர்களால் அந்த நிகழ்ச்சிகளை டவுன்லோடு செய்யவும் முடியாதாம். இதனால் திரும்பத் திரும்ப வரும் நேயர்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகின்றது.

மேலும், யூடியூப்பில் இருந்து விஜய் விலகியதற்கு காரணம் பற்றி விசாரித்தால், இந்த ஹொட்ஸ்ரார்.கொமில் நிகழ்ச்சிகளை பார்க்க வைப்பதால் விஜய் தொலைக்காட்சிக்கு பெரிய அளவில் வருமானம் கிடைக்கிறதாம்.

# வில்லனாக அவதாரம் எடுக்கும் கமல்

"தூங்காவனம்" படத்தைத் தொடர்ந்து இந்தியில் படம் இயக்கி நடிக்கப் போவதாக அறிவித்துள்ளார் கமல்ஹாசன். த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடிப்பில் கமல்ஹாசன் கதாநாயகனாக நடித்து வரும் படம் தூங்காவனம். இந்தப் படத்துக்கான படப்பிடிப்பு தற்பொழுது ஹைதராபாத்தில் நடந்து வருகிறது.

கமல்ஹாசனின் உதவியாளரான ராஜேஷ் இந்தப் படத்தை இயக்கி வருகிறார், ஜிப்ரான் இசையமைக்கிறார். இந்தப் படத்தை முடித்தகையுடன் இந்தியில் படம் இயக்கவிருக்கிறார் கமல். அமர் ஹெய்ன் என்று பெயரிடப்பட்டுள்ள இந்திப்படம் தமிழில் ஏற்கெனவே படமாகவிருந்த "தலைவன் இருக்கிறான்" என்பதன் இந்தி வடிவம்.சைப்அலிகானைமனதில்வைத்தேபடத்தின் கதையை எழுதிவருவதாகவும் அவருடன் பேச்சு நடத்தி வருவதாகவும் கமல் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்லாமல் இந்தப்படத்தில் வில்லன்



கதா பாத்திரத்தில் நடிக்கப் போவதும் கமல்தானாம். அரசியல் த்ரில்லராக அமையும் இந்தப் படத்தை டுபாய், லண்டன், டில்லி போன்ற இடங்களில் படமாக்க கமல் முடிவு செய்துள்ளார்.

# விமானத்தை நிறுத்திய தேனீ

இங்கிலாந்தில் சவுதாம்ப்டன் என்ற இடத்தில் இருந்து டப்ளின் நகருக்கு 40 க்கும் மேற்பட்ட பயணிகளுடன் விமானமொன்று புறப்பட்டது. வானத்தில் அந்த விமானம் பறந்து கொண்டு இருந்தபோது, விமானத்தின் வெளிப்பாகத்தில் இருக்கும் ஒரு கருவிக்குள் தேனீ ஒன்று புகுந்து இருந்தமை தெரியவந்தது.

உடனே அந்த விமானம் மீண்டும் சவுதாம்ப்டனுக்குத் திரும்பிக் கொண்டு வரப்பட்டு பத்திரமாக தரை இறக்கப்பட்டது. பின்னர் விமான பொறியி



யலாளர்கள் வந்து அந்த கருவிக்குள் இறந்த நிலையில் கிடந்த தேனீயை அப்புறப்படுத்தினார்கள். இதனால் அந்த விமானம் தாமதமாக புறப்பட்டுச் சென்றது.

விமானத்தின் கருவியில் சிறிய பூச்சி இருந்தாலும் விமானம் விபத்துக்குள்ளாக வாய்ப்பு இருப்பதால் அந்த விமானம் திரும்பிக் கொண்டு வரப்பட்டது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.




## பேஸ்புக் தத்துவம்...

போதை என்பது சாணியை மிதிப்பது போல...
தண்ணி பட்டா போயிடும்.... இது நான் போதையில் சொன்னது ....!

ஆனா பொண்ணுங்களைக்
காதலிக்கிறது ஆணி மிதிப்பது போல...
காயம் ஆறினாலும் தழும்பு போறதில்லை....இதுமட்டும் என்ன கீதையிலா
சொன்னது. இதுவும் நான் போதையில் சொன்னது தான்....!



# அளவுக்கு மீறிய ஆசை உயிரைப் பறித்தது

அங்கீகரிக்கப்படாத மருத்துவரிடம் தனது பிருஷ்டப் பகுதியை பெரிதாக்குவதற்கான சிகிச்சை பெறச் சென்ற பெண்ணொருவர், சிகிச்சையின் போது மூச்சுத் திணறி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்றுள்ளது.

மேரிலாண்ட்டைச் சேர்ந்த கெல்லி மேயூ என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது நண்பியொருவர் மூலம் அங்கீகரிக்கப்படாத பெண் மருத்துவரிடம் தனது பிருஷ்டப் பகுதியை பெரிதாக்குவதற்கான சிகிச்சையைப் பெறச் சென்றுள்ளார். இதன் போது அவர் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகி சுய உணர்வை இழந்துள்ளார். இதனையடுத்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரால் சைக்கிள்கள் மீட்பு

பருத்தித்துறை, ஜூன் 10

பருத்தித்துறை பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் இரண்டு லுமாலா சைக்கிள்கள் பருத்தித்துறைப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ரோந்துக் கடமையில் பொலிசார் நேற்று முன்தினம் ஈடுபட்டபோதே ஆண்களுக்கான சைக்கிளும், பெண்களுக்கான சைக்கிளும் பொலிஸாரல் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் உரிமையாளர் இருப்பின் சைக்கிள்களை ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு மன்றின் பதிவாளர் அறிவித்துள்ளார். (த–109)

## உப்பளம் அமைப்பது தொடர்பில் ஆராய்வு

திருமலை, ஜூன் 10

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சின்னக்கரச்சை களப்பில் உப்பளம் ஆரம்பிப்பதற்கு கடந்த பல வருடங்களாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கும் உப்பள உரிமையாளர்களுக்கும் இடையில் கும்புறுப்பிட்டி கிராம பொதுக்கட்டடத்தில் கலந்துரையாடலொன்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குச்சவெளி பிரதேச உதவி பிரதேச செயலாளர் எஸ்.அமலினி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கும்புறுப்பிட்டி வடக்கு மற்றும் கிழக்கு, நாவற்சோலை, இறக்ககண்டி ஆகிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்கள், சிறுகடல் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றை சேர்ந்தோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொதுமக்கள், ஏற்கெனவே குச்சவெளிப்பிரதேச செயலகப் பிரிவில், பெரியகரச்சை களப்பு தனியார் உப்பளக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டது. அந்த நிலையில், பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இதன்போது, ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில்வாய்ப்பு தருவதாக வாக்குறுதி வழங்கிய அக்கம்பனியினால் எமக்கு எந்தப் பயனும் இல்லை. 650 ஏக்கர் மட்டுமே அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் 1,000 ஏக்கருக்கும் அதிகமாக நிலங்களை எடுத்துள்ளனர்.

40 பேர் மட்டுமே இந்தக் கம்பனியில் பணியாற்றுகிறார்கள். இவ்வாறான நிலையில் மேலும் நிறுவனத்துக்கு சின்னக்கரச்சை களப்பை வழங்குவதன் மூலம் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனத் தெரிவித்தனர்.

இப்பகுதியில் உப்பளம் அமையுமானால் நிலத்தடி நீர் உவர் தன்மையடையும். மேலும் கடல் உயிரினங்களான நண்டு, இறால் போன்றவற்றின் உற்பத்தி இல்லாது போகும். விவசாயக் காணிகள் பாதிக்கப்படும். கால்நடைகளுக்கு நீர் இல்லாது போகும். மேலும் பெரிய கரச்சையில் பாதிக்கபட்ட மீனவர்கள் சின்னக்கரச்சையில் தொழில் செய்கிறார்கள். அவர்களும் பாதிக்கப்படுவார்கள். எனவே, சின்னக்கரச்சை உப்பளத்தை அவ்விடத்தில் நிறுவாது அம்மக் களின் பாரம்பரிய தொழிலை செய்ய அனுமதிக்குமாறு தெரிவித்தனர். (த)

## நெல்லியடி கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை தெரிவில் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 10

கட்டைவேலி–நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை தெரிவின்போது கடும் போட்டி நிலவியதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் பொதுச் சபை கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடியது. பொதுச் சபைக் கூட்டத்தில் 92 வரையிலான உறுப்பினர்கள் மிக ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பொதுச் சபைக் கூட்டத்தில் புதிய இயக்குநர் சபையை தெரிவு செய்வதில் முதலில் கடும் போட்டி ஏற்பட்டது. போட்டியை அடுத்து உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் மூலம் இறுதியில் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த ஏழு பேர் கொண்ட இயக்குநர் சபையின் தலைவராக கே. கந்தசாமி தெரிவானார். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் சபையில் அங்கம் வகிப்போரில் அதிகமானோர் புதியவர்கள்.

இதேவேளை, பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை தெரிவிலும் கடும்போட்டி நிலவியது குறிப்பிடத்தக்கது. (த–17)

## 100 நாள் வேலைத்திட்டத்தில் கூட்டுறவுத் தொழில் வங்கி

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் 100 நாள் வேலைத்திட்டத்தின் போது கூட்டுறவுத் தொழில் வங்கி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தக் கூட்டுறவுத் தொழில் வங்கிக்கு இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்தார்.

கூட்டுறவுத் துறைக்கு வேலை தேடி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் விரைவில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். இதில் தகுதியானவர்களுக்கு அதற்கேற்ற வகையில் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பணியாளர் வெற்றிடமாகவுள்ள சங்கங்களில் இவர்களுக்குத் தகுதிக்கு ஏற்ற வகையில் நியமனம் வழங்கப்படும்.

சங்கங்களின் எதிர்கால நடவடிக்கை, அதன் அபிவிருத்தி போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சங்கங்களின் பதவிகளில் இருக்கும் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தக் கூட்டுறவு தொழில் வங்கிக்கு இதுவரைக்கும் 200க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். (த–17)

## வலி.கிழக்குப் பிரதேசத்தில் பாதீனியச் செடி பெருக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வலி.கிழக்குப் பிரதேசத்தில் பாதீனிய செடிகள் பெருக்கம் மீண்டும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடந்த மாதத்தில் பெய்த கோடை மழையை அடுத்து பாதீனியங்கள் முளைத்துப் பெருகிக் காணப்படுகின்றன.

கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நிலவிய கடும் வறட்சியினால் இந்த பாதீனியங்கள் ஓரளவு வெயிலில் காய்ந்து அழிந்து காணப்பட்டன. பாதீனியங்கள் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து மீண்டும் பெருகியுள்ளன.கூடுதலாக நீர்வேலி மேற்குப் பகுதி யில் உள்ள விவசாய நிலங்களில் பாதீனியம் பெருகிக்காணப்படுகின்றது. (த–17)

## அம்பாறையில் 1103 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேறவில்லை

அம்பாறை, ஜூன் 10

போர் முடிந்து ஆறு வருடங்களான போதிலும், அம்பாறை மாவட்டதில் 1,103 குடும்பங்கள் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாது வாழ்ந்துவருவதாக கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ரி.கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள அறிக்கையில், திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாகாமத்தில் 126 குடும்பங்களும், காஞ்சிரங்குடாவில் 68 குடும்பங்களும், கஞ்சிகுடியாற்றில் 244 குடும்பங்களும், தங்கவேலாயுதபுரத்தில் 270 குடும்பங்களும், வன்னியிலிருந்து அம்பாறை மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்த 63 குடும்பங்களுமாக 771 குடும்பங்களும் மீள்குடியேற்றப்படாதுள்ளன.

மேலும், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரத்தில் 108 குடும்பங்களும், பொத்துவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கனகர் கிராமத்தில் 178 தமிழ், சிங்கள குடும்பங்களும், நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சவளக்கடை, கம்பிக்காலையில் 46 குடும்பங்களும் மீள்குடியேற்றப்படாதுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(த)

## காட்டுமலைக் கந்தசாமி கோயிலுக்குச் சப்பரம்

அச்சுவேலி நாவலம்பதி காட்டு மலைக் கந்தசாமி கோயிலுக்கு பல லட்சம் ரூபா செலவில் புதிய சப்பரம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

சப்பர நிர்மாண ஆச்சாரி திருநெல் வேலி பத்மநாதன் சுரேந்திரன்(இந்திரன்) குழுவினர் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக வீதி உலா வருவதற்கு ஏற்றவகையில் கலை மரபுகளுடன் கூடிய வகையில் இதனை நிர்மாணித்து வருகின்றனர். (த–11)

## விசேட தேவையுடையோர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கவும்

விசேட தேவையுடையோருக்கான தொழிற்பயிற்சி வழங்கு வதற்காக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையானது நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் பயிற்சியைப்பெற விரும்பும் நபர்கள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தமது சுய விவரத்தை மாவட்ட அலுவலர், நைற்றா, இல. 44 சேமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுள்ளார். (த–4)

### கண்ணீர் அஞ்சலி



வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி தர்மதுர்க்கா துசிதன் அவர்களின் பாசமிகு தந்தை


**மாரிமுத்து தர்மராசா**

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

(60829) (10.6.3)

### கண்ணீர் அஞ்சலி



கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபையில் உறுப்பினராக இருந்து ஆலயத்திற்கு பலசேவைகள் புரிந்த கைதடி கிழக்கைச் சேர்ந்த

**செ. பொன்னுத்துரை**

அவர்கள் 08.06.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய வேண்டுமென எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை வேண்டுவதோடு, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி (60823)

கைதடி வீரகத்திப் பிள்ளையார்கோயில் (45.5.3)
முதலாய கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலனசபை, கைதடி.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தம்பிராசா தசராஜன் (ராதா)**

(ஆட்டோ சாரதி)



ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்தமுகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
அழிந்து போகாது அப்பா!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
24, இராஜேந்திரா வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


பிறப்பு 06.06.1960 இறப்பு 10.06.2014

(60815) (45.5.3)

### விழி நீர் சொரியும் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**செல்லன் சின்னராசா (கிப்பி)**



தூக்கிச் சுமந்த உம் கைகளும் – எம்
துக்கம் தணித்த உம் தோள்களும்
தூரம் ஆகிப் போனதே அப்பா....
துயரம் நெஞ்சை வாட்டுதே அப்பா
நாம் உயர வாழ்ந்தீர்கள் – இன்று
நாம் உயர்ந்த வேளை நீங்கள்
வீழ்ந்து விட்டீர்கள்
காலனின் கொடும் சதியா ?
இல்லை நம் விதியா ?
விழியில் விரியும் உங்கள் நினைவில்
இதயம் எரிந்து வேகுகின்றோம்
கண் இமை சுட நீர் சிந்துகின்றோம்.
நான்காண்டுகள் இல்லை எம் ஆயுள்
முடியும் வரை அர்ச்சித்து நிற்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் உயிருடன் கலந்திருக்கும்
மனைவி - செல்வி(வளி)
பிள்ளைகள்- அனு(ரிரான்ஸ்), சிந்து, வினோ
மருதங்கேணி தெற்கு,
தாளையடி. (41175)(5,9)

மண்ணில் 22.07.1960 விண்ணில் 06.10.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தியுள்ளது ஐ.ஓ.சி.

கொழும்பு, ஜூன் 10
இந்தியன்ஒயில்கம்பனியின்(ஐ.ஓ.சி.) எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகம் மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.
இவ்வாறு எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் குறுஞ்செய்திகள் (எஸ்.எம்.எஸ்.) ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்நிறுவனத்தின் முகவர் நிலையங்களுக்கு இதுவரை மாதாந்தம் தலா 25 பவுஸர்கள் எரிபொருள் வழங்கப்பட்டு வந்தது. எனினும், இத்தொகை மாதாந்தம் 12 பவுஸர்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாக அந்தக் குறுஞ் செய்திகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.
இவ்வாறு எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கான அனுமதியை ஐ.ஓ.சி. நிறுவனம் மின்சக்தி எரிசக்தி அமைச்சிடமோ அல்லது நிதியமைச்சிடமோ பெறவில்லை என அமைச்சின் உயரதிகாரியொருவர் சுட்டிக்காட்டினார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐ.ஓ.சி. நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர், தங்களது நிறுவனத்தில் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் நிலவவில்லை எனவும், விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறுஞ்செய்திகள் எதுவும் முகவர்களுக்கு அனுப்பப்பட வில்லை எனவும் கூறினார். (த)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### லெட்சுமண ஆச்சாரியார் பக்கீர்சாமி (சிங்கர்)



யாழ். வண்ணார்பண்ணை சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லெட்சுமண ஆச்சாரியார் பக்கீர்சாமி 08.06.2015 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லெட்சுமண ஆச்சாரி -முல்லையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா ஆச்சாரி - இளையூபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜமணியின் அன்புக் கணவரும் L.P. ராஜாவின் அன்புத் தந்தையும், கீதாவின் அன்பு மாமனும் (கனடா), ரதீகா, ஜாதவன், சாம்பவி ஆகியோரின் அப்பப்பாவும், அன்னலட்சுமி (கனடா) காலஞ்சென்ற வேணுகோபால் ஆச்சாரியார் மற்றும் அம்புஜம், கமலவல்லி, கெங்காதரன் ஆச்சாரியார், இராஜேஸ்வரி, ஜெகநாதன் ஆச்சாரியார் (வவுனியா), மகேஸ்வரி( ஜேர்மனி), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை ஆச்சாரியார், துரைச்சாமி ஆச்சாரியார் மற்றும் இராமையா ஆச்சாரியார், கந்தையா ஆச்சாரியார், கணபதிப்பிள்ளை ஆச்சாரியார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2015) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(அன்னாரின் மறைவையொட்டி துக்க அனுஷ்டிப்புகள் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள அவரது சகோதரனின் இல்லத்தில் நடைபெறும்)

314, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8415

(60826) (45.6.3.7)

தகவல்:
கலாபூஷணம் கெங்காதரன் ஆச்சாரியார்,
ஜெகநாதன் ஆச்சாரியார்,


# ரணிலுக்கு எதிரான தீர்மானம் தற்போது ஏற்புடையது அல்ல

## கூறுகிறார் அஸ்கிரிய பீடாதிபதி

கொழும்பு, ஜூன் 10
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தற்சமயத்தில் ஏற்புடையது அல்ல என அஸ்கிரிய பீடாதிபதி கலகம ஸ்ரீ அத்தஸ்சி தேரர் தெரிவித்துள்ளார்.
அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல நேற்றுக் காலை தேரரைச் சந்தித்து ஆசி பெற்றபோதே அவர் இதனைக் தெரிவித்ததாக அமைச்சர் ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.
பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்டவர்கள் தொடர்பில் அவர் கவலை வெளியிட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.
இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலான விடயங்களுக்கு அரசு அச்சம் கொள்ளவில்லை எனவும், தற்போதைய நாடாளுமன்றம் செல்லுபடியற்றது எனவும், மக்கள் பொதுத் தேர்தலையே எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.
இந்தப் பிரேரணையில் கைச்சாத்திட்ட பலர் தாம் கைச்சாத்திட்ட போதிலும் தொடர்ந்து எங்களுடனேயே செயற்படப்போவதாக அமைச்சர் மேலும் கூறினார். (த)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சார்த்திகள் அ. அட்டைக்கு 15 வரை விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 10
இவ்வருடம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாண வர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டுமென ஆட்பதிவுத் திணைக்களம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.
இவ்விண்ணப்பங்களை கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல் கொடுத்திருந்தபோதும் பெரும்பாலானவை உரிய காலத்தில் வந்து சேராமையால் இறுதித்தினம் இம்மாதம் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஆள்பதிவுத் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.
இதுவரை சுமார் மூன்று இலட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் மேலும் ஒரு இலட்சம் விண்ணப்பங்கள் வரவேண்டியுள்ளதாக வும் இவ்வருடம் ஒக்டோபர் 31ஆம் திகதியன்று 16 வயதை அடையும் மாணவர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டைகளைப் பெற வேண்டியது கட்டாயம் எனவும் அவர் கூறினார்.
பாடசாலை அதிபர்களுக்கு இவ் விண்ணப்பங்களை அனுப்புவதற்குப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தபோதும் அவர்கள் அக்கறை காட்டாத காரணத்தால் இறுதி நேரத்தில் கடும் நெரிசல் ஏற்படும் எனவும் மாணவர்கள் மேலதிக தொகையைச் செலுத்தி ஒரு நாள் சேவையைப் பெறவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படுமெனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார். (த)


## மரண அறிவித்தல்



தோற்றம்
10 . 10 . 1926

மறைவு
06 . 06 . 2015

### திருமதி வள்ளியம்மை (தங்கம்மா) கிருஷ்ணர்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மை கிருஷ்ணர் (06.06.2015) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதவர் - பொன்னு தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாரிமுத்து தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணர் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவராஜமலர் மற்றும் தவமலர், முரளீதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிகலாவின் சிறியதாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் விக்னேஸ் வரன், அருந்ததி ஆகியோரின் மாமியும், மதி, பாஸ்கரன், வாசுகி, ஜெயராஜா, கோபிகா, கோகுலன், காலஞ்சென்ற சஞ்சீவன் மற்றும் ராஜி, அஜி, புருசோத்தமன், றீகன், சாலினி ஆகியோரின் பேர்த்தியும், சிந்துஜா, வர்சிகா, விக்டர், சாரு, துஜானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11.06.2015) வியாழக்கிழமை அவரது சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிந்துபவனம்"
சிவன்கோயில் வீதி,
சித்தன்கேணி.

(60825) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.
077 729 7514


# இலங்கையர் தொடர்பான தகவல்களை இந்தியாவுடன் பகிர்ந்துள்ளது மலேசியா

கொழும்பு, ஜூன் 10
தீவிரவாத சதித்திட்டங்களில் ஈடுபட்டதாக மலேசியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையர் ஒருவர் தொடர்பிலான தகவல்களை இந்தியாவுடன் மலேசியா பகிர்ந்துகொண் டுள்ளது.
2012ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பரஸ்பர சட்ட உதவித் திட்டத்தின்கீழ் இந்தத் தகவல் பரிமாற்றம் இடம்பெற்றுள் ளது.
இலங்கையரான 47 வயதுடைய மொஹமட் ஹுசைன் மொஹமட் சுலைமான் என்பவரே மலேசியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டி ருந்தார்.
தமிழகத்தில் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டதாகசந்தேகிக்கப்பட்டுஇந்திய பொலிஸ் துறையினரால் கைதுசெய்யப்பட்ட இவர் சகீர் ஹுசைன் என்பவருடன் தொடர்பு கொண்டிருந்தார் என விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது.
சகீர் ஹுசைன், பாகிஸ்தான் உளவுப் பிரிவின் பணிப்புரையின் அடிப்படையில் செயற்பட்டு வந்ததாகவும். இவருடன் சேர்ந்து மலேசியாவில் கைதுசெய்யப்பட்ட மொஹமட் ஹுசைனே, தமிழகத்தில் தாக்குதல் களை நடத்த சிலரை ஏற்பாடு செய்ததாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
இந்நிலையில், விசாரணைகளின் பின்னர் சுலைமான் இலங் கைக்கு நாடு கடத்தப்பட்டார்.
எனினும், இவர் தொடர்பான விசாரணைத் தகவல்களை இந்தியாவுடன் பரிமாறிக்கொள்ள இதுவரை மலேசியா மறுத்துவந்தது.
இறுதியாக இது தொடர்பிலான தகவல்களை மலேசியா, இந்தியாவிடம் வழங்கியுள்ளதாக இந்தியாவின் பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. (த)

# கொழும்பில் வெற்றிலை எச்சில் உமிழ்ந்தால் சட்ட நடவடிக்கை

கொழும்பு மாநகர எல்லைக்குள் உள்ள வீதிகளில் வெற்றிலை எச்சிலை உமிழ்ந்து சுற்றாடலை அசுத்தப்படுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கொழும்பு மாநகரசபையின் பிர தம பொதுசன வைத்திய அதிகாரி டாக்டர் ருவன் விஜயமுனி தெரிவித் திருக்கிறார்.
இலங்கையில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் பகிரங்க இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு ஐந்து ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. எனினும், அந்த அபராதத் தொகையை இன்றைய நிலைக்கேற்ப அதிகரிக்கவேண்டிவரும் எனவும் அவர் கூறினார்.
பகிரங்க இடங்களில் எச்சிலைஉமிழ்வதனால் சயரோகம் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் பரவுவதாகத் தெரிவித்த டாக்டர் ருவன் விஜய முனி, அவ்வாறு செய்பவர்களைக்கைதுசெய்துசட்ட நடவ டிக்கை எடுப்பதற்காக மாநகரசபை அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் இவ்வாரத்திலிருந்து பணியில் ஈடு படுத்தப்படுமெனவும் கூறினார். (த)


## மரண அறிவித்தல்

### சிவராசா தவக்குமார்



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வனுவில் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சிவராசா தவக்குமார் நேற்றுமுன்தினம்(08.06.2015) ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவராசா- மல்லிகாதேவி தம்பதியின் அன்பு மகனும் கௌசலாவின் அன்புக் கணவரும் நிக்ஸனின் பாசமிகு தந்தையும் தமயந்தி பற்மநிதி சர்மிளா (சிறுவர் நன்னடத்தைப் பிரிவு நீதிவான் நீதிமன்றம் சாவகச்சேரி),சயந்தன்(டிறிபேக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வரத்தினம் - காலஞ்சென்ற சறோஜினி தம்பதியின் அன்பு மருமகனும் தீபாகரன்,காயத்திரி, கஜேந்தினி,பிரதீபன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.06.2015) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

வனுவில் வீதி,
சாவகச்சேரி.

(சி.17606) (45.5.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளின் பாதுகாப்புக்கு மீண்டும் ரி-56 ரக துப்பாக்கி

கொழும்பு, ஜூன் 10
நாடெங்குமுள்ள சிறைச்சாலைகளில் பாதுகாப்புப் பணிகளுக்காக மீண்டும் ரி–56 ரகத் துப்பாக்கிகளை வழங்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத் தலைமையகம் தெரிவித்திருக் கிறது.

அதற்கமைய இவ்வார இறுதிக்குள் சிறைச்சாலைகளின் பாதுகாப்புப் பணிகளுக்காக 450 ரி–56 ரகத் துப்பாக்கிகள் கிடைக்கவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹண புஷ்பகுமார தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் நடந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து சிறைகளில் பயன்படுத்தப்பட்ட ரி–56 ரகத் துப்பாக்கிகள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சினால் திரும்பப் பெறப்பட்டன. அதற்குப் பதிலாக ரிப்பீட்டர் ரகத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. எனினும், அவற்றுள் பெரும்பாலானவை அவசரப் பணிகளுக்குப் பொருத்தமில்லாத காரணத்தால் மீண்டும் ரி–56 ரகத் துப்பாக்கிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரோஹண புஷ்பகுமார தெரிவித் தார்.

பெறப்பட்ட ரி–56 ரகத் துப்பாக் கிகளை மீண்டும் வழங்குமாறு முன்னைய அரசிடம் பல முறை வற்புறுத்தியபோதும் அது கைகூடவில்லை எனவும் தற்போதைய அரசு அந்த வேண்டுகோளை நிறைவேற்ற முன் வந்தது பாராட் டத்தக்க விடயம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (த)

# கைதான 5 பிக்குமாருக்கு நீதிமன்று பிணை அனுமதி

கொழும்பு,ஜூன் 10
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வெளியே கடந்த மாதம் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கைதான பிக்குமார் ஐவரையும் நேற்று முன்தினம் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கடந்த மே மாதம் 29 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு வெளியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டபோது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் குறித்த பிக்குகள் ஐவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டபோது, பிக்குமார்கள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணியின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய பிக்குமார் ஐவரையும் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். (த–ரி)

**வேலை வாய்ப்பு**
யூஸ் பைக்கற்றுக்களை பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
அம்மா யூஸ்
28,வேம்படி, வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 758 7079, 077 711 1530

**வேலைஆள்கள் தேவை**
கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள எமது புடைவை அங்காடிக்கு ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை.
தொடர்பு: 021 222 8383 (60806) (45.3.7)

**கணினித் தட்டெழுத்தாளர் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சட்டத்தரணி அலுவலகம் ஒன்றுக்கு தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை வாய்ந்த கணினித் தட்டெழுத்தாளர் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 664 9019
021 321 5081 (60455) (3.5)

**TV கள் மலிவு விற்பனை**
SONY Wega Flat TVகள் 14"-6000/=, 21"-10000/=, DVD-3250/=, கசெற் ரேடியோ 3000/=Box வகைகள், குளிர்சாதனப் பெட்டிகள்- 19500/=
தொடர்பு: 077 044 0570 (60807) (45.3.7)
சோனிரேற்சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

**இறைச்சிக்கோழி விற்பனை**
புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும்,மிகக்குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டது 450/= 10 Kg இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 430/= மட்டும்.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை, (60538)
தொ.பே. 077 868 9500 (45.3.7)

**USA VISA**
• ஆகக் குறைந்த தகமை O/L • குறைந்த செலவில் விண்ணப்பிக்கலாம் • Part Time Job - Star Hotel களில் வேலைவாய்ப்பு College ஆல் பெற்றுத்தரப்படும்
max adz
**ITALY VISA**
• 15 நாட்களில் Visa க்கு விண்ணப்பிக்கலாம்
• குறைந்த செலவில் விண்ணப்பிக்கலாம் • ITALY யின் முக்கிய இடங்களை சுற்றிப்பார்ப்பதற்கான Visa
KAVISKA - 0778850315
MEERA - 0770085028
RATHA - 0773251673
MILLENNIUM VISA EDUCATIONAL SERVICE
435/1/15,FOUNTAN PLAZA,MARADANA,COLOMBO 10
TEL 0112675061. EMAIL mvc2020@yahoo.com



**மதுரா அழகு கலைப் பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 13.06.2015
பயிற்சி காலம்: ஒரு மாதம்
பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சியில் இணைய விரும்புவோர் முன்னர் பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.
நிறைந்த பயிற்சி குறைந்த கட்டணம் பயிற்சிக் கட்டணம் ரூபா 9000.00 மட்டுமே
பயிற்சி விபரம்: மணப்பெண் அலங்காரம் 6 வகை மேக்கப் 4, பேசியல் 20, சாறி டிறெஸ்ஸிங் 15, ஹெயா கலறிங், கேளிங், ஸ்ரெய்ட்னிங், பேமிங், ஸ்பாட் றீட்மென்ட், ஹெறட் ஓயில் மசாஜ், பெடிக்கியூர், மெனிக்கியூர், திரெடிங், வக்ஸிங், அடி சனல் ஸ்ரோக் மசாஜ், நெயில் ஆட், பிம்பிள்ட்றீட்மென்ட், ஹெயா கட்டிங், ஹென்னட் றீட்மென்ட், அல்ரா சொனிக, கல்வனிக் பேசியல், பிளக்ஸ்பொட் ட்றீட்மென்ட், ஹெயா ஸ்ரெயில் 10 ஆகியன.
மகளிர் மட்டும்
தையல், கேக் ஐசிங், காண்ட்வேர்க, சாறிவேர்க பயிற்சிகளும் நடைபெறுகின்றன.
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். (எயாபிரஸனர் மேக்கப்) மணப்பெண் அலங்காரம் 15000/= மட்டுமே.
0779362642
பழைய வீதி, கோப்பாய்.

**வாடகைக்குத் தேவை**
யாழ் நகர்ப்பகுதியில்,
(1) நவீன சந்தைத் தொகுதியில் ஒரு கடையும்,
(2) கடையுடன் கூடியவீடும்,
(3) 2 அல்லது 3அறை கொண்ட வீடும் தேவை.
(60805) (3.5) தொடர்பு : 077 593 0335

**JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING 2015**
NOTICE OF MEETING
Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association which was scheduled on 12th June 2015(Friday) at 11.00am is postponed due unavoidable circumstances and new date will be notified soon. sorry for the inconvenience.
By order of the committee of Management,
Hony. Secretary.
9th June 2015
(60828)(9.3.6)

**CHURCH OF THE AMERICAN CEYLON MISSION**
POST OF FINANCE MANAGER
To Manage the Finance of a non Profit Organization.
Qualification: AAT, CIMA, Chartered. Accountancy.
Experince : 05 - 10 Years Depending of Qualification
Salary : Negotiable
Location : Jaffna
APPLY TO
TREASURER - CACM OR BY. email to
Vmilhiran@gmail.com
Asia House.
Maruthanarmadam,
Chunnakam.
To Reach on or befor 30 June 2015
(60821)(9.3.6)

**வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி கிளைக்குழு தெரிவிற்காக வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர் பட்டியல்**
31.05.2015 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பின் பிரகாரம் அங்கத்தவராக இணைந்து ஒரு வருடம் பூர்த்தி செய்து வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் கிளைகளிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படுகின்றது. இவற்றில் ஏதேனும் திருத்தங்கள், மாற்றங்கள் ஆட்சேபனைகள் இருப்பின் 20.06.2015 ஆம் திகதிக்கு முன்னர் சங்க செயலாளருக்கு எழுத்தில் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.
நீர்வேலி,
04.06.2015 (சி.17607) (45.3.7)
செயலாளர் (பதில்)
நெறியாளர்குழு கட்டளைப்படி




இலங்கை, இந்தியா கூட்டிணைந்த
சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை பயிற்சிப்பட்டறை 2015
இரு நாட்டு சிறப்பு வல்லுநர்கள்
ஒரே மேடையில் பகிர்ந்து வழங்கும்
இந்த அரிய அனுபவத்தை தவற விடாதீர்கள்.
இந்தியாவில் முன்னணி அழகுக்கலை நிபுணர்,
ஆர்த்தி அமரேந்திரா மற்றும்
பிரிட்டிஷ் கொஸ்மடிக்ஸ் தொழில்நுட்ப பணிப்பாளர்
நிரோஷா ஜாகொடஆரச்சி
ஒன்றிணைந்து வழங்கும்
சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை பயிற்சிப்பட்டறை.
அனுசரணை



British Cosmetics
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
077 3 520 903 / 077 3 128 792
இடம்: வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
திகதி: 2015 ஜூன் 14
நேரம்: மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை
வேடிக்கை விளையாட்டுகள் மற்றும் பரிசுகள்
நற்சான்றிதழ் வழங்கப்படும்
Co-sponsor : Oli Alakan Studio
CUK INDOLA Prevense O·P·I Miracle XPert KUBISS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சிதம்பரப்பிள்ளை சந்திரலிங்கம்

[ஓய்வுநிலை பதிவாளர் - மாவட்ட நீதிமன்றம், அகில இலங்கை சமாதான நீதிவான், பிரபல சமூக சேவையாளர்.]

திதி : நவமி

தோற்றம்
10
07
1944

மறைவு
13
06
2012

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
எம் வாழ்வில் ஒளிவிளக்காய்
என்றென்றும் ஒளிர்ந்தவரே!
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என்றும்
மறவோம் உங்கள் அன்பை

குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி

# 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
## ஞானலக்ஷமி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(B.A(Hons), ஆசிரியை)

திதி : 10.06.2015

தவப்பேறு 11.01.1960
சிவப்பேறு 03.06.1994



குப்பிளான் கற்கலை கற்பக விநாயகர்
பாதம் பணிந்து
"இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே ஞானா"

அன்புக்கணவர், சகோதரி, மைத்துனர்,
மாமி, பிள்ளைகள், மருமக்கள்

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி,
246/4A, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

## அரிகரிராஜன் தினேஸ்குமார்



தாய் மடியில் 21.10.1994
இறையடியில் 27.04.2015

45 நாள் நீ இல்லை ஐயா!
உன் பிரிவு எமக்கு எல்லாம்
கோடி ரணமாய் உள்ளதையா......
ஆண்டாண்டு பல கடந்தாலும்
அழியாதையா உம் நினைவு.....
வழி மேல் விழி வைத்து காத்திருக்கின்றோம்
உன் வரவிற்காய் வாசலை நோக்கி
மீண்டு வருவாயா............? தினேஸ்
எம் வீடு சேராயோ........? தினேஸ்

மீளாத் துயரத்துடன்:
அரிகரிராஜன் - தவமலர் - குடும்பத்தினர்.

தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்,
யாழ்ப்பாணம்.

(60824) (45.3)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 14.12.2014 சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் இராமலிங்கம் இரஞ்சிதன் B.Com

தோற்றம்
15.10.1974

மறைவு
14.12.2014

அன்னாரின் 180 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.06.2015) வியாழக் கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, அன்றைய தினம் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெறும், அதனைத் தொடர்ந்து அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் மதியபோசன நிகழ்வு நடைபெறும், இந்நிகழ்வுகளில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

எமது அன்புத்தெய்வம் நோயுற்றவேளை ஓடோடிவந்து நேரம்காலம் பார்க்காது உதவி யோருக்கும், மறைந்த வேளை ஆறுதல் கூறியோருக்கும், மரணச்சடங்கின் போது சகல வழிகளிலும் உதவிக்கரம் நீட்டியோர், அஞ்சலி செலுத்தியோர், அஞ்சலிப் பிரசுரங்கள், பத்திரிகை வாயிலாக அஞ்சலி செய்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளை இந்த வேளை கூறிக்கொள்கின்றோம்.


குடும்பத்தினர்.

அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(c.17604) (45.3.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை மூட்டினை உருவாக்கி சாதித்த விஞ்ஞானிகள்



அமெரிக்காவிலுள்ள Massachusetts பொது வைத்தியசாலை ஆராய்ச்சியாளர்கள் செயற்கையான முறையில் மூட்டு ஒன்றை ஆய்வு கூடத்தில் உருவாக்கியுள்ளனர். சோதனை முயற்சியாக எலியின் மூட்டு ஒன்றைப் பயன்படுத்திய அவர்கள் தற்போது வெற்றிகரமாக அதனை ஆய்வுகூடத்தில் வளர்த்து வருகின்றனர். இதன் மூலம் மனிதர்களிலும் மூட்டுக்களை மாற்றம் செய்ய முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

இதற்கு முன்னர் தசைகள், நரம்புகள் என்பன செயற்கை முறையில் ஆய்வு கூடத்தில் வளர்க்கப்பட்டுள்ள நிலையில் தற்போது செயற்கை மூட்டு உருவாக்கமானது மருத்துவ உலகில் புதிய திருப்பமாக கருதப்படுகின்றது. இதேவேளை தசைகள், என்புகள்,-குருத்தெலும்பு தசைநாண்கள், குருதி நாளங்கள் என்பவற்றின் தொகுப்பான மூட்டை செயற்கை முறையில் உருவாக்கியமை பெரிய வெற்றி என குறித்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# பறவைகளின் இனங்களைக் கண்டறியும் அப்பிளிக்கேஷன்

பறவைகளின் புகைப்படங்களை தரவேற்றுவதன் மூலம் அவற்றின் இனங்களைக் கண்டறியும் ஒன்லைன் அப்பிளிக்கேஷன் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

Merlin Photo ID எனும் இந்த அப்பிளிக்கேஷனை இணையத்தளத்தின் ஊடாக பயன்படுத்திக் கொள்ள முடியும். எனினும் தற்போது இதன் ஊடாக வட அமெரிக்காவில் உள்ள 400 வகையான பறவை இனங்களை மட்டுமே அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது.

ö Cornell பல்கலைக்கழகத்துடன்

ö ¸Visipedia நிறுவனம்

உருவாக்கியுள்ளது. பயநர்கள் பறவைகளின் புகைப்படங்களை தரவேற்றம் செய்ததன் பின்னர் தோன்றும் செவ்வக வடிவிலான பகுதியில் பறவையை உள்ளடக்கி பின்னர் சொண்டு, கண், வால், வயிற்றுப்பகுதி என்பவற்றை அடை யாளம் காட்ட வேண்டும். இதனை



துல்லியமாக அறிந்து குறித்த பறவையின் இனத்தை இந்த இணையத்தளம் எடுத்துச் சொல்கிறது.

# தாவரப் பசையில் உருவாக்கப்பட்ட அதி நவீன மின்கலம்

தாவரங்களில் உள்ள கூழ்த் தன்மையான பசையைப் பயன்படுத்தி அதிநவீன மின்கலத்தை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்துள்ளனர்.

இந்த மின்கலமானது கூடிய அளவு மின்சக்தியைச் சேமித்து வைக்கக்கூடியதாக இருப்பதுடன் மென்மையானதாகவும், பாரம் குறைந்ததாகவும் காணப்படுகின்றது. இது தவிர மீள்தன்மை (Elastic), வலிமை மிகுந்ததாகவும்



இருக்கின்றது. இவை மீள்தன்மையைக் கொண்டிருப்பதனால் ஆடைகள் மற்றும் வாகனங்களில் எந்தவொரு பகுதியிலும் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அணியக்கூடிய இலத்திரனியல் சாதனங்களை உருவாக்கக் கூடியதாக இருக்கும் எனவும், மொபைல் சாதனங்களை எந்தவொரு இடத்திலும் சார்ஜ் செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எனது தையல்காரர் சஜித்; கிண்டலடிக்கின்றார் நிமல்

கொழும்பு, ஜூன் 10

எனது தையல்காரர் சஜித் பிரேமதாஸ – என்று கிண்டலாகக் கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா.

பிரதமர் கனவில் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா இருப்பதாகவும், அதற்கான ஆடைகளை அவர் தைப்பதாகவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கிண்டலடித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



யார் பிரதமர் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியிலிருந்து விரட்டியடிப்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள அனைவரையும் நாம் ஒற்றுமைப் படுத்தி வருகின்றோம்.

நான் பிரதமராவதற்கு ஆடைகளைத் தைக்கவில்லை. அன்று முதல் இன்றுவரை ஒரே மாதியான ஆடையைத்தான் அணிந்து வருகின்றேன். எனது ஆடை பற்றிப் பேசுவாராயின், அவர்தான் எனது தையல்காரராக இருக்கமுடியும். அவர் எப்போது தையல் காரரானார் என்று தெரியவில்லை.

பிரதமர் கனவு காணப்போய்த்தான் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட்டார் சஜித். நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவராக இருந்துள்ளேன். சபை முதல்வராகப் பணியாற்றியுள்ளேன். எனது அரசியல் அனுப வத்தில் நூற்றுக்கு ஒரு சத வீதம்கூட சஜித் பிரேமதாஸவுக்கு இல்லை– என்றார். (த–சி)

# ரணிலுக்கு எதிரான பிரேரணை சட்ட ரீதியான ஆவணம் அல்ல

அமைச்சர் எஸ்.பி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி உறுப்பினர்கள் சிலர், பிரத மருக்கு எதிராக சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்ட ரீதியான ஆவணம் அல்ல" என கிரா மிய பொருளாதார விவகார அமைச் சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று மேற்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

அது சட்டரீதியான ஆவணம் அல்ல. எனவே அத்னை நிராகரிக்க வேண்டும் என்று அவர் கூறியுள் ளார். ஒரே அமைச்சர்கள் பல்வேறு இடங்களில் கையொப்பமிட்டால் அந்த ஆவணம் சட்டரீதியானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆவணம், நாடாளுமன்றச் செயலாளரால் நிராகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (த)

# எழுதுமட்டுவாழ் சிவன் ஆலய பெரும் திருவிழா

தென்மராட்சி, ஜூன் 10

15 வருடங்களின் பின்னர் இம்முறை எழுதுமட்டுவாழ் சிவன் ஆலயத்தில் பெருந் திருவிழா நடைபெற்று வருகின்றது. 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் சேதமடைந்து அண்மையில் புனரமைக்கப்பட்ட குறித்த ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 15ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் 16 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள் ளன. (ற–9)

# அருணலு பரிசளிப்பு இன்று நெல்லியடியில்

வடமராட்சி, ஜூன் 10

கொமர்ஷல் வங்கி நெல்லியடிக் கிளை நடத்தும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அருணலு பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல்3.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை எஸ்.டேமியன் அடிகள், நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் கே.கிருஷ்ண குமார், கொமர்ஷல் வங்கி வடபிராந்திய முகாமையாளர் றோய்நிக்கலஸ் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

இந்தப் பரிசில் வழங்கும் திட்டத்தில் பாடசாலை ரீதியாக முதல் மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களுக்கு முறையே 10 ஆயிரம், 7 ஆயிரத்து 500, 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தில் இந்த முறை 52 மாணவர்கள் இந்தப் பரிசைப் பெறத் தகுதி பெற்றுள்ளார்கள். (த–173)

# நவநாள் திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூன் 10

மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலத்தின் நவநாள் கொண்டாட்டம் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி ஜேம்ஸ் அடிகளாரின் தலைமையில் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். தினமும் திருச்செபமாலையுடன் நவநாள் திருப்பலி மாலை 5.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். எதிர்வரும் பதின்மூன்றாம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும் மறுநாள் பதினான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஏழுமணிக்கு திருவிழா திருப்பலி ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியும் புனிதரின் ஆசீர் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ற–103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரறிவாளனுக்கு தீவிர சிகிச்சை



சென்னை,ஜூன் 10

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சிறுநீர் தொற்று நோய் சிகிச்சைக்காக நேற்று சென்னை ராஜீவ்காந்தி அரச பொது மருத்துவமனையில்சேர்கப்பட்டுள்ளார்.

பேரறிவாளன் சிறுநீர் தொற்று, முதுகுவலி, உயர் இரத்த அழுத்தம்உள்ளிட்ட நோய்களால்பாதிப்புற்றுள்ளார். கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் வேலூர் அடுக்கம்பாறை அரச மருத்துவமனையில் அவருக்கு சிறுநீரகத் தொற்றுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

வேலூரில் சிறுநீர் தொற்றுப் பிரச்சினைக்கு சிகிச்சை அளிக்க போதிய வசதிகள் இல்லை என்பதால், சென்னை அரச பொது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று பேரறிவாளன் அரசுக்கு மனு வழங்கியிருந்தார். இதையடுத்து, சென்னையில் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக வேலூர் சிறையில் இருந்து பேரறிவாளன் புழல் சிறைக்கு மாற்றப்பட்டார். புழல் சிறையில் இருந்து பேரறிவாளன் பலத்த பாதுகாப்புடன் சென்னை ராஜீவ் காந்தி அரச பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தற்போது அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 53 பேரின் உடல் நேபாளத்தில் மீட்பு

## நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்கள்



காத்மண்டு,ஜூன் 10

நேபாள நில நடுக்கத்தின்போது பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்த 53 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவை மையமாகக்கொண்டு சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. அதன் போது காத்மண்டு நகரின் வடக்கே 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லாங்டாங் என்னும் மலையடிவார கிராமத்தில் கடும் பனிச்சரிவு ஏற்பட்டது.

அந்தக் கிராமம் மலையேற்றத்துக்கு புகழ் பெற்றது என்பதால் அங்கே தினமும் நூற்றுக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுசுற்றுலாப் பயணிகள் குவிவது வழக்கம்.

நிலநடுக்கம் நிகழ்ந்த நாளன்று அந்தப் பகுதியில் மலையேற்றத்துக்காக வந்திருந்த 250 இற்கும் அதிகமானோரைக் காணவில்லை. அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்பட்டது. அதன் போது நடைபெற்ற மீட்புப் பணிகளின் போது 30 இற்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த மாதம் 12 ஆம் திகதி மற்றுமொரு சக்தி வாய்ந்த நில நடுக்கம் நேபாளத்தின் எல்லையோர பகுதியான ரசுவாவை மையமாக கொண்டு தாக்கியது.

இதனால் லாங்டாங் கிராமத்தில் பேரிடர் மீட்பு குழுவினர் தேடும் பணியைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தனர். அதன்பின்பு மீட்பு பணி நடந்தபோது அங்கு புதைந்திருந்த 128 பேரில் சிலருடைய உடல்கள் மீட்கப்பட்டன.

கடந்த ஒரு வாரமாக லாங்டாங் மலையடிவாரத்தில் மீட்புப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 100 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள், பொலிஸார், உள்ளூர் மக்களுடன் இணைந்து பனிபாறைகளையும், பாறைச் சிதறல்களையும் அகற்றி உடல்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் லாங்டாங் மலையடிவார பகுதியில் உயிருடன் புதைந்துபோன 53 பேர்களின் உடல்கள் மீட்புக் குழுவினர் கண்டுபிடித்து மீட்டனர். அவர்களில் 3 பேர் வெளிநாட்டவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் தோண்டத் தோண்ட சடலங்கள் கிடைத்துக்கொண்டே இருப்பதால் இன்னும் ஏராளமானோரது உடல்கள் புதைந்து கிடக்க லாம் என வும், அதனால் நிலநடுக்கத்தில் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில் மீட்கப்பட்ட 53 உடல்கள் இரண்டாவது தடவை ஏற்பட்ட நில நடுக்கத்தின் போது சிக்கிய உயிரி ழந்தவர்களுடையதா? அல்லது முதல் நில நடுக்கம் ஏற்பட்டபோது பனிச்சரிவில் சிக்கி அந்தப் பகுதிக்கு அடித்து வரப்பட்ட உடல்களா? என் பது இன்னமும் உறுதிப்படுத்தப்பட வில்லை என்று இராணுவ அதிகாரி ஜெகதீஷ் சந்திரா தெரிவித்துள்ளார்.

நேபாள நாட்டில் நிகழ்ந்த இரண்டு நில நடுக்கங்களிலும், இதுவரை 8 ஆயிரத்து 773 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இளவரசர் ஹரிக்கு 'சேர்' பட்டம்



லண்டன்,ஜூன் 10

பிரிட்டனர் இளவரசர் ஹரிக்கு, அந்த நாட்டின்; அரசி இரண்டாம் எலிசபெத் மகாராணி 'சேர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.


இளர வரசர் ஹரி ஆப்கானிஸ்தானில் இரண்டு முறை பணியாற்றியமை உட்பட 10 வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றியுள்ளார். இந்த மாத இறுதியில் அவர் இராணுவத்தில் இருந்து விலக உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இராணுவத்தில் பணியாற்றியபோது பல்வேறு விதமான தொண்டு நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டுள்ளார். அவற்றில் கடந்த வருடம் போரில்காயமடைந்தஇராணுவவீரர்களுக்காக இன்விக்டஸ்கேம்ஸ் எனும் விளையாட்டுப் போட்டியைத் தொடங்கியமை மற்றும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக லெஸோத்தோ நாட்டில் தொண்டு அமைப்பைத் தொடங்கியமை ஆகியவை முக்கியமான நடவடிக்கைகள் ஆகும்.

அதன் அடிப்படையில், ஆட்சியில் இருக்கும் பிரிட்டன் அரசர்கள் தங்களுக்குக் கீழ் பணியாற்றும் சிறந்த சேவகர்களுக்கு தனிப்பட்ட முறையில் நைட் கொமாண்டர் ஒவ் றோயல் விக்டோரியர் ஆர்டர் எனும் விருது வழங்கி கௌரவித்து வருகின்றன.

அந்த விருது பெற்றவர்கள் தங்கள் பெயருக்கு முன்பு 'சேர்' எனும் அடைமொழியை இணைத்துக் கொள்வது வழக்கமாகும். இந்த நிலையில் இளவரசர் ஹரிக்கு 'சேர்' பட்டத்தை, பிரிட்டன் அரசியும், அவ ரது பாட்டியுமான எலிசபெத் வழங்கிச் சிறப்பித்துள்ளார். (ஐ)

# இளைஞனின் உடலில் இருந்து 420 சிறுநீரக கற்கள் அகற்றல்



பீஜிங்,ஜூன் 10

சீனாவில் கிழக்கு செ-ஜியாங் மாகாணத்தில் டோங்யாங் நகரைச் சேர்ந்த மிஸ்டர் கி என்பவர் கடுமையான வயிற்று வலியால் டோங்யாங்கில் உள்ள வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரை சி.டி. ஸ்கேன் மூலம் வைத்தியர்கள் பரிசோதனை செய்த போது, அவரது இடது புற சிறுநீரகம் கற்களால் நிறைந் திருப் பதை அறிந்தனர். அதனைத் தொடர்ந்து சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக சத்திர சிகிச்சையின் மூலம் சிறுநீரகத்தில் இருந்த 420 சிறுநீரகக் கற்களை அகற்றி யுள் ளனர்.

சீனாவில் டோபு எனப்படும் தயிர் உள்ளிட்ட பால் பொருள்களை அதிக அளவில் சாப்பிடுவதால் சிறுநீரகக் கற்கள் நோயினால் பலர் பாதிக் கப்படுகின்றனர். எனவே அவற்றை அளவாக உணவில் பயன்படுத்த வேண்டும் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



## மியன்மார் அரசிடம் மலாலா கோரிக்கை

லண்டன்,ஜூன் 10

மியன்மார் அரசால் சட்டவிரோதமாக குடியேறியவர்களாக கருதப்பட்டுவரும் ரோகின்யா முஸ்லிம்கள் மீதான வன்முறை சம்பவங்களை, துன்புறுத்தல்களை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மியன்மார் நாட்டு தலைவர்களிடம், நோபல் பரிசு வென்ற பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூஸப்ஸாயி வலியுறுத்தியுள்ளார்.

மேலும், மியன்மாரில் வாழும் மக்களுக்கு இணையான உரிமைகளும், சலுகைகளும் ரோகின்யா முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு. பல தலைமுறைகளாக அங்கு வாழ்ந்து வரும் நிலையில் ரோகின்யா முஸ்லிம்களும் அந்த நாட்டின் குடி மக்கள்தான். இன்றும், என்றும் ரோகின்யா முஸ்லிம்களின் உரிமைகளுக்காக நான் போராடுவேன் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 'லிப்ட்'டில் இரண்டு நாள்கள் சிக்கித் தவித்த கன்னியாஸ்திரிகள்

ரோம்,ஜூன் 10

இத்தாலி நாட்டில் 'லிப்ட்'டில் சிக்கி இரண்டு நாள்களாகத் தவித்து வந்த கன்னியாஸ்திரிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ள சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அயர்லாந்து மற்றும் நியூஸிலாந்து நாடுகளைச் சேர்ந்த 58 மற்றும் 68 வயதான இரண்டு கன்னியாஸ்திரிகள் இத்தாலி தலைநகரான ரோமில் தங்கியுள்ளனர்.

கன்னியாஸ்திரி ஒருவரின் வீடொன்றில் தங்கிருந்த அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை அன்று அந்த வீட்டின் மேல் தளத்திலிருந்து கீழே செல்வதற்காக 'லிப்ட்'டில் ஏறியுள்ளனர். சிறிது தூரம் இறங்கிய அந்த லிப்ட் திடீரென பழுதாகி அங்கேயே நின்றுள்ளது. லிப்ட் பாதியில் நின்றதால் அதிர்ச்சி அடைந்த இரண்டு பேரும் உதவிகோரிப் பலத்த சத்தம் எழுப்பியுள்ளனர்.

ஆனால், அப்போது அந்த வீட்டில் எவரும் இல்லாததால் அவர்களின் அபாயக் குரல் எவருக்கும் கேட்கவில்லை. லிப்ட்டில் சிக்கித் தவித்த இருவரும் தண்ணீர் தாகத்தால் மூன்று இரவுகள் கழித்து, அந்த வீட்டைச் சுத்தப்படுத்த வந்த வீட்டுப்பணியாளர் ஒருவர் வீட்டின் வெளிப்புறக் கதவின் அழைப்பு மணியை அழுத்தியுள்ளார். ஆனால், உள்ளே இருந்து எவரும் கதவை திறக்காததால் சந்தேகம் அடைந்த அவர் பொலிஸாருக்குத் தகவல் அனுப்பினார்.

வீட்டுக்கு வந்த பொலிஸார் மாற்றுச் சாவியின் உதவியுடன் கதவைத் திறந்து உள்ளே நுழைந்துள்ளனர். ஆனால், வீட்டில் உள்ள அறைகளில் யாரும் இல்லாததால், யாராவது இருக்கிறீர்களா? என குரல் எழுப்பியுள்ளனர். இந்தக் குரலை கேட்ட இரண்டு கன்னியாஸ்திரிகளும் பலவீனமான குரலில்ஆமாம், இங்கே 'லிப்ட்'டில் சிக்கிக்கொண்டுள்ளோம் எனபதிலளித்துள்ளனர்.

உடனடியாக தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் அளித்த பொலிஸார்,இருவரையும் பத்திரமாக வெளியே மீட்டனர். மூன்று இரவுகளாக தண்ணீர், உணவு எதுவும் இல்லாததால், சோர்ந்து போயிருந்த இருவரையும் மருத்துவமனையில் சேர்த்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெருநாட்டில் பஸ் விபத்து 17 பேர் சாவு, 32 பேர் காயம்

லிமா,ஜூன் 10
தென் அமெரிக்க நாடான பெரு நாட்டில் அமேஷோனியன் மலைப் பகுதியில் 50 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று, கஹீவா என்ற இடத்தில் வேகக் கட்டுப் பாட்டை இழந்து 150 மீற்றர் உயரத் தில் இருந்து பள்ளத்தாக்கில் விழுந் துள்ளது.
அந்த விபத்தில் பஸ்சில் பயணம் செய்த 17 பேர் உயிரிழந்துள்ளது டன், 32 பேர் காயம் அடைந்துள் ளனர். உயிரிழந்தவர்களில் பெரும் பாலானவர்கள் பாடசாலை மாணவர் கள் ஆவர். இந்த விபத்து குறித்து விசாரணைக்கு உத்தர விடப்பட் டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (ஐ)

## பெரும் செலவில் ஆடம்பரத் திருமணங்கள்



சிட்னி,ஜூன் 10
தங்களின் திருமணத்தை ஆடம்பர மாக நடத்த வேண்டும் என்பதற்காக பூக்கள் கொள்வனவுக்கு மட்டுமே 1 மில்லியன் டொலர் செலவு செய்து ஆஸ்தி ரேலியத் தம்பதிகள் வியப்பை ஏற்படுத்தியுள்ளனர்.
ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வெண்டி யெல் கொவுரி என்பவர் பல திருமணங்களுக்கு அமைப் பா ளராகப் பணியாற்றியுள்ளார். தற் போது திருமணம் தொடர்பான ஒரு பத்திரிகையில் அவர் ஆசிரி யராக பணியாற்றி வருகிறார்.
இந்த நிலையில் அவர் தனது அனுப வத்தில் பார்த்த திருமணங்கள் குறித்த தகவல்களை சமூக வலைத்தளங் களில் பகிர்ந்துள்ளார். அதில் தான் வியட்நாமைச் சேர்ந்த ஒரு தம்ப தியின் திருமணத்தில் பூக்கள் அலங் காரத்துக்கு மட்டுமே 1 மில்லியன் அமெரிக்க டொலர் அளவில் செலவு செய்ததாகவும், மற்றொரு திரும ணத்தில் மண மகளுக்கு 30 கிலோ எடையில் உடைதைத்துக் கொடுத் துள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.
அத்துடன் ஒரு தம்பதியின் திருமண வரவேற்பில் பிரமாண்டமான கேக்கை வடிவமைத்துக் கொடுத்த தாகவும் அந்த தம்பதிகள் ஏணியில் ஏறி அந்தக் கேக்கை வெட்டியதா கவும் கூறியுள்ளார்.
ஆஸ்திரேலியாவில் திருமணங்க ளுக்காக சராசரியாக 66 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்படுவதாக ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் திருமண வரவேற்பில் வெறும் பூக்களுக்கு மட்டும் 1 மில் லியம் டொலர்கள் செலவு செய் பவர்களும் இருக்கத்தான் செய்கி றார்கள் என்றும் அவர் வேடிக் கையாகத் தெரிவித்துள்ளார். (ஐ)

# பிரான்ஸ் அகதி முகாமில் பொலிஸார் பெரும் அடாவடி



பாரிஸ்,ஜூன் 10
பிரான்ஸ் நாட்டில் தற்காலிகமாகக் குடியேறி முகாம்கள் அமைத்துள்ள வெளிநாட்டு மக்களை பாரிஸ் பொலிஸார் வெளியேற்ற முயன்ற போது எழுந்த கலவரத்தால் பர பரப்பு ஏற்பட்டுள்ளது.
பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் ரயில் நிலைய மேம் பாலத்துக்குக் கீழே எரித்தியா, சூடான், எத்தியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 400 பேர் தற்காலிகமாக முகாம்கள் அமைத்துத் தங்கியுள்ளனர்.
சுமார் ஒரு வருடமாக தங்கியுள்ள அவர்களை வேறு ஒரு முகாமுக்கு மாற்றுவதற்காக நேற்று முன் தினம் நூற்றுக்கணக்கான பொலிஸார் அந்தப் பகுதிக்கு திடீரென வந்துள் ளனர். அவர்களில் 120 பேரை வெளி யேற்றிய பொலிஸார் பாரிஸில் வேறு இடத்துக்குக் கொண்டு சென் றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.
ஆனால், சுமார் 30 நபர்கள் அந்த முகாமை விட்டு வெளியேற மறுத் துள்ளதால் அவர்களை வலுக்கட்டா யமாக அழைத்துச் சென்றுள்ளனர்.
மேலும், அவ்வாறு வெளியேற்றப் பட்டவர்களின் நாட்டுடமை உள் ளிட்ட அடையாளங்களை விசாரிப் பதற்காகப் பொலிஸார் இந்த நட வடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.
ஏனையவர்களையும் பஸ்களில் ஏற்றிச் சென்ற பொலிஸார், அவர் களை எங்கு தங்க வைத்துள்ளனர் என்ற எந்த தகவலையும் வெளி யிடவில்லை.
நேற்று முன்தினம் நண்பகல் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக வெளி யான வீடியோவில் பொலிஸார் புலம்பெயர்ந்தவர்களிடம் முரட் டுத் தனமாக நடந்துக்கொண்டமை பாரிஸ் மக்களிடையே அதி ருப்தியை ஏற்படுத்தியுள்ளது.(ஐ)

## துருக்கியில் மீண்டும் தேர்தல் நடைபெறுமா?



அங்காரா,ஜூன் 10
துருக்கியில் நடை பெற்ற நாடாளு மன் றத் தேர்தலில் ஜனா திபதி ரூசேப் தையிப் எர்டோகனின் நீதி மற்றும் முன்னேற்றக் கட்சிக்கு மிகப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள் ளது. பெரும் பான்மை யான இடங்களை எதிர்க்கட்சிகள் கைப்பற்றியுள் ளன.
கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் நாட்டை நிர்வகித்து வந்த எர்டோ கனுக்கு, இந்தத் தேர்தல் முடிவு பலத்த அடி யாக அமைந்துள்ளது. இதன் மூலம் முதல் முறையாக கூட்டணி ஆட்சி அமைக்க வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.
எதிர்க்கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை ஏற்படுத்த ஜனாதிபதி எர்டோகன் ஒப்புக்கொள்ள வில்லை என்றால் துருக்கியில் புதி தாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் போர்க் கொடி தூக்கியுள்ளன. எனவே அங்கு கூட்டணி ஆட்சி அமையுமா? அல் லது மீண்டும் தேர்தல் நடை பெறுமா? என்ற எதிர்பார்ப்பு ஏற் பட்டுள்ளது.
இதற்கிடையே இந்தத் தேர்தலில் குர்திஷ் இன மக்களின் கட்சியான மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு கணிச மான இடங்கள் கிடைத்துள்ளன. மொத்தமுள்ள 550 தொகுதியில் 80 இடங்களை இந்தக் கட்சி கைப்பற்றும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.
இதன் மூலம் ஒரு கட்சியாக நாடா ளுமன்றத்துக்குச் செல்லும் வாய்ப்பை அந்தக் கட்சி முதன் முறையாக பெற்றுள்ளது. இந்த வெற்றியை குர்திஷ் இன மக்கள் பெருமெடுப்பில் கொண்டாடி வருகிறார்கள். அங்கு மொத்த முள்ள இடங்களில் 10 சதவீத இடங்களை பெறும் கட்சி மட்டுமே நாடாளுமன்றத்தில் நுழைய முடி யும் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## புவி வெப்பமடைதலைத் தடுக்க வலியுறுத்தல்

### ஜி 7 உச்சிமாநாட்டில் உலக நாடுகள் கோரிக்கை

அசுர வேகத்தில் அதிகரித்து வரும் புவி வெப்பமடைதலை உடனடி யாகக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்று ஜேர்மனியில் நடைபெற்ற ஜி 7 நாடுகளின் உச்சி மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள் ளது.
ஜி 7 உச்சி மாநாடு ஜேர்மனி யில் நேற்றுமுன்தினம் ஆரம் பமாகியுள்ளது. அதில் புவி வெப்பமடைதலைக்கட்டுக்குள் வைக்க அனைவரும் ஒன்று சேரவேண்டும் என்று வேண்டு கோள் முன் வைக்கப் பட்டது.
மேலும், நிலக்கரி போன்ற எரிபொருள்களை பயன்படுத் தாமல் நாட்டின் வருமானத்தை பெருக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு உலக நாடுகள் உடன்பாடு தெரிவித்துள்ளன.
சுற்றுச்சூழல் மாறுதல் தொடர்பாக ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மோர்கல் மற்றும் பிரான்ஸ் ஜனாதி பதி பிரான்கோஸ் ஹாலண்டி ஆகிய இருவரும் ஒருமித்த குரலில் ஏனைய நாடுகளின் தலைவர்க ளுக்கு எடுத் துரைத்தனர்.
மேலும் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டுக்குப்பின்னர் நிலக்கரி உள் ளிட்ட படிம எரிபொருள் பயன் பாட்டை 40 -70 சதவீதமாகக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்ற அரசுக்கு இடையேயான சுற்று சூழல் குழுவின் பரிந்து ரையை சாத்தியப்படுத்த அனைத்து நாடுக ளும் தங்களை ஈடுபடுத்திக் கொள் ளவும் முடிவு செய்யப்பட் டுள்ளது.



இந்த நிலையில் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிம எரிபொருள் பயன்பாட்டை முழு வதுமாக நிறுத்துவதற்கான வாய்ப்பு இருப்பதாக சில சுற்றுசூழல் ஆர்வலர் கள் நம்பிக்கை தெரிவித்துள் ளனர்.
இந்த மாநாட்டில் ரஷ்யா– உக் ரையின் விவகாரம், ஐ.எஸ் தீவிர வாதிகளைக் கட்டுப்படுத்துவது, கிரீஸ் பொருளாதார நிலை ஆகி யவை குறித்தும் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வேகமாக பரவும் 'மெர்ஸ்' நோய்

### சாவு எண்ணிக்கை 6 ஆக உயர்வு



சியோல், ஜூன் 10
மெர்ஸ் எனப்படும் ஒருவகை சுவாச நோய் தென்கொரியாவில் கடந்த சில வாரங்களாக வேகமாகப் பரவி வருகிறது. இந்த நோய் தாக்கிய 80 வயது முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரி ழந்துள்ளார். மெர்ஸ் நோயால் இதுவரை 6 பேர் உயிரிழந்துள் ளனர்.
இந்த நோய் தாக்கிய பலரும் நாடு முழுவதும் ஆங்காங்கே வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். அந்த நாட்டில் புதிதாக 23 பேருக்கு அந்த நோய் தாக்கியி ருப்பதாக சுகாதார அமைச்சகம் கண்டுபிடித்துள்ளது. அந்த வகை யில் மெர்ஸ் நோய் தாக்கியவர் களின் எண்ணிக்கை 87 ஆக உயர்ந்துள்ளது.
மெர்ஸ் நோய்க்கு காரணமான வைரஸைக் கட்டுப்படுத்த நடவ டிக்கை எடுக்குமாறு உலக சுகா தார நிறுவனம் தென்கொரியாவை அறிவுறுத்தியுள்ளது. இந்த நோயின் பாதிப்புக் குறித்து உலக சுகாதார அமைப்பு அதிகாரிகள் நேற்று முதல் தென்கொரியாவில் ஆய்வு களை மேற்கொள்ள ஆரம்பித் துள்ளனர்.
இதற்கிடையே மெர்ஸ் நோய் வைரஸ் வேகமாக பரவி வருவ தால், நாடு முழுவதும் சுமார் 2 ஆயிரம் பாடசாலைகளுக்கு விடு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடபுல நிர்மாணத்துறையும் அதன் எதிர்காலமும்



● ஆ.விமலராஜ்

வடபகுதியின் தொழிற் படையில் அதிகளவு தொழிலுரிமைத்துவத்தைக் கொண்ட துறையாக நிர்மாணத் துறை விளங்குகின்றது எனில் அது மிகையல்ல என்பதுடன், 2007ஆம் வருடத்துக்குப் பின்னரான காலப் பகுதியிலிருந்து இன்று வரையிலும் குறித்த தொழில்துறையானது அமிழ்ந்து வருவதுடன் மிகப் பெரும் அபாயகரமான நிலையை நோக்கிச் செல் கின்றமை மிகவும் வருந்தத்தக்கதாகும்.

மிகப் பரந்தளவிலான தொழிற் படையை கொண்டுள்ள மேற்படி நிர்மாணத்துறையானது வளம் கொழிக்கும் ஒன்றாக விளங்குவது மட்டுமன்றி ஏராளமான உப தொழில் துறைகளையும் தன்னகத்தே கொண்டு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏராளமான தொழில் வாய்ப்புக்களையும் வழங்குகின்றமை யாவரும் நன்கு அறிந்த விடயமாகும். ஒப்பீட்டளவில் வடபகுதியில் மிகக்கூடிய குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்கு மேற்படி தொழிற்துறையில் தங்கியுள்ளனர்.

ஆனால்தற்போதைய சூழ்நிலையை நோக்கும்போது மேற்படி நிர் மாணத்துறையின் போக்கும் அதன் எதிர்காலமும் கேள்விக்குறியைத் தோற்றுவித்துள்ளன. அரச திணைக் களங்கள் அரச சார்பற்ற மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களால் கோரப்படும் அனைத்து வகையிலான கட்டுமான வேலைகள் தொடர்பில் மேற்படி துறையினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அதிகரித்த போட்டித் தன்மையுடன் நியம மதிப்பீட்டை விடவும் குறைந்ததாக மட்டுமன்றி குறைந்த பட்ச இலாபத்தையும் உள்ளடக்காது வழங்கப்படுகின்றன. குறித்தவொரு வேலையை துறைசார் நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் இறுதிசெய்து பகிரங்கமாக கேள்வி கோரும் போது அந்தக் குறித்த மதிப் பீட்டிலும் பார்க்கக் குறைவான தொகையில் ஒப்பந்தங்களைக் கோர ஒப்பந்தகாரர்கள் மற்றும் நிர்மாணத் துறையினரால் எவ்வாறு முடிகின்றது என்பது மிகவும் நுட்பமாக ஆராயப்பட வேண்டியதொன்று. அவ்வாறான கேள்விப் பத்திரங்களை கவனத்தில் கொண்டு குறித்த வேலையை குறிப்பிட்ட ஒப்பந்தகாரருக்குவழங்கும் திணைக் களங்கள் மற்றும் நிறு வனங்களின் தீர்மானம் தொடர் பிலும் சிந்திக்க வேண்டியுள்ளது.

அனேகவேலைகள் ஒப்பந்தகாரர்களால் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்கு மேலதிகமான காலப் பகுதியிலேயே நிறைவு செய்யப் படுகின்றன. அவ்வாறு மேலதிகமான காலப்பகுதியில் மேற்படி வேலைகளை நீடிக்கும் பட்சத்தில், ஏற்கனவே அவர்களால்முன்வைக் கப்பட்ட கேள்வித் தொகையிலும் அதிகமான செலவுகளை (தொழிலாளர் ஊதியம், போக்குவரத்து மற்றும் தொடர்பு டைய ஏனைய மேந்தலைகள்) எதிர்கொள்ளும் நிலைக்குள்ளா வதுடன் அந்த மேலதிக செலவை எவ்வாறு ஈடு செய்கின்றனர் என் பது புதிராக உள்ளது. தமது சொந்தப் பணத்தை மேலதிகமாக செலவு செய்து ஒப்பந்த வேலைகளை நிறைவு செய்வதும் கண்கூடு. இவைமட்டுமன்றி வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களில் பெறப்பட்ட கடன்கள் மற்றும் மேலதிகப் பற்று ஆகியவற்றைக் கருத்தில்கொள்ளும் போது தமது முன்னேற்றத்தின் பொருட்டல்லாது, மேற்படி நிறுவனங்களுக்கு தம்மை அர்ப்பணித்து வருமானம் ஈட்டிக்கொடுக்கும் பரோபகார செயலாற்றும் தொண்டர்களாகவே அவர்களை நோக்க முடிகின்றது. தம்மை மட்டுமன்றி தம்மிடம் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களையும் குறித்த சேவையில் ஈடுபடுத்தி மேற்படி தொழில்துறைக்கு நற்கதி சேர்க்கும் முயற்சியை மேற்கொள்கின்றனர் எனில் அது மிகையல்ல.

2007ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கிலும் கூட மிகவும் ஓர் ஆரோக்கியமான நிலையில் மேற்படி நிர்மாணத்துறை விளங்கியதுடன் அது இந்தத் துறையின் ஒரு பொற்காலம் என்று குறிப்பிட்டாலும் அதுமிகையல்ல. மிகவும் சீரான முறையில் நிர் மாணிகள் மற்றும் ஒப்பந்த காரர்கள் பிரகாசித்ததுடன் தரம் மிக்கதாகவும் நிபுணத்துவமான வகையிலும் மேற்படி தொழிற் துறையை வளர்த்தமை கண்கூடு. ஆனால் இன்றைய நிலை.. மிகவும் வருத்தமளிக்கும்வகையில்உள்ளது.

குறித்த வேலையை எப்பாடுபட்டாவது பெறுவதை மட்டுமே நோக்காகக் கொண்டு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர் களாகவே ஒப்பந்தகாரர்களை தற் போது கருத முடிகின்றது. தமது நிர்மாணத்தரத்தைஅதிரிக்கும்நோக்கில் தூர நோக்கற்று எண்ணிப் பார்க்க முடியாத மிகக்குறைந்த தொகையில் கேள்விப்பத்திரங் களைச் சமர்ப்பிக்கின்றனர். அனேகமானோர் இறுதியில் எவ்வித இலாபமும் பெற இயலாது கடன் மற்றும் தமது நிலையான சொத்துக்களைக் கூட ஈடு வைக்கும் அபாயகரமான நிலைக்குத்தள்ளப்படுவதுடன் வாகனங்களுக்கான குத்தகைப் பணத்தை செலுத்த முடியாது, அவை, குறித்த குத்தகை நிறுவனங்களால் கையகப்படுத்தப்பட்டு வாகனமும் இன்றி வங்குரோத்து நிலைக்கு செல்வதானது மிகவும் வருந்தத் தக்கதொன்றாகும். முக்கியமாக குறித்த வேலைகளை நிறைவு செய்ய முடியாத நிலையில் அரச திணைக்களங்களால் ஒப்பந்தகாரர்கள் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டு தமது தொழிலின் நன்மதிப்பையும் இழக்கும் நிலைக்கு உட்படுகின்றனர். அத்துடன் பெருந் தொகையான தொழிலாளர்களது வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகின்றது.

எனவே மிகவும் ஆரோக்கியமானதோர் நிர்மாணத்துறையைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரதும் ஒருமித்த சிந்தனையே காலத்தின் அவசியத் தேவை என்பதுடன், அமிழ்ந்து கொண்டிருக்கும் மேற்படி துறையை குறிப்பாக வட பகுதியில் மீளவும் நிலைநிறுத்துவதற்கு சம்பந்தபட்டவர்களது சாத்தியமான அணுகுமுறை யானது பெரு நன்மைகளுக்குப் பலமானதோர் அத்திபாரமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## ஜனசக்தி இன்சூரன்ஸின் முதலாவது காலாண்டு

2014ஆம் ஆண்டு தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வில்இருதங்கவிருதுகளைத் தனதாக்கிக் கொண்டுள்ள ஜனசக்தி நிறுவனமானது ஒவ்வொரு வீடுகளிலும், பணியிடங்களிலும் காப்புறுதி விளக்கினை ஏற்றி வைப்பதற்கான அதன் பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல எதிர்பார்த்துள்ளது.

கட்டுப்பாட்டு சீர்திருத்தங்களுக்கு பதிலளிக்கும் வகையில், ஜனசக்தி பொதுக் காப்புறுதி லிமிடெட் எனும் அதன் புதிய நிறுவனத்தை ஸ்தாபித்த பின்னர் முதலாவது காலாண்டில் 13.4 வீத வளர்ச்சியை ஜனசக்தி நிறுவனம் பதிவு செய்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 1ஆம் திகதியுடன் செயற்பாடுகளை ஆரம்பித்த இந்த புதிய நிறுவனமானது ஆயுள் சாராத காப்புறுதி வர்த்தகத்தை கையாண்டு வருகின்றது. தாய் நிறுவனமான ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனம் ஆயுள் காப்புறுதி வர்த்தகத்தை முன்னெடுத்து வருகிறது.

2015 ஆம் ஆண்டிற்கான முதலாவது காலாண்டு செயல்திறன் தொடர்பில் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜுட் பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில், 'கடந்த 2014 ஆண்டு பெற்ற நிகர வழங்கப்பட்ட தவணைக்கட்டணத்தை விடவும் இவ்வாண்டின் முதல் காலாண்டின் இறுதியில் 300 மில்லியன் ரூபாவினை அதிகமாக பெற்று 2.5 பில்லியன் ரூபாவை ஜனசக்தி பதிவு செய்துள்ளது. இது நிறுவனத்திற்கு ஆரோக்கியமான தொடக்கமாக அமைந்துள்ளதுடன், இந்த வளர்ச்சி வேகத் தினை தொடர எதிர்பார்த்துள்ளோம்' என்றார்.

ஜனசக்தி பொது காப்புறுதி லிமிடெட்(ஆயுள் சாராத காப்புறுதி பிரிவின்) நிறுவனம் கடந்தாண்டு பதியப்பட்ட நிகர வழங்கப்பட்ட தவணைக்கட்டணம் ரூ.1.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு 1.9 பில்லியன் ரூபாவினை பதிவு செய்துள்ளது. இது ஒட்டு மொத்த வளர்ச்சியில் [illegible] இனை பிரதிபலிக்கிறது. 2014இல் ஆயுள் காப்புறுதி பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் சாதகமான விளைவுகளை வெளிப் படுத்தியுள்ளன. ஆயுள் காப்புறுதி வர்த்தகத்தில் பதிவு செய்யப்பட்ட ரூ.605 மில்லியன் இதனை உறுதிப்படுத்துவதுடன், 2015இன் முதலாவது காலாண்டின் வளர்ச்சி இலாகாவினை 17.8 வீதத்தினால் அதிகரிக்கச் செய்துள்ளது.

இதற்கு மேலதிகமாக, தற்போதைய சந்தை நிலையில் 2015 இன் முதலாவது காலாண்டில் 1.1 பில்லியன் ரூபா நஷ்டஈட்டு கொடுப்பனவுகளை வழங்கி இந் நிறுவனம் சாதனை புரிந்துள்ளது. 2015 இன் முதலாவது காலாண்டு இறுதியில் நிறுவனத்தின் மொத்த சொத்து பெறுமதி 21.01 பில்லியன் ரூபாவை கடந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமது நிறுவனத்தின் இலாப வழங்கல்கள் குறித்து கருத்து தெரிவித்த ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரான பிரகாஷ் ஷாப்டர், '[illegible] இதே காலப்பகுதியில் தேறிய இலாபமாக ரூபா 156 மில்லியனாக காணப்பட்ட நிலையில், இந்த காலாண்டு இறுதியில் ரூ.106 மில்லியனை ஈட்டியுள்ளது. இந்த இலாப வீழ்ச்சிக்கு இதே காலப் பகுதியில் ஏற்பட்ட 71 மில்லியன் ரூபா சந்தை இழப்பு மிக முக்கிய காரணமாகும். இருப்பினும், பங்குச்சந்தையின் அடுத்தடுத்த நேர்மறை இயக்கமானது நிறுவனத்தை இந் நிலைமையிலிருந்து மீட்க உதவியாக அமைந்தது. அத்துடன் எதிர்காலத்தில் எமது செயற்திறனை மேம்படுத்தவுள்ளோம்' என தெரிவித்தார்.

ஜனசக்தி நிறுவனமானது 2015இன் முதலாம் காலாண்டில் அதன் உற்பத்தி புத்துருவாக்கங்கள் ஊடாக வர்த்தககுறியீட்டு உரித்துடைமை மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை கட்டியெழுப்பியுள்ளது.

இந் நிறுவனம் அதன் பல்வேறு சி.எஸ்.ஆர் செயற்பாடுகள் ஊடாக சமூகத்துக்கு பெறுமதி சேர்க்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அதன் ஓர் அங்கமாக, இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நாடுமுழுவதும் வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நுவரெலியா பிரதேசத்தில் வீதிப் பாதுகாப்புத் திட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.




ஜனசக்தி நிறுவனமானது அதன் மக்கள் மற்றும் சக்திமிக்க அர்ப் பணிப்பு மற்றும் சந்தை தேவைகளுக்கான பிரதிபலிப்பு போன்ற தனிச்சிறப்புமிக்க செயற்திறன்களை தொடரவுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டிலும் வலுவான வளர்ச்சியை பதிவு செய்யவுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்

ரயர்கள் போட்டுக் கொளுத்தப்பட்டதால் காப்பெற் வீதிகளில் ஏற்பட்ட சேதங்களை இலகுவில் நிவர்த்தி செய்ய முடியாதென வெளியாகிய அறிவிப்பு மன வேதனையைத் தருகின்றது.

கடந்த 20ஆம் திகதி யாழ். குடாநாடு பூராவும் புங்குடுதீவு மாணவியின் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து முழு அளவிலான ஹர்த்தால் இடம்பெற்றது. இதற்கு பொதுமக்களும் தமது பூரணமான ஒத்துழைப்பை வழங்கினார்கள். இந்த நிலையில் சிலர் வீதிகளின் குறுக்காக ரயர்களை போட்டுக் கொளுத்தினார்கள். காப்பெற் வீதியில் கற்பூரத்தை வைத்துக் கொளுத்தினாலே பாதிப்பு ஏற்படக்கூடிய நிலையில் ரயர்களை குவித்து வைத்துக் கொளுத்தினால் எத்தகைய பாதிப்பு ஏற்படும் என்பதைச் சொல்லவே தேவையில்லை. நீண்டகாலமாக மோசமான நிலையில் காணப்பட்ட வீதிகளில் சிரமங்களுக்கு மத்தியில் பயணங்களை மேற்கொண்ட நாம் தற்போதுதான் காப்பெற் வீதிகளில் ஓரளவு வசதியுடன் பயணங்களை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் இதற்கும் ஆப்பு வைக்கும் வகையில் சிலர் பொறுப்பற்ற விதத்தில் நடந்துள்ளனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட சேதம் எளிதில் சீராக்கப்படத் தக்கதல்ல எனத்தற்போது அறிய முடிகின்றது. மேலும் மழை பெய்யுமானால் ரயர் எரிக்கப்பட்ட இடத்தினூடாக நீர் ஊட்புகுந்து வீதி மோசமாகச் சேதமடையக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் காணப்படுகிறது. வீதிகளின் பல இடங்களிலும் ரயர்கள் குவிக்கப்பட்டு கொளுத்தப்பட்டதால் சேதங்களின் அளவு மோசமான கட்டத்தை எட்டிவிடுமெனத் தெரிய வருகின்றது.

ஒரு சில பொறுப்பற்றவர்களின் செயற்பாடு பொதுமக்கள் அனைவருக்குமே பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்து விட்டது. வீதிகளில் ரயர்களைப் போட்டுக் கொளுத்துவதற்கு என்ன அவசியம் நேர்ந்தது என்பதும் புரியவில்லை.

ஒட்டுமொத்தச் சமுதாயமும் பாதிப்படையும் வகையில் தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதை இனியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது பொது மக்களாகிய எமது கடமையாகும்.

மா.பரணிதரன், கொக்குவில்.

## பொலிஸாரின் இறுக்கமான நடவடிக்கைகள் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும்

யாழ்.குடாநாட்டில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் அச்சத்தையும், வேதனையையும் ஏற்படுத்தி வருகின்றன. ஒரு சிறிய பகைமையுணர்வு ஏற்பட்டாலும் இறுதியில் வாள் வெட்டில் முடிகின்றது. தினமும் இடம்பெறுகின்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் மக்களின் மனங்களில் இனம் புரியாத பயத்தையும், நிம்மதியின்மையையும் ஏற்படுத்தி வருகின்றன. ஒரு சிறிய குழுவினரின் அட்டகாசம் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதித்து வருகின்றது. இலட்சக் கணக்கான படையினரும், பொலிஸாரும் இங்குள்ள நிலையில் இத்தகைய சம்பவங்கள் சர்வ சாதாரணமாகக் இடம் பெறுகின்றமை மக்களிடத்தில் வியப்பையும் ஏற்படுத்தி வருகின்றது.




மோதல்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்து வரும் நபர்களை அடையாளம்கண்டு உடனடியாகச் சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும். இந்த நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படாமை, ஆயுதங்களைச் சுதந்திரமாகக் கையாள்வதற்கு வழி வகுக்கின்றது.

மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் அனைவரும் உடனடியாகக் கைது செய்யப்படல் வேண்டும். இத்தகையவர்கள் நீண்ட காலத் தடுப்பில் வைத்து விசாரிக்கப்படுவதன் மூலமாக குற்றச் செயல்கள் மேன்மேலும் பரவுவதைத் தவிர்க்க முடியும்.


சிலர் ஒன்று சேரும்போதுதான் குற்றச்செயல்களுக்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. தற்போது வீதியோரங்களிலும், கடைவாசல்களிலும் சிலர் தேவையற்ற வகையில் கூட்டம் கூடி நிற்பதைக் காண முடிகின்றது. இவ்வாறு தேவையற்ற விதத்தில் கூட்டமாக நிற்பவர்கள் கண்காணிக்கப்படல் வேண்டும். அத்துடன் இவர்கள் கூட்டம் கூடுவதையும் தவிர்க்க வேண்டும்.

பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாகவே குற்றவாளிகளிடமிருந்து அப்பாவிகளைக் காப்பாற்ற முடியும்.

மேலும் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் வெளிப் பக்கத்தில் தேவையற்ற விதத்தில் இளைஞர்கள் கூடி நிற்பதும் தடை செய்யப்படல் வேண்டும். இதன் மூலமாக பெண் பிள்ளைகளைக் கிண்டல், கேலி செய்யும் நடவடிக்கைகள் தடுக்கப்படும்.

செ.இந்திராணி, கோப்பாய்.

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## போதையால் சீரழியும் வடக்கைக் காப்போம்

தற்பொழுது வடக்கு எதிர்நோக்கும் மோசமான சமூகச் சீரழிவுகளில் போதைப்பொருள் பாவனையும் ஒன்று. மாணவர்களும் இந்தத் தீய பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர். ஆதலால் இதனைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளது. இன்றைய நிலையிலாவது இதனைத் தடுக்க நாம் நடவடிக்கை எடுக்கத் தவறுவோமானால் எமது எதிர்காலச் சமுதாயம் சீரழிந்து போகலாம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வு, படுகொலைச் சம்பவம் குறித்து நேரில் ஆராய அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். வடபகுதியில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை குறித்தும் அப்பொழுது அவரது கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது. வடக்கில் சமீப காலமாக குற்றச்செயல்கள் – குறிப்பாக கொலை கள், பாலியல் வல்லுறவுகள் அதிகரித்து வருவதற்கு போதைப்பொருள் பாவனையும் முக்கிய காரணி என் பதை நாம் மறந்துவிட முடியாது.

ஒரு தசாப்தத்துக்கு முன்னர் வடக்கில் போதைப் பொருள் பாவனை இருக்கவில்லை. பாலியல் வன் புணர்வுகள் இருக்கவில்லை. அப்படியென்றால் அவை எப்படி பின்பு வந்தன? இந்தக் கேள்விக்கு வடக்கு முதலமைச்சர் பதில் அளித்துள்ளார். மஹிந்த அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி என்பதே அவரது கருத்து.

எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி ஒரு காலத்தில் அரசுகளையே ஆட்டிப்படைத்து வந்துள்ளனர். வெளிநாட்டு உதவியுடன் பலத்த செலவுடன்தான் அவர்களை அழிக்க அரசால் முடிந்தது. எனினும் தமிழ் இளைஞர்கள் ஒன்று சேரக்கூடாது, ஒருமித்து செயற்படக்கூடாது, கல்வியில் சிறந்துவிளங்கக் கூடாது, சுதந்திர எண்ணங்கள் அவர்களது மனதில் எழக்கூடாது, விடுதலை வெறி அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரியக் கூடாது, அவர்களை நடைப்பிணங்கள் ஆக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதிருந்த அரச அதிகாரபீட அலுவலர்களிடமும் அமைச்சர்களிடமும் எழுந்தது. வடக்கு, கிழக்கு மாகாண இளைஞர்கள் பலரை அழித்தொழித்து விட்டோம். ஆனால் மீண்டும் அவர்கள் எழமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம் என்ற கேள்விக்குப் பதில் அளிக்குமுகமாகவே போதைப்பொருள்களை திட்டமிட்டு வடக்கில் அறிமுகம் செய்து வைத்தார்கள். தமிழ் இளைஞர்கள் அதற்கு அடி மையாகித் தமது சுய நினைவையும், சுய மரியாதை யையும், சுய சிந்தனை களையும் மறந்துவிட வைக்க வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத் தார்கள். ஆகவே எமது இளைஞர்களிடையே போதைப்பொருள்களை அறிமுகம் செய்ய பெரிய ஓர் அரசியல் காரணம் பின்னணி யில் இருந்து வந்துள்ளது" ! என்று மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார் வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன்.

ஆகவே தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தைப் பயன்படுத்தி போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்படுவது பாராட்டுக்குரியது. வடக்கில் போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபார நடவடிக்கைகளை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு ஆபத்தான ஔடதங்கள் குறித்த தேசிய கட்டுப்பாட்டுச் சபைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். சீரழிந்துள்ள சமுதாயம் ஒன்று ஒருநாளும் முன்னேற்றத்தை நோக்கிப் பயணம் செய்யாது. போதைப்பொருளுடன் சமூகத்தை மூடி மறைத்துக்கொண்டிருக்கிற தீய நடத் தைகள், தீய ஒழுக்கம் என்பவற்றிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தப்போகிறேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் அதிகரிப்புக்கு சில காரணங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

ஒன்று போதைப்பொருள்கள் மிக இலகுவாக யாழ்ப்பாணத்தைச் சென்றடைவதற்கான மார்க்கங்கள் திறந்துவிடப்பட்டுள்ளன. மற்றையது பாடசாலை இடை வேளையின்போதும், பாடசாலை விடும் நேரமும் பாடசா லையின் வெளிவாசல்களில் நின்று மிக வெளிப்படை யாகவே போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்ற னர். இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸாரின் முன்னிலையிலேயே போதைப்பொருள் விற்பனை நடைபெறுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இப்பிரச்சினை ஆராயப்பட்டது. போதைப் பொருள் விற்பனை செய்யப்படும் இடங்கள், பாலியல் சீர்கேடுகள் நடைபெறும் இடங்கள் என்பன அடையாளம் காணப்பட்டு அதன் முழு விவரங்களும் யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு யாழ். அரச அதிபரால் வழங்கப்பட்டது. 28 இடங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இதுவரை ஒருவராவது கைதுசெய்யப்படவில்லை.

ஆகவே எதிர்காலத்தைச் சீரழிக்கும் இந்தத்தீயபழக்கத்தை வேரறுப்பதற்கு அனைவரும் ஒன்றிணை வது அவசியமாகும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுபான்மையினரை மதிக்கும் சட்டமே இன்றைய தேவை

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துவிட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை இப்போது உள்ளது போன்றே இருநூற்று இருபத்தைந்தாகப் பேணுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனையொட்டிக் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருபதாவது திருத்தச் சட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் --

அதனைப் பிற்போட முனைவது நாட்டு மக்களுக்கு விளைவிக்கும் துரோகமாகும் --

அரசமைப்புக்கான புதிய திருத்தத்துக்குத் தாம் ஆதரவா இல்லையா என்பதை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், உடனடியாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் --

தமது முடிவை மக்களுக்கு, வாக்காளர்களுக்கு உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டியது மிகப் பிரதானமானது -- என்று அழுத்தம் திருத்தமாக எடுத்தியம்பி உள்ளார்.

அத்தோடு அவர் தரிக்கவில்லை. சிறுபான்மை இன மக்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தொனிப்பொருளில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால், கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவில் நடத்தப்பட்ட கூட்டத்தில் வைத்தே ஜனாதிபதி மேற்போந்த கருத்துக்களை அழுத்தித் தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு தெரிவித்த மற்றும் மூன்று கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

♦ தற்போது, நடைமுறையில் உள்ள விருப்பு வாக்கு முறையினால் பணவசதி உள்ளவர்களுக்கே முதலிடம் கிடைக்கிறது.

♦ தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்படும் போது, நாட்டின் அனைத்து இன மக்களினதும் பிரதிநிதித்துவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

♦ உண்மை எந்தத் தருணத்திலும் அமைதியாகவே பயணிக்கும் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும் --என்ற ஜனாதிபதியின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையே.

இதேவேளை --

20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் அரசுகாட்டும் அக்கறையும் அவசரமும் ஒரு புறமிருக்க, அந்தத் திருத்தம் சிறுபான்மை மக்களுக்கும் சிறுபான்மை கட்சிகளுக்கும் பாதிப்பற்ற வகையில் அமையும் என்பதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த விடயத்தில், அரசு இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் செயற்பட்டு சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்ற வேண்டும் என சிறுபான்மைக் கட்சிகள் அரசிடம் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றன.

இருபதாவது திருத்தத்தைத் தோற்கடிக்கும் கைங்கரியங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆதரவு அணியொன்று செயற்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஆயினும் அனைத்து சவால்களையும் உடைத்து 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் விடாப்பிடியாகவும் நம்பிக்கையுடனும் செயற்பட்டு வருகிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஆட்சிக்கு வந்த பின்னர் பல அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அனைத்து மட்டங்களிலும் யதார்த்தவாதி என நோக்கப்படும் அவர் --

இருபதாவது திருத்தத்தின் மூலம் நாட்டில் உள்ள அனைத்து இனங்களும் சமமாக மதிக்கப்படக்கூடிய சூழல் ஒன்றை உருவாக்க வேண்டும். அனைவரது எதிர்பார்ப்பும் அதுவே. அதனை ஜனாதிபதி நிறைவேற்றுவாரா......? நம்பிக்கையுடன் காத்திருக்கலாமா?



# விகாரைகளில் அரசியல் நடத்தும் மஹிந்த ராஜபக்ஷ

● லக்ஸ்மன்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது விசுவாசிகளின் கனவை நனவாக்கும் வகையில் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகக் கூறியுள்ளார். அவர் அரசியல் மேடைகளில் இருந்து தான் ஒதுங்கிக் கொள்வதாகக் கூறினாலும் விகாரைகள் தோறும் சென்று மக்களைச் சந்திக்கின்றார். நாரஹேன்பிட்டிஅபேயராமவிகாரை அவரது முக்கிய அரசியல் மேடையாக மாறியுள்ளது. அவர் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக அன்றி நாட்டின் பிரதமராக வர வேண்டும் என்பதே அவரதும் விசுவாசிகளதும் ஆசை யாகும். கடந்த காலங்களில் அவராலும் அவரது சகாக்களாலும் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள், குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பிக்கொள்ள வேண்டுமாயின் மஹிந்த வுக்கு அதிகாரபலம் தேவை. குடும் பத்தினரையும் தனக்கு உறுதுணையாக விளங்கியவர்களையும் பாதுகாக்க அதிகார பலம் மிக்க பதவியை எப்படியாவது கைப்பற்றிக் கொள்ள வேண்டிய நிலை அவருக்கு.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவரை மக்கள் நிராகரித்தாலும் அவர் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை தளர்ந்து விட்டதாகக் கொள்ள முடியாது. தென்னிலங்கையில் அவருக்குக் கணிசமான மக்கள் ஆதரவு இன்னமும் உண்டு. அந்த ஆதரவைத் தக்க வைத்துக்கொள்ள புலியும்இனவாதமும்அவரிடமுள்ளஆயுதங்களாகிவிட்டன. தென்பகுதிகளில் தனது பதவிக்காலத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைக் காட்சிப்படுத்தியுள்ளார். அதில் இடம் பெற்ற ஊழல் மோசடிகளைச் சிந்திக்காது காட்சிகளை மட்டுமே கவனத்தில் எடுக்கும் பெரும்பான்மையின மக்களுக்கு புலிகளையும் தினமும் நினைவூட்டி அவர்களிடமி ருந்து மக்களையும் நாட்டையும் மீட்டெடுத்த தலைவனாக தன்னை மக்கள் நேசிக்கும் ஒருவராக தீவிர பரப்புரைகளையும் மேற்கொண்டு வருகிறார். அதாவது மக்களை இனவாதத்தையோ புலிகளையோ தவிர வேறு எதனையுமே சிந்திக்க முடியாதவாறு தனது கருத்துக்களையே முன்னிலைப்படுத்தி மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கும் தந்திரத்தைக் கையாள்கிறார். இதற்கு விகாரைகளைப் பயன்படுத்துகிறார் அதாவது முயற்சியில் தளராத விக்கிரமாதித்தனாக தன்னை மாற்றிக் கொண்டுள்ளார். மீண்டும் பிரதமராகலாம் என்ற நம்பிக்கையுடன் அவர் காய்களை நகர்த்த அவரை எப்படியும் வீழ்த்திவிட வேண்டும் என்பதில் அவரால் பாதிக்கப்பட்டவர்களும் எதிரணியினரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த பலர் மஹிந்த மீண்டும் பதவிக்கு வருவதை விரும்பில்லை. தமது பதவிக் காலத்தில் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமலும் நன்மை தீமைகளை எடுத்துக் கூற இயலாதவர்களாகவும் அவரது சகோதரர்களதும் அடக்குமுறைக்குள் தம்மால் எதையுமே வெளிக்கொணர முடியாமல் இருந்ததாகவும் அவர்கள் அங்கலாய்க்கிறார்கள். மக்கள் தாம் வெள்ளைவான், கொலை, கொள்ளைகளால்அவதிப்பட்டனர்என்பதையும், மஹிந்த ஒரு சர்வாதிகாரியாகவே செயற்பட்டார் என்பதையும் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பதையும் இப்போது ஒப்புக் கொள்கிறார்கள். மஹிந்த மீண்டும் பதவிக்குவந்தால்பழிவாங்கல்கள் தொடரும் என்கிறார் ரில்வின் சில்வா. மஹிந்தவின் மீள் வரவுச் செய்தி அவரை நடுங்கவைத்துள்ளது. அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருவது கூட எமக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றது. அவர் மீண்டும் ஆட்சி புரிவாரெனில் இலங்கையின் மீது இடிதான் விழும் என மின்சக்தி இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார கூறுகிறார். மஹிந்தவின் காலத்தில் குழப்பங்கள் பிரச்சினைகள் அதிகரித்திருந்ததையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். அவரை எதிர்த்தவர்கள் மட்டுமன்றி ஆதரித்தவர்களும்கூட மஹிந்தவின் மீள்வரவை எண்ணிக் கலக்கமடைந்துள்ளனர். அவருடன் நெருக்கமாக உறவாடியவர்களுக்கே இவ்வாறான நிலை என்றால் சாதாரண மக்களின் எதிர்காலம் என்னவாகும் என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாதுள்ளது. சர்வாதிகாரத் துக்கும் இனவாதத்துக்கும் சிங்கள மக்கள் இன்னமும் தமது ஒத்துழைப்பை நல்குவார்களெனில் அவரது காலத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள் பட்ட துன்பங்களை எதிர்காலத்தில் சிங்கள மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். குடும்ப ஆதிக்கத்தை நிலைநிறுத்த இனவாதத்தினூடாக தென்பகுதி மக்களை அரவணைக்கிறார் மஹிந்த என்ற உண்மையைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வது அவசியம்.

மஹிந்தாவைப் பிரதமராக்க வாழ்க்கையை அர்ப்பணிக்கப் போவதாக பவித்திரா வன்னியாராச்சி உறுதியளித்துள்ளார். மோசடிக் கும்பல்களையும் திருடர்களையும் பாதுகாக்க ஒருவரைப் பிரதமராக்குவதா என்கிறார் ரோசி சேனநாயக்க. தென்பகுதி மக்கள் கவனத்தில் எடுக்க வேண்டியவை இவை. மஹிந்த மீண்டும் பதவிக்கு வந்தால் அவரது கடந்த காலச் செயற்பாடுகள் மீண்டும் தொடரலாம் என்ற கவலையும் தென்பகுதி மக்களிடம் இல்லா மலில்லை. மக்களை ஏமாற்றவேண்டாம். மஹிந்த மீண்டும் வேண்டாம் என நாம் பிரசைகள், விதியின் எதிர்ப்பு ஆகிய சிவில் அமைப்புக்களின் ஒன்றியம் குரல் கொடுத்துள்ளது.

பொதுத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாவிடில் மஹிந்த தனது பரிவாரங்களுடன் நாட்டில் இனக்கலவரங்களை ஏற்படுத்தி பலவந்தமாக அரசைக் கைப்பற்ற முனையலாம் என புலனாய்வுத் துறை கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மீண்டும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவேன் என அரசையும் மக்களையும் அச்சுறுத்தும் வகையில்உறுமிக்கொண் டிருக்கிறார் மஹிந்த. புலனாய்வுத் துறையின் தகவலும் மஹிந்தவின் உறுமலும் கவனத்தில் கொள்ள வேண்டியவை. அவரது அபிலா ஷைகளுக்கு இடமளிக்காதவாறு ஜனாநாயகத்தை மலர வைப்பதன் ஊடாக இலங்கையை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைத்து மக்களுக்கும் இன்றைய அரசுக்கும் உரிய தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றக் கலைப்பு

## 20 ஆவது திருத்தத்தில் தங்கியுள்ளது!

## ஜனாதிபதி சிறிசேன திட்டவட்டம்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

ஊழலுக்கு எதிரான அரசின் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகள் கடந்த வாரம் பெரும் தாக்கம் ஒன்றுக்கு உள்ளாக நேர்ந்தது. இந்த நடவடிக்கைகளின் முக்கிய பொறி அமைப்பான இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துகின்ற ஆணைக்குழுவின் செயற்பாடுகள் யாவும் ஏறக்குறைய செயல் இழந்துவிட்டதுபோல் ஆகிவிட்டன. இரகசியத் தகவல்களின் மீது செயற்பட்டு இலஞ்சம் வாங்குகிறவர்களைக் கையும் மெய்யுமாக பிடிக்க முடியாது. ஆணைக்குழு முழுமையாக அமைக்கப்படாமல் இருப்பதால் திடீர் சோதனைகளை நடத்தவோ விசாரணைகள் முடிவடைந்துள்ளவை தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குகளை முன்னெடுக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆணையாளர் ஒருவர் அண்மையில் பதவி விலகியதன் மூலம் சட்டப் பிரச்சினையொன்றை ஏற்படுத்தியுள்ளார். புதிதாக ஆணையாளர் குழுவொன்றை நியமிப்பதன் மூலமே இந்தச் சிக்கலில் இருந்து விடுபட முடியும்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களில் ஒன்றான அரசமைப்புப் பேரவைக்கு நியமனம் பெற்றிருப்பவர்களும் செயற்பட முடியாமல் இருக்கிறார்கள்.

பொலிஸாரின் நிதி குற்ற விசாரணைப் பிரிவும்கூட தடைப்பட்டு நிற்கின்றது. விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் சிலர் உயர் நீதிமன்றில் எதிர்ப்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளமையால் அவை இன்னமும் முடிவுறாமல் நிலுவையாகக் காணப்படுகின்றன. சோதனைகளை நடத்துவதற்கு நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு குறித்த சிலரையே தெரிவு செய்து விசாரணைக்குட்படுத்தும்படி அரசு வலியுறுத்துகிறது என்பது எதிர்த்தரப்பினர் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் முன்வைத்துள்ள பிரதான குற்றச்சாட்டாகும்.

பெப்ரவரி 11 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்த அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இந்த விசாரணைகளை முன்னெடுக்கும்படி வற்புறுத்திய அரசியல் கட்சியொன்றின் பிரமுகர் ஜனதா விமுக்தி பெரமுனவின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆவார். நாட்டை நிர்வகிப்பதில் வழிநடத்தும் மும்மூர்த்திகளான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியவர்கள் பங்குபற்றியிருந்த தேசிய நிறைவேற்று அதிகாரசபையின் கூட்டங்களில் கலந்துகொண்ட திசாநாயக்க வெவ்வேறு விதமான விசாரணை அமைப்புகள் குறிப்பாக நிதி குற்ற விசாரணைப் பிரிவினை உருவாக்க வேண்டும் என்பதைப் பலமாக ஆதரித்திருந்தார். அலரிமாளிகைக்கருகில் அமைந்துள்ள ஊழலுக்கு எதிரான அமைப்பின் செயலகத்துக்கு திசாநாயக்க சில அலுவலர்களைத் தாமே தனிப்பட்ட முறையில் தெரிவு செய்திருந்தார். இந்தச் செயலகம்தான் பொது மக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு வெவ்வேறு அமைப்புக்களுக்கு விசாரணைகளுக்காக அனுப்பி வருகின்றது.

ஷிரந்தியை நிதிக்குற்றப் பிரிவு அதிகாரிகள் பத்தரமுல்லை வீதியிலுள்ள சபாநாயகரின் அதிகாரபூர்வ இல்லத்தில் வைத்தே விசாரித்துள்ளார்கள். அந்தச் சமயத்தில் அவரது கணவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சட்டத்தரணிகளின் கறுப்புக் கோட்டும் கழுத்துப் பட்டியும் அணிந்தபடியும் அவரது மகன் நாமல், வெள்ளைநிற கடற்படை சீருடையிலும் இன்னொரு மகன் யோஷித ராஜபக்ஷ ஆகியவர்களும் பிரசன்னமாக இருந்துள்ளார்கள். நிதிக் குற்றப் பிரிவுக்கு தலைமை வக்கும் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி வித்தியாலங்கார தனது உயர் அதிகாரிகளின் கூட்டமொன்றில் விசாரணைக்கான இடம் மாற்றப் பட்டமைக்கு தமது காரியாலயம் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி கார்வில் பிளேஸ் பகுதியில் சில குழுக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்த விருப்பது தொடர்பான தகவல் கிடைத்திருந்தமையே காரணம் என்று தெரிவித்திருந்தார். இவ்வாறு, ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற இலஞ்சம், ஊழல், நிர்வாக சீர்கேடுகளை எதிர்த்துப் போராடுவது என்ற பிரதான கொள்கையின் மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது இன்று மிகமோசமான சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

கடந்தவாரம் புதன்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டமொன்றில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அரசமைப்பு சபைக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. சபையின் உறுப்பினர்கள் தொடர்பான விடயமே பிரச்சினையாக இருந்தது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அரசமைப்பு சபையைக் கண்டிப்பதில் முன்னிலை வகித்தவர் மகாஜன எக்சத் பெரமுனவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆவார். முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய ஆதரவாளர்களில் ஒருவரே அவராவார்.

தினேஷ் குணவர்தனவும் ராஜபக்ஷ ஆதரவாளர்களான எம்.பிக்கள் குழுவொன்றும் கடந்தவாரம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சிறிசேனவைச் சந்தித்து உரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்கள். இதில் இரு முக்கிய விடயங்கள் அடங்கியிருந்தன. ஒன்று 20 ஆவது திருத்தமாக ஜனாதிபதி அறிமுகப்படுத்த விரும்பும் தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றியது. அடுத்தது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பானது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகவிருக்கும் 20 ஆவது திருத்தத்தை தங்கள் எதிர்ப்பதாக தினேஷ் குணவர்தன கூறினார். இது நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிலையை பின்போடச் செய்வதற்கான ஒரு முயற்சியென்றும் அவர் கூறினார்.

20 ஆவது திருத்த முன்மொழிவுகளை புதன்கிழமை அமைச்சரவையில் தாக்கல்செய்வதாகவும், அது ஏற்றுக்கொள்ளப் படாது போனால் நாடாளுமன்றத்தைக் கலைப்பது பற்றி யோசிப்பதாகவும் ஜனாதிபதி பதில் அளித்தார்.



> “20 ஆவது திருத்த முன்மொழிவுகளை புதன்கிழமை அமைச்சரவையில் தாக்கல் செய்வதாக வும், அது ஏற்றுக்கொள்ளப் படாது போனால் நாடாளுமன்றத்தைக் கலைப்பது பற்றி யோசிப்பதாகவும் ஜனாதிபதி பதில் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | 5 | | | 3 | |
| | 3 | 7 | | | 4 | | 5 | |
| 4 | | 8 | 6 | | 3 | | 1 | 2 |
| | | | | 3 | | | 7 | 8 |
| | | | | | | | | |
| 6 | 7 | | | 1 | | | | |
| 3 | 4 | | 7 | | 1 | 2 | | 5 |
| | 9 | | 3 | | | 4 | 6 | |
| | 2 | | | 4 | | | | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 4 | 3 | 5 | 2 | 1 | 9 | 7 |
| 2 | 9 | 3 | 7 | 1 | 6 | 8 | 4 | 5 |
| 1 | 5 | 7 | 4 | 9 | 8 | 3 | 6 | 2 |
| 4 | 7 | 8 | 1 | 2 | 9 | 6 | 5 | 3 |
| 9 | 1 | 5 | 6 | 7 | 3 | 2 | 8 | 4 |
| 3 | 2 | 6 | 5 | 8 | 4 | 9 | 7 | 1 |
| 5 | 4 | 9 | 8 | 3 | 1 | 7 | 2 | 6 |
| 7 | 3 | 2 | 9 | 6 | 5 | 4 | 1 | 8 |
| 6 | 8 | 1 | 2 | 4 | 7 | 5 | 3 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலகை அளவில் பிரபல்ய மானது.

## நாளை

வைகாசி – 28
வியாழக்கிழமை
11.06.2015

திதி: தசமி பி.இ. 03.54 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.ப.11.24 வரை
சுபநேரம்: 7.22-08.52 வரை
இராகுகாலம்: 01.22-02.52வரை




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 800 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 250 | 400 |
| கணவாய் | 600 | 500 | 400 | 700 | 700 | 500 |
| பாரை | 650 | 500 | 500 | 500 | 600 | 480 |
| சுறா | 600 | 500 | – | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 400 | 380 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 600 | 360 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 450 | 700 | 300 | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | 450 | – | – |
| திரளி | 200 | 300 | 200 | 300 | 200 | 250 |
| நகரை | 200 | 300 | – | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 200 | 150 | 120 | 100 | 80 |
| ஒட்டி | 300 | 300 | 200 | 400 | 200 | 250 |
| திருக்கை | 150 | 350 | 300 | 300 | 300 | 140 |
| பாலை | 400 | 300 | – | 400 | 200 | – |
| வாழை | 100 | 250 | – | 350 | 300 | – |
| கொய் | 100 | 250 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 300 | – | 250 | 250 | 250 |

## காசநோய்க்கு மருந்தாகும் தூதுவளை

தூதுவளை இலைகளை நிழலில் உலர்த்திக் காயவைத்து இடித்துப் பொடியாக்கி, ஒரு தேக்கரண்டிபொடியை ஒருகோப்பை பசும்பாலில் கலந்து தினமும் காலையில் மட்டும் குடித்து வர நாவரட்சி, கபநீர், மூட்டு வலி, காச நோய் குணமாகும். தூதுவளை இலையை நெய்யில் வதக்கி துவையலாகவோ, கடைந்தோ உண்டு வரக் கபக் கட்டு நீங்கி உடல் பலம்பெறும். தூதுவளை இலையைச் சாறு பிழிந்து அதேயளவு நெய்யில் காய்ச்சி 1 தேக்கரண்டியளவு 2 வேளைகுடித்து வர, எலும்புருக்கிக் காசம், மார்புச் சளி உடனே நீங்கும். தூதுவளைக் காயை நிழலில் உலர்த்திக் காயவைத்து தயிர், உப்பு சேர்த்து பதப்படுத்தி எண்ணெயில் வறுத்து உணவுடன் உண்டு வர மனநலம் பாதிப்பு, இதய பலவீனம், மலச்சிக்கல் குணமாகும். பத்துத் தூதுவளைப் பூக்களை எடுத்து ஒரு கோப்பை பாலில் காய்ச்சி வடிகட்டி, சிறிது சர்க்கரை சேர்த்து 48 நாள்கள் இரு வேளை குடித்து வர, தாது விருத்தி, உடல் பலம், முக வசீகரம் பெறலாம்.






| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 120 | 80 | 80 | 80 | 80 | – |
| கத்தரி | 70 | 80 | 70 | 100 | 50–60 | 120 | 120 | 80 |
| கரட் | 200 | 150 | 220 | 200 | 180–240 | 320 | 250 | 220 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 60 | 50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 140 | 100 | 100 | 140 | 100–120 | 120 | 140 | 80 |
| பாகல் | 180 | 120 | 140 | 140 | 100–120 | 160 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 80–100 | 100 | 180 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 90 | 110 | 100–120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120–160 | 80 | 140 | 140–160 | 160 | 140 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 25–30 | 40 | 80 | 15 |
| தக்காளி | 70 | 80 | 90 | 80 | 60–80 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 60 | 25 |
| கீரை | 25 | 30 | 40 | 20 | 30–40 | 40 | 35–40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 30–40 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 80 | 140 | 80–100 | 110 | 130 | 130 |
| புடோல் | 80 | 70 | 80 | 120 | 100 | 80 | 100 | 70 |
| கோவா | 100 | 100 | 100 | 160 | 70–80 | 120 | 100 | 60 |
| வெண்டி | 120 | 100 | 60 | 120 | 100–110 | 120 | 100 | 60 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 200 | 180–200 | 160 | 220 | 150–180 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 220 | 160–180 | 180 | 240 | 190 |
| தேங்காய் | 50 | 30–40 | 60 | 50 | 40–60 | 40 | 35–45 | 40–45 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 90 | 120 | 90–120 |
| தேசிக்காய் | 120 | 120 | 160 | 160 | 140–150 | 110 | 120 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 80 | 180 | 100 | 160 | 180 | 120 | 200 | 120 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 80–100 | 140 | 200 | – |
| முருங்கக்காய் | 300 | 150 | 250 | 140 | 300–280 | 200 | 250 | 300 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பரந்த மனமும் ஆழ்ந்த நம்பிக்கையும் தேவை

காலம் செல்லச்செல்ல ஸ்மிருதிகளில் கூறப்பட்ட விதிகள் மறைந்து கொண்டே போகும். மகான்கள் வருவார்கள். அவர்கள் சமுதாயத்தை மாற்றி, இன்னும் நல்ல பாதைகளிலும் காலத்துக்குத் தேவையான கடமைகளிலும் வழிகளிலும் சமுதாயத்தைச் செலுத்துவார்கள். இத்தகைய நிலை இல்லையெனில் சமுதாயம் வாழ்வது என்பது முடியாமல் போய்விடும். இவ்வாறு நம்முடைய வழியை இந்த இரண்டு ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இதன் பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கான போதிய பரந்த மனமும் அதே வேளையில் ஆழ்ந்த நம்பிக்கையும் இங்குள்ள ஒவ்வொருவரிடமும் இருக்கிறது என்று நான் நம்புகிறேன், எதையும் விலக்காமல் அனைத்தையும் ஏற்றுக் கொள்வது என்பதையே நான் குறிப்பிடுகிறேன். கொள்கைவெறியரின் தீவிரமும் லௌகீகரின் பரந்த நோக்கும் வேண்டுமென்று விரும்புகிறேன். கடல் போல் ஆழ்ந்து, எல்லையற்ற வானம் போல் விரிந்துள்ள இதயமே நமக்கு வேண்டும். உலகிலுள்ள வேறெந்த நாட்டினரைவிடவும் முற்போக்குடன் இருப்போம்; அதேவேளையில் நாம் நமது பரம்பரைப் பண்பில் நம்பிக்கையுடனும் பற்றுடனும் மாறாமல் நிலைத்திருப்போம். எவ்வாறு இப்படி இருப்பது என்பது இந்துக்களுக்குத் தான் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவத்துக்குப் பின்னர்...



குழந்தைப் பிரசவம் சாதாரண சுகப் பிரசவமாக இருந்தாலும் சரி சிஸேரியன் பிரசவமாக இருந் தாலும் சரி பிரசவத்துக்குப் பின்னர் சில பெண்களில் பாரதூரமான உள வியல் தாக்கங்கள் ஏற்படுகின்றன. இவை கவனிக்கப்படாமல் சரியான சிகிச்சைகள் கொடுக்கப்படாமல் விட்டால் தாய்க்கும் குழந்தைக்கும் ஆபத்துகள் வரக்கூடிய சந்தர்ப் பங்கள் உள்ளன. இதனால் தாய் தானே தற்கொலை செய்யக் கூடிய நிலைமைகளும் சிலவேளைகளில் தனது குழந்தையை கொலை செய்து விடக்கூடிய நிலைமைகளும் தோன் றும். ஆகையால் இந்த முக்கிய மான பிரசவத்துக்குப் பின்னரான மன உளவியல் தாக்கங்கள் அதன் நோய் அறிகுறிகள் மற்றும் சிகிச்சை முறைகள் தொடர்பாக அறிந் திருப்பது முக்கியமானதாகும். பிரசவத்துக்குப் பின்னர் பெண் களில் ஏற்படும் மன அழுத்தம் கிட்டத்தட்ட 15 சதவீதமான தாய் மார்களில் பிரசவத்துக்குப் பின்னர் ஏற்படுகின்றது. இவை பிரச வம் முடிவடைந்து முதல் மூன்று மாதங்களில் கூடுத லாக ஏற்படும்.

**நோய் அறிகுறிகள் எவை?**

சாதாரணமாக பெண்களின் பிரசவத்துக்குப் பின்னர் ஹோர் மோன் மாற்றங்களினாலும் சரியான தூக்கம் இன்மையா லும் புதிய குழந்தையுடன் தமது வாழ்க்கை இசைவாக் கப்படும் போது ஓரளவு சாதா ரண மன நிலைமாற்றங்களை அனுபவிப்பார்கள். ஆனால் மிகவும் கவலையாகவும் மிக வும் தம்மை குறைத்து மதிப் பிட்டு தாழ்வு மனப்பான் மையாகவும் எதிலும் ஒரு விருப்பில்லாத நம்பிக்கை இழந்தவராகவும் மன மாற் றங்கள் கொண்டவராகவும் பல வாரங்களாக இருந்தால் இவ்வாறான நோய்க்குரிய அறிகுறிகளாக எடுத்துக் கொள் ளலாம். மேலும் சில தாய்மார் தமது புதிய குழந்தையால் தமக்கு எந்தவிதமான சந்தோ சமோ விரும்பியோ இல்லை என்று தமக்கு வழமையாக சந் தோசம் தரும் விடயங்கள் கூட தற்போது சந் தோசமாக இல்லை என்றும் கூறுவார்கள். இவ்வா றான நோய் அறிகுறிகள் இருக்கும் போது கூட இருப்பவர்கள் அவ தானித்து அதற்கான பரிகாரம் தேட முயற்சிக்க வேண்டும். இதனை குடும்பத்தவர்கள் அலட்சியப் படுத்தி கால தாமதமாக்கி கவனிக் காமல் விட்டார்களாயின் இறுதி யில் தாய்க்கும் குழந்தைக்கும் ஆபத்து நிலைமைகள் வரக் கூடும்.

தூக்கமின்மை என்பது பிரச வத்துக்குப் பின்னர் பல தாய் மார்கள் சொல்லும் விடயம். ஆனால் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் தூக் கம் இல்லாத பிரச்சினையால் பெரிதும் அவதிப்படுவார்கள். அதாவது குழந்தை தூங்கிக் கொண்டிருக்கும் போது தமக்கு தூங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத் தாலும் தூக்கம் இல்லாமல் இருப் பார்கள். சிலர் ஒரே தூக்கம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். மேலும், சாப்பாட்டில் விருப்பம் இல்லா தன்மையாகவும் பசி இல் லாதவர்களாகவும் காணப்படு வார்கள். சில தாய்மார்கள் இந்த நோயினால் அவதிப்ப டும்போது மிகவும் பயந்தவர்களாகவும் அமைதியற்ற தன்மையுள்ளவர் களாகவும் அவதிப்படுவார்கள்.

**வைத்திய ஆலோசனையை எப்போது நாடவேண்டும்?**

மேற்குறிபபிட்ட நோய் அறிகுறிகள் இருவாரங்களுக்கு மேலாக நீடித் தால் நோய் அறிகுறிகள் தீவிரம் அடைந்தவாறு இருந்தாலும் தாய் தன்னை கவனிக்காமலும் தனது குழந் தையை கவனிக்காமலும் இருந் தால் அல்லது தாய்க்கோ குழந் தைக்கோ தீங்கு செய்யக் கூடிய வாறான எண்ணங்கள் இருந்தால் வைத்திய ஆலோசனை பெறவேண் டியது உடனடியாக அவசியம்.

**பிரசவத்துக்குப் பின்னர் மன அழுத் தம் எவ்வாறான தாய்மார்களில் கூடுதலாக ஏற்படுகின்றது?**

தாய்ப்பாலை விட மாப்பாலை கரைத்து குழந்தைக்கு கொடுக்கும் தாய்மார்கள் ஏற்கனவே மன அழுத்தம் உள்ளவர்கள். தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள். பிர சவத்தின் போது பல கடினங்கள் வேதனைகளை அனுபவித்தவர்கள். கர்ப்பக் காலத்தில் மிகவும் பயம் அச்சம் உள்ளவர்கள். குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்பு உதவிகள் குறைந்தவர்கள், கணவன் மனைவிக்கு இடையில் சரியான புரிந்துணர்வு இல்லாதவர்கள், கணவரிடம் இருந்து பிரிந்து வாழும் தாய் மார்கள், குறைந்த குடும்ப வருமானம் உள்ளவர்கள், திட்ட மிடாத கர்ப்பம் தரித்து குழந்தை பெற்றவர்கள் போன்றோரில் இப் பிரச்சினை கூடுதலாக ஏற்பட வாய்ப்புள்ளது.

**பிரசவத்துக்குப் பின்னரான மன அழுத்தங்களுக்கு எவ்வாறு சிகிச்சை வழங்கப்படும்?**

பிரசவத்தின் பின்னர் பிறந்த குழந் தையை மட்டும் கவனித்து அதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் நின்றுவிடாமல் குழந் தையை பெற்றெடுத்த தாய் குறித்தும் கவ னம் செலுத்த வேண் டும். தாயின் மன நிலைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அவரது சாப்பாட்டு விருப் பம், பசி, தூக்கம், சந்தோசம், கவலை என்பன குறித்து அறிந்த வண்ணம் இருக்க வேண்டும். அவருக்கு பிரச்சி னைகள் இருக்கும் போது கணவரோ மற்றைய குடும்பத் தினரோ அந்தப் பெண் ணைத் தனிமையில் துன்ப ப்படாமல் உத விகள் செய்ய வேண் டும்.

மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் அவ தானிக்கப்படும் போது கால தாமதமாகாமல் தகுந்த மன உளவியல் வைத்திய நிபு ண ரிடம் அழைத்துச் சென்று அவரது நிலை மைகளை ஆராய்ந்து அதற்கான சரியான ஆலோசனைகளும் சிகிச் சைகளும் வழங்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்

> **சில தாய்மார் தமது புதிய குழந்தையால் தமக்கு எந்தவிதமான சந்தோசமோ விரும்பியோ இல்லை என்று தமக்கு வழமையாக சந்தோசம் தரும் விடயங்கள் கூட தற்போது சந்தோசமாக இல்லை என்றும் கூறுவார்கள். இவ்வாறான நோய் அறிகுறிகள் இருக்கும் போது, கூட இருப்பவர்கள் அவதானித்து அதற்கான பரிகாரம் தேட முயற்சிக்க வேண்டும். இதனை குடும்பத்தவர்கள் அலட்சியப்படுத்தி கால தாமதமாக்கி கவனிக்காமல் விட்டார்களாயின் இறுதியில் தாய்க்கும் குழந்தைக்கும் ஆபத்து நிலைமைகள் வரக்கூடும்.**

## ஜூன் மாத இராசி பலன்கள்

**தனுசு**

இந்த மாதம் சூரியன்,செவ்வாய், புதன் 6 ஆம் இடத்தில் நின்று நற்பலனைக் கொடுப்பர். சுக்கிரன் தற்போது சாதகமற்று இருந்தாலும், கடகத்துக்கு வந்து நற்பலனைக் கொடுப்பார். புதன் நற்பலன் அளிப்பார். இடைபட்ட காலத்தில் வக்கிரம் அடைவதால் நன்மை குறையும். தற்போது சனிபகவான் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும் வக்கிரம் அடைந்து துலாம் ராசிக்குச் செல்கிறார். இதனால், கெடுபலன் குறைந்து நன்மை அதிகரிக்கும். முக்கிய கிரகமான சூரியன்,செவ்வாய்பலத்தால் பொருளாதார வளம் கூடும். அபார ஆற்றல் பிறக்கும். நகை–ஆபரணங்கள் வாங்கும் யோகமுண்டாகும். மாதத்தின் பிற்பகுதியில் பணப்புழக்கம் இருக்கும். குடும்பத்தில் வசதி பெருகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெண்கள் ஆதரவுடன் இருப்பர். உறவினர்களுடன் சுற்றுலா சென்று மகிழ்வீர்கள். புதன் 6 ஆம் இடத்தில் இருப்பதால் புதிய முயற்சி வெற்றி அடையும். சுபநிகழ்ச்சி திட்டமிட்டபடிநடக்கும். சுக்கிரனால் சமூகத்தில் மதிப்பு உயரும்.



தொழில் ரீதியாக வெளியூர் பயணம் ஏற்படலாம்.

தொழில்: வியரபாரத்தில் பங்குதாரர்களிடையே ஒற்றுமை ஏற்படும். நல்ல இலாபத்தை எதிர்ப்பார்க்கலாம். பணியாளர்கள் சிறப்பான பலன் காண்பர். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். கலைஞர்களுக்கு பின்தங்கிய நிலை மறையும். புதிய ஒப்பந்தம் எளிதில் கிடைக்கும்.

அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்கப் பெறுவர்.

மாணவர்களுக்கு: போட்டிகளில் வெற்றி கிடைக்கும்.

விவசாயிகள்: நல்ல வருமானத்தைப் பெறுவர். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்ப்புக் கிடைக்கும்.

பெண்கள்: கணவரின் அன்பைப் பெற்று மகிழ்வர். ஆடை, ஆபரணம் வாங்கிக் குவிப்பர்.


அதிர்ஷ்ட எண்: 1, 9

நிறம்: வெள்ளை, செந்தூரம்

பரிகாரம்: சனீஸ்வரருக்கு அர்ச்சனை செய்யுங்கள். வெள்ளியன்று சுக்கிரனுக்கு அர்ச்சனை செய்யுங்கள். லட்சுமி குபேரரையும் தவறாமல் பூஜியுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திமிங்கிலம்

திமிங்கிலம் நீரில் வாழும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இவற்றில் ஒரு வகையான நீலத்திமிங்கலமே உலகின் மிகப் பெரிய பாலூட்டி என்று கருதப் படுகிறது. திமிங்கிலங்கள் வெப்ப இரத்தப் பிராணிகளாகும். இவை நுரையீரல் மூலமே மூச்சுவிடு கின்றன. இவை தமது குட்டிகளுக்கு முலைப்பால் ஊட்டுகின்றன. உட லில் சிறிய அளவில் மயிர்கள் கொண்டுள்ளன. இவற்றின் தோலின் உட்புறம் ஒரு கொழுப்பு அடுக்கைக் கொண்டுள்ளது. இது திமிங்கிலங் களுக்கு உடல்வெப்பத்தைத் தக்க வைக்க உதவுகிறது. இவற்றுக்கும் மனிதனைப் போன்றே இதயத்தில் நான்கு அறைகள் உள்ளன. திமிங் கிலங்களின் தலைப்பகுதியில் குழாய் போன்ற மேல் நோக்கிய துளை ஒன்று உள்ளது. இவை இத்துளை களின் வழியாகவே சுவாசிக்கின் றன. இத்துளைபலீன் திமிங்கிலங் களுக்கு இரண்டும், பற்திமிங்கிலங் களுக்கு ஒன்றும் என உள்ளது. திமிங்கிலங்கள் தனித்தன்மை வாய்ந்த சுவாச மண்டலத்தைக் கொண்டுள்ளதால் இவற்றால் மூச்சு விடாமல் நீண்ட நேரம் நீருக் கடியில் இருக்க இயலும். இசுப்பெர்ம் எனப்படும் ஒரு வகைத் திமிங்கிலத் தால் இரண்டு மணி நேரம் நீருக்குள் மூச் சடக்கி இருக்க முடியும். ஆழக் கடலின் வெளிச்சம் அறவே இல் லாத அடர்ந்த இருளில் இரையைப் பிடிக்க திமிங்கிலங்கள் பயன்படுத் தும் உத்தி எதி ரொலி மூலம் இரை யின் இருப்பிடத்தை துல்லியமாக அறிந்து கொள்ளும் முறையாகும்.

# ஏமாந்த சிறுத்தை



ஒரு நாள் சிறுத்தையொன்று பசியுடன் உணவைத் தேடிச் சென்றது. அப்போது ஒரு கறுப்பு மானையும் ஒரு புள்ளி மானையும் கண்டது. அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால் எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை. அதே நேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஓர் இடத்தில் இடது வலது பாதைகள் வழியாக ஓடின. சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. எதைத் துரத்தலாம் என்று தயங்கி நின்றது. பிறகு, சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான்சுவையாகஇருக்கும் என்றுமுடிவுசெய்துகறுப்புமானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால் அதற்குள் அந்த மான் தொலைதூரம் ஓடிப் போய் விட்டது. உடனே சிறுத்தை; அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி... புள்ளி மானைப் பிடிக்கலாம் என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது. ஆனால் புள்ளிமான் எப்போதோ வெகு தூரம் பறந்துவிட்டி ருந்தது. தரு ணத்தின் முக்கியம் அறிந்து முடிவை விரைவாக எடுக்க வேண்டியது அவசியம்.

# உங்கள் மனதை மாற்றுங்கள்...



இந்த உலகில் வெற்றியை நோக்கி வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு விதத்தில் சோதனைகள் ஏற்படும். அப்படி சோதனை செய்வதில் முக்கியமான ஒன்று தான், மனம். ஏனெனில் அந்த மனம் எப்போதுமே முதலில் எதிர்மறையாகத் தான் நினைக்கும். அவ்வாறு நினைப்பதால், எவராலும் வாழ்வில் நிச்சயம் முன்னேற முடியாது. எப்போதும் மனதில் நன்மையாக யோசித்தால், எந்த ஒரு செயலையும் துணிந்து செய்யலாம். உதாரணமாக, எமது மனம் எதிர் மறையாக நினைக்கும்போது, ஏதாவது ஒரு தோல்வி நடந்தாலும் அதை அவ்வளவு சீக்கிரம் மறக்காமல் இருக்கும். இதனால் எந்தச் செயலைச் செய்யும்போதும் எங்கு தோல்வி கிடைக்குமோ என்று பயந்து இலகுவானவற்றைக் கூட இழக்க நேரிடுகிறது. ஆகவே வாழ்வில் வெற்றியை நோக்கி முன்னேற என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று படித்து தெரிந்து கொள்ளுங் களேன்... வாழ்வில் முன்னேறும்போது நிறையப் பேர் என்னென்னவோ சொல்வார்கள். இதில் அதிகம் நம்மைப் பற்றிச் சொல்பவர்கள் யார் என்று பார்த்தால், குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் அல்லது ஆசிரியர்கள் தான். இவர்கள் சொல்வது எமது நன்மைக்காகவே இருக்கட்டும். ஏன் நாம் எதை விருப்பப்பட்டு செய்தாலும் மூக்கை அறுப்பது போல் நிறைய தடைகளை சந்திக்க நேரிடும். இந்த நேரத்தில் மனதைத் தளர விடாமல், எமது எண்ணத்தில் மட்டும் முழு கவனத்தைக் கொண்டு வாழ்வை மேற் கொண்டால், வெற்றியை நிச்சயம் அடையலாம். எப்போதும் மற்றவர்கள் கூறுவதைக் கேட்காமல், உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உள்ளம் என்ன சொல்கிறதோ, அதைச் செய்யுங்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பதால், வெற்றியை அடைய முடியாது. ஆகவே உங்கள் மனம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு, அதன்படி நடக்க வேண்டும். உதாரணமாக, ஏதேனும் புதிய விஷயங்களைச் செய்யும் போது, மற்றவர்கள் முடியாது என்று நினைப்பதைக் கூட, நீங்கள் முழுக் கவனத்தோடு, செய்து முடிப்பீர்கள். எந்த நேரத்திலும் நீங்களே முடிவெடுங்கள். இதுவரை சிறுவயதில் உங்கள் வீட்டில் இருக்கும் பெற்றோர் கள் முடிவெடுப்பார்கள். இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். இந்த நேரம் தான் நீங்கள் சுயமாக உங் கள் முடிவுகளை எடுக்க வேண்டிய தருணம். எப்போதும் எதையும் செய்ய முடியவில்லை என்று மற்றவர்களிடம் மன்னிப்பு கேட்காமல், பொறுப் புணர்வோடு இருக்க வேண்டும். வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், நினைத்தால் மட்டும் போதாது, சுயமாக முடிவு எடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். இது தான் மிகவும் முக்கியமான ஒன்று. மேலே சொன்னது போல், வாழ்க்கையில் முன் னேறும்போது தோல்விகளைச் சந்தித்துத் தான் ஆக வேண்டும். அதற்காக அந்த தோல்விகளையே மன தில் வைத்துக் கொண்டு வாழ்க்கையில் இருக்கக் கூடாது. தோல்வி தான் வெற்றியின் முதல் படி. தோல்வி களைச் சந்திக்கும் போதுதான் மனம் தெம்பாக, அனைத்தையும் எதிர்த்து நின்று, தைரி யமாக செல்ல முடியும். இதனால் வெற்றியையும் எளிதில் அடைய முடியும். இன்றைய காலத்தில் நிறைய மக்கள் சோம்பேறித்தனத்துடன், கவனக் குறைவோடு, எதைப் பற்றியும் கவலை இல்லாமல் இருக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு எந்த ஒரு நினைப்பும் இல்லை. இதனால் அவர்கள் எந்த ஒரு பெரிய பாராட்டையும் பெறப் போவதில்லை. ஆனால் தோல்வி யடைந்து விட்டால் மட்டும், அதை நினைத்து மனதை தளர விட்டு, வாழ்க்கையை வீணாக்கு கின்றனர். ஆகவே அவ்வாறு இல் லாமல், மனதை எப்போதும் சுறு சுறுப்பாக வைப்பதோடு, அடைய வேண்டிய இலக்கை மனத்தில் கொண்டு சுறுசுறுப்பாக செயல் பட வேண்டும். மேற்கூறிய வாறெல்லாம் செயற்பட்டு வந்தால், வாழ்க்கையில் பெரிய வெற்றியை அடைவதோடு வாழ்வில் ஒரு நல்ல நிலைக்கும் வரலாம்.



# நம்பினால் நம்புங்கள்!

- ★நாய்களில் டால்மேன் இனநாய்க்கு மட்டும் மூட்டு நோய்கள் ஏற்படக்கூடும்.
- ★பூமியில் உள்ள வேறு எந்த உயிரினத்தை விடவும், மனிதர்களை அதிக அளவு கொல்வது கொசுக்கள்தான்!
- ★விண்வெளி செல்லும் வீரர்கள் அங்கு ஈர்ப்புவிசை இல்லாததால் கண்ணீர் விட்டு அழக்கூட முடியாது!
- ★மேற்கத்திய நாடுகளிலுள்ள பெண்கள் வாழ்நாளில் சராசரியாக இரண்டரை கிலோ லிப்ஸ்டிக் உபயோகிக்கிறார்கள்.
- ★உலகிலேயே எருமைப்பால் உற்பத்தி இந்தியாவில்தான் அதிகம்!
- ★இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட, 55 சதவீதத்தினர் வாரத்தில் பாதி நாள்கள் காலை உணவு உண்ணாமலேயே வெளியில் புறப்படுகின்றனர்.
- ★சராசரி அமெரிக்கர் காப்புறுதிக்குச் செலவழிப்பதை விட இரண்டு மடங்கு பணத்தை மதுபானத்திலும் சிகரெட்டிலும் செல வழிக்கிறார்.
- ★இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்தில் இருந்த அமெரிக்க வீரர்கள் பால் பருகுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் இங்கிலாந்தில் பால் பதப்படுத்தப்படாததே அதற்குக் காரணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி நியதிச் சட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கு மாகாணத்திலுள்ள முன் பள்ளிகளை ஒருங்கிணைத்து – கட்டுக்கோப்புக்குள் கொண்டு வரும் நோக்குடன் சமர்ப்பிக்கப் பட்ட வடக்கு மாகாண முன்பள்ளி நியதிச் சட்டம் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவினால் சமர்ப்பிக் கப்பட்ட நியதிச் சட்டம், குழு நிலை யில் விவாதிக்கப்பட்டு பல்வேறு திருத்தங்களுடன் இறுதியாக ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள முன் பள்ளிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் கல்வித் தரத்தை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக நியதிச் சட்டம் சபையில் சமர்ப்பிக் கப்பட்டது. அத்துடன் முன்பள்ளி யில் கல்வி கற்கும் சிறார்களின் வயதெல்லை தொடர்பிலும் நிர் ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆகக் குறைந்தது இரண்டரை வயதி லிருந்து பாடசாலை செல்லும் பரு வம் வரையிலானவர்களை உள்ள டக்கியதே முன்பள்ளி மாணவர்கள் என்று வரையறை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இதனை மேற் பார்வை செய்வதற்குக் கோட்டம் மற்றும் வலயம், மாவட்ட ரீதியி லான அதிகாரிகள் நியமனம், ஆலோ சனைக் குழு நியமித்தல் என்பன தொடர்பிலும் நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் முன்பள்ளியில் கல்வி கற் பிக்கும் ஆசிரியர்களுக்கு முன் பள்ளி நிர்வாகங்கள் ஆகக் குறைந் தது 6 ஆயிரம் ரூபா வழங்க வேண் டும் என்று சட்டம் கொண்டு வரப்பட் டுள்ளது. அவ்வாறு 6 ஆயிரம் ரூபா வழங்க முடியாத நிர்வாகங்கள், வடக்கு மாகாண கல்வி அமைச் சருடன் தொடர்பு கொண்டு அந்தத் தொகையைக் குறைத்துக் கொள்ள முடியும் என்று குறித்த சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (த–5)

## விசேட தேவையுடையோர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

விசேட தேவையுடையோருக் கான தொழிற்பயிற்சி வழங்கு வதற்காக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையானது நடவடிக்கை எடுத் துள்ளது.

இந்தப் பயிற்சியைப்பெற விரும் பும் நபர்கள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தமது சுய விவரத்தை மாவட்ட அலுவலர், நைற்றா, இல. 44 சேமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுள்ளார். (த–4)

## காட்டுமலைக் கந்தசாமி கோயிலுக்குச் சப்பரம்

அச்சுவேலி, ஜூன் 10

அச்சுவேலி நாவலம்பதி காட்டு மலைக் கந்தசாமி கோயிலுக்கு பல லட்சம் ரூபா செலவில் புதிய சப்பரம் நிர்மாணிக்கப்பட்டு வரு கின்றது.

சப்பர நிர்மாண ஆச்சாரி திரு நெல்வேலி பத்மநாதன் சுரேந் திரன் (இந்திரன்) குழுவினர் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக வீதி உலா வருவதற்கு ஏற்ற வகை யில் கலைமரபுகளுடன் கூடிய வகையில் இதனை நிர்மாணித்து வருகின்றனர். (த–11)


## நீரில் மூழ்கி முதியவர் சாவு

சாவகச்சேரி கடல் ஏரியில் வலை போடுவதற்காக சென்ற முதிய வர் ஒருவர் சாவடைந்த நிலை யில் மீட்கப்பட்டுள்ளார். நேற்று மாலை 5.00 மணியளவில் கடல் ஏரியில் வலை போடுவதற்காக சென்ற இவர் இரவாகியும் வீடு திரும்பாததனால் இவரைச் தேடிச் சென்ற உறவினர்கள் நீரில் மூழ்கி இறந்த நிலையில்கண்டுபிடித்தனர்.

சாவகச்சேரி பெரியமாவடிச் சேர்ந்த கந்தையா தர்மலிங்கம் (வயது –73) என்பவரேசாவடைந் தவர் ஆவார். தகவல் அறிந்த சாவகச்சேரி பொலிஸார் அங்கு வந்து விசாரனைகளை மேற் கொண்டு சடலத்தை சாவகச் சேரி ஆதார மருத்துவமனைக் குக் கொண்டு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த–9)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா ஜெயச்சந்திரன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி இராசவீதியை வசிப்பிடமாக வும் கொண்ட பொன்னையா ஜெயச்சந் திரன் 06.06.2015 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தலாதேவியின் அன்புக் கணவரும், சதீஸ்வரன் (கனடா), கஜேந்திரன்(பிரான்ஸ்), பிரதீப் (செலிங்கோ லைப், அச்சுவேலி), சுபிலேந்திரன் (சுவிஸ்), நிமலேந்திரன் (பிரான்ஸ்), சரண்யா (லண் டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசிலா (கனடா), கு. பிரபா (பிரான்ஸ்), விஜிதா (BOC- சாவகச்சேரி), லாவண்ஜா (சுவிஸ்), நிதிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்ற தங்கராசா, தங்கமலர் (கனடா), காலஞ்சென்ற ஜெயராசா, பேரின்ப ராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற புஸ்பமலர், புஸ்பராசா (பிரான்ஸ்), காந்த ராஜா (கனடா), ரவீந்திரன் (கனடா), பிறேமச்சந்திரன் (லண்டன்) ஆகி யோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2015) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி முழங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி, அச்சுவேலி.
பிரதீப் (மகன்) தொ.பே: 077 2247738

தகவல்:
குடும்பத்தினர்.

### முத்தையா மாசிலாமணி

(முன்னாள் வர்த்தகர், பொறளை, கண்ட மாமா-நீராவியடி)



யாழ். புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் குறிகட்டு வானைப் பிறப்பிடமாகவும், மணிக்கூட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மாசிலாமணி 08.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முத்தையா நல் லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்புப் பெறா மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் இளைய பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற கனகாம்பிகை அவர்களின் அன்புக் கண வரும், தவ மணி (ரதி- கனடா), பாலகுமாரன்(ராசன்- கனடா), செயராசன்(சின்ராசன்- பிரான்ஸ்), திலகவதி (ராசாத்தி- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தை யும், மங்களேஸ்வரி, நடராசா, சிவராமலிங் கம், காலஞ் சென்ற கனகாம்பிகை, காலஞ்சென்ற சிவசோதி, வடி வேலு, சிவநாதன், சிவபாக்கியம், சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதய குமார் (கனடா), சண்முகவடிவு(கிளி- கனடா), தர்சினி(பிரான்ஸ்), சூரியகுமார் (கோபு- பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாலசிங்கம், காந்த லெட்சுமி, பரஞ்சோதி, சறோஜினிதேவி, அன்னலெட்சுமி, தவமணி, துரைச்சாமி, சிவ நேசன், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற பாலசுப்ரமணியம், கண்ணம்மா, பரமேஸ் வரி (பிரான்ஸ்), பரநிருபசிங்கம்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றதீஸ், றமிதா, றதீஸ்சன், மயூரன், செந்தூரன், மதுஷான், நிஷாந்தி, நிருஷன், நிசாந், பார்த்தீபன், கயலக்ஷன், விவேக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 11-06-2015 வியாழக்கிழமை மு.ப 08:00 மணிமுதல் மு.ப 10:00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| உதயன்(மருமகன்) | - கனடா தொலைபேசி: | +19056538731 |
| பாலகுமாரன்(மகன்) | - கனடா தொலைபேசி: | +19052373945 |
| செயராசன்(மகன்) | - பிரான்ஸ் தொலைபேசி: | +33164401305 |
| நாதன் | - இலங்கை தொலைபேசி: | +94786577163 |
| செல்லிடப்பேசி | : +94776589420 கோபு(மருமகன்) - பிரான்ஸ் | |
| செல்லிடப்பேசி | : +33652269110 | |

வீட்டு முகவரி:
இல.50, மணிக்கூட்டு ஒழுங்கை, [illegible]

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சாரதாம்பாள் புஸ்பராஜலிங்கம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் சிவன் கோயிலடி சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாம்பாள் புஸ்பராஜ லிங்கம் நேற்று (09.06.2015) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பராஜ லிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகராசா-காந்திமதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜா (பழைய விதானையார்), தையல்நாயகிப்பிள்ளை ஆகி யோரின் பெறாமகளும், விசுவலிங்கம் - தையல் அம்மாள் தம்பதியரின் மருமகளும், பரமேஸ் வரி மகாதேவன், பஞ்சலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற வர்களான மங்களராஜேஸ்வரி, சந்திரராஜா, நாகேஸ்வரன் மற்றும் தவராஜகுமார், மின்னாம் பிகை ஆகியோரின் அன்புச்சகோதரியும், கமலினி (பிரான்ஸ்), மகிழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜலிங்கம் (பிரான்ஸ்), பரந்தாமன்(சமுர்த்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரவீனன்(பிரான்ஸ்), பிரணவன்(பிரான்ஸ்), பிரியங்கா(பிரான்ஸ்), ஹிமாஜினி (O/Lவேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மாணவி), தர்மிகா (யாழ்ப்பாணக்கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2015) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை,உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
சித்தன்கேணி
தொடர்பு :- 077 283 4558

தகவல் :-
குடும்பத்தினர்.

### திருமதி செல்லமுத்து சுப்பிரமணியம்



கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து சுப்பிரமணியம் (08.06.2015) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி சுப்பிர மணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான சின்னையா அன்னப்பிள்ளை தம்பதியி னரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, தங்கமுத்து, திருமதி செல்வ மணி சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவலோகநாதன் (ஆசிரியர்-உடுவில் மகளிர் கல்லூரி), சிறிலோகநாதன்(கனடா) சத்தியலோகநாதன், வாமதேவி(கனடா) ஆகியோ ரின் அன்புத்தாயாரும், நந்தினி, வான்மதி (ஆசிரியர்- விக்ரோறியாக்கல்லூரி,சுழிபுரம்), நடராசா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் கபிலன்(பொறியியல் கல்லூரி, இந்தியா), குணேசன் (பொறியியல் பீடம் மொரட்டுவ), கஜந்தி(கனடா), கஜமதி(கனடா), மதுஹரி(மாணவி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி), கிரிசாந்த் (பல்கலைக்கழகம் கனடா), தனுஜன்(கனடா), சிவசாந்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2015) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் கொல்லங்கலட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்கன்
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
தொடர்பு :- 021 320 5326
(60842) 077 623 9879

தகவல் :-
குடும்பத்தினர்.

### மதியழகன் றஜிந்தன்

(மதிஒளி அமைப்பாளரின் புதல்வன்)

அன்னை மடியில்
30.10.2002

ஆண்டவன் அடியில்
06.06.2015



பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட மதியழகன் றஜிந் தன் 06.06.2015 சனிக்கிழமை அகால மரணம் அடைந்து விட்டார்.

அன்னார் மதியழகன்- லோகேஸ் வரி தம்பதியரின் செல்வப் புதல் வனும், தாயுமானவர்- யோகேஸ் வரி, சோதிராசா-ஆரியமாலா, கந்த சாமி-பாலசரஸ்வதி ஆகியோரின் அன்புப் பேரனும், றஜீபன், றஜித்தா ஆகியோரின் அன்புச் சகோதர னும், கிரிஷாந்தியின் மைத்துனரும், சந்திரா- யோகராசா, அன்பழகன்-சசிகலா, நிதியழகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெறா மகனும், அன்பரசி-கணேஸ் (லண்டன்), மதிய ரசி- பவளராசா (லண்டன்), பரமசிவம்-சாந்தி, கிருஷ்ண லிங்கம்- கலையரசி (ஆஸ்திரேலியா), பத்மநாதன்- ரஞ்சினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பிரியமான மருமகனும், லண் டனில் வசிக்கும் மிதுஷன், சுருதி, டென்ஷன், கஜா னன், அபி ஷேக் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹிஷாந் தன், துஷாரன், ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2015) புதன் கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதிஒளி அமைப்பு
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.
T.P: 077 9455586

(60844)(10.6.1)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போதும் மஹிந்தவா இலங்கை ஜனாதிபதி?

*சுவரொட்டியால் பரபரப்பு*



கொழும்பு, ஜூன் 10
இப்போதும் இந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனப் பெயரிடப்பட்ட சுவரொட்டிகள் பொலன்னறுவை மாவட்டம் முழுவதும் ஒட் டப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
மின்னேரியா ஸ்ரீ சுமலங்கராமய விகாரையில் இடம்பெற்ற மத வழிபாடுகளில் மஹிந்த கலந்து கொள்வார் எனத் தெரிவித்து இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இன்று இடம்பெறவுள்ள போதி பூஜை தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டுவதற்காக இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ள போதிலும், அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை பிரச்சினையான ஒரு விடயமாகும் எனப் பொலன்னறுவை மக்கள் தெரிவித்துள்ளனர்.
இது திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ள ஒரு விடயமென மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (த)

**கண்ணீர் அஞ்சலி**



தோற்றம்: 30.11.2002
உதிர்வு: 06.06.2015

பிரான்பற்று கலைமகள் வித்தியாலய தரம் - 8 மாணவன்
**மதியழகன் றஜிந்தனின்**
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள், ஊழியர்கள்
யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், பண்டத்தரிப்பு.
(60840) (45.9.3.6)

**ஏங்க வைத்து எமைப் பிரிந்த எம்மவன்**



மண்ணில் 15.10.1980
விண்ணில் 07.06.2015

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது ஆருயிர் நண்பன்
**சிவராசா தவக்குமார்** அவர்கள்

நேற்றுவரை எம்மோடு உறவாடி இருந்தாய்
காற்றாகி இன்றெங்கே கனவாகிப் போனாய்
கூற்றுன்னைக் கொண்டேக நோயாக வந்தான்
தேற்ற ஒரு மொழியில்லைத் தேம்பும் மனதிற்கு

இங்ஙனமாய் எம்மை ஏங்கியழவைத்து எதிர்பாரா நேரத்தில் இறைவனடி சேர்ந்த எம் இனிய நண்பனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்பதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!
பிரிவால் துயருறும்
சிவசக்தி ஸ்ரோர்ஸ் & அரைக்கும் ஆலை உரிமையாளரும், ஊழியர்களும்.
(17613)(10.6.1)

**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர் சந்திரசேகரம் **நடேசபிள்ளை**
(ஓய்வுபெற்ற அதிபர் - யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)
பிறப்பு 21.03.1937
இறப்பு 06.06.2010



ஆண்டைந்து ஆனாலும் ஓயுமோ உங்கள் நினைவு - எம்
ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க்கலந்த உத்தமரே!
வேருடே நீர் சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்கள்
வேண்டுவனவெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர்கள்
மறைந்தாலும் நிறைந்திருக்கும் நிஜமான நெஞ்சங்கள்
மனதின் துயர்தனை சொல்ல இல்லையே வார்தைகள்....!

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
(60836) (45.6.3) குடும்பத்தினர்.

# முஸ்லிம் பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டால் நேற்று சர்ச்சை

*மாகாண சபையில் கடும் வார்த்தைப் பிரயோகங்கள்*

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் முஸ்லிம்களின் தேவைக்காக அமைக்கப்பட்ட பாடசாலைகளின் நிதி ஒதுக்கீட்டை நீடிக்கக் கோரிய பிரேரணையால் வடக்கு மாகாண சபையில் நேற்றுப் பெரும் சர்ச்சை வெடித்தது.
இந்தப் பிரச்சினையால் அமர்வில் கடும் வார்த்தைப் பிரயோகங்களும் – கடும் வாய்த் தர்க்கங்களும் இடம்பெற்றன.
சபையின் கடந்த 29ஆம் அமர்வில், ஆளுங்கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரனினால் கல்வி அமைச்சரிடம் ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் நிதியில் வடமேல் மாகாணத்தில் இயங்கும் பாடசாலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு கடந்த அமர்வில் பதிலளித்திருந்தார் கல்வி அமைச்சர். குறித்த பாடசாலைகளுக்கான வடக்கு மாகாண சபையின் நிதி இந்த வருட இறுதியுடன் நிறுத்தப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். அந்தப் பாடசாலைகள் ஒன்றில் வடக்கு மாகாணத்துக்கு திரும்ப வேண்டும். இல்லாவிடின் வடமேல் மாகாண சபையுடன் இணைய வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.
ஆளும் கட்சி முஸ்லிம் உறுப்பினரான அ.அஸ்மின், கல்வி அமைச்சின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். தொடர்ந்து "வடக்கு மாகாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தற்போதும் போதிய மீள்குடியேற்ற வசதிகள் இன்மையாலேயே வெளி மாவட்டங்களில் இன்னமும் தங்கியிருக்கின்றார்கள் என்று சுட்டிக் காட்டினார். அவர்களது கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகளை ஈடுசெய்வதற்காகவே வடக்கு மாகாணத்தின் கல்வி மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள் வடமேல் மாகாணத்தின் எல்லைப் பரப்புக்குள் இயங்குகின்றன. இவற்றை மனிதாபிமான நோக்கில் இன்னும் சிலகாலம் குறித்த பிரதேசங்களில் இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சையும், சுகாதார அமைச்சையும் இந்தச் சபை கோருகின்றது" என்ற பிரேரணையை முன்வைத்தார்.
உரையாற்றிய உறுப்பினர் சிராய்வா, "மன்னார் வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள்தான் புத்தளத்தில் இயங்குகின்றன. புத்தளத்தில் வடக்கின் 6 பாடசாலைகளுக்கு அனுமதியளிக்கப்பட்ட ஆசிரிய நியமனங்கள் 118 ஆக இருக்கும்போதும் 162 பேர் அங்கு இருக்கின்றனர். மன்னார் வலயத்துக்குச் சொந்தமான ஆசிரியர்கள் 44 பேர் மேலதிகமாக அங்கு இருந்து கொண்டு வடக்கு மாகாணத்தின் சம்பளத்தை பெற்று வருகின்றனர்" –என்றார்.
"மேலும் அங்கு கல்விசாரா ஊழியர்கள் 18 பேர் இருக்கின்றனர். இவற்றில் ஒரு பாடசாலையில் மாத்திரம் 8 பேர் இருக்கின்றனர். இது அரசியல். மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் சகோதரர்கள் பலர் மீளக்குடியமர்ந்துள்ளனர். அவர்களுக்கு சவூதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் வீடமைப்புத் திட்டங்களையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. தமிழ் மக்களுக்கு எந்த வீட்டுத் திட்டமும் இல்லை. ஆனால் முஸ்லிம் சகோதரர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் பல இன்று வெறுமையாக பூட்டிக் கிடக்கின்றன என்று தெரிவித்தார்.
ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன் தனது உரையில், "முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 223 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்ததாகப் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு கொடுப்பனவுகள் எல்லாம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் 976 குடும்பங்கள் மாத்திரமே முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது தங்கியுள்ளன. எஞ்சியவர்கள் கொடுப்பனவுகளை மாத்திரம் பெற்றுக் கொண்டு திரும்பி விட்டார்கள். முஸ்லிம் மக்களுக்கு புத்தளம் மாவட்டத்திலும் வீடுகளையும் காணிகளையும் பெற்று கொடுத்தவர்கள் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்திலும் பெற்றுக்கொடுக்க நிற்கின்றனர். முஸ்லிம் மக்களுக்கு மீள்குடியமர்வில் எந்தத் தடையும் இல்லை. அவர்களுக்கு தமிழர்களை விட போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டார்.
ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிடுகையில், இந்த வருட இறுதியுடன் வடக்கு மாகாண சபையின் நிதியை நிறுத்த வேண்டும். இதன் பின்னர் அந்தப் பாடசாலை இயங்குவதானால் மத்திய அரசிடமிருந்து நேரடியாக நிதியைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று குறிப்பிட்டார்.
ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினர் ச.சுகிர்தன், பிரேரணையில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நீக்க வேண்டும்– என்றார். "இது தமிழ் – முஸ்லிம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. அடுத்த தலைமுறையிடமும் பிரிவினை வாதத்தையே ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார்.
இதன் பின்னர் மீண்டும் கருத்துத் தெரிவித்த அஸ்மின், முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு மத்திய கிழக்கு நாடுகள் வீட்டுத் திட்டங்களை வழங்கவில்லை என்றும், முஸ்லிம்களின் காணிகளையும் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர் என்று குறிப்பிட்டார்.
கல்வி அமைச்சர் குறித்த விடயத்தில் கருத்துத் தெரிவிக்கையில், போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு விட்டது. இந்த வருட இறுதியுடன் வடக்கு மாகாண நிதி நிறுத்தப்படும் என்பதில் மாற்றமில்லை என்று –குறிப்பிட்டார். (உ–5)

# ஈ.பி.டி.பியின் உறுப்பினர் சடலமாக மீட்கப்பட்டார்

அச்சுவேலி, ஜூன் 10
ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் (ஈ.பி. டி.பி.) அச்சுவேலி பிரதேசப் பொறுப்பாளரும் கட்சியின் பிரமுகருமான மாரிமுத்து தர்மராசா (வயது –59) தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.
அச்சுவேலி பொலிஸாரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற் பகல் மீட்கப்பட்ட சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. சடலம் கால்கள் மடிந்த நிலையில் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டது.
அச்சுவேலி தெற்கில் பிரதேச வைத்தியசாலைக்கு அருகில் உள்ள வீட்டில் வசித்து வந்த மாரிமுத்து தர்மராசா வலி.கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினராகவும், ஈ.பி. டி.பி. கட்சியின் அச்சுவேலி பிரதேசப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்ததோடு கட்சியின் முக்கிய பிரமுகருமாவார்.
சடலம் கால்கள் இரண்டும் மடிந்த நிலையில் தூக்கில் காணப்பட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு உறவினர்கள் மரணம் தொடர்பாகச் சந்தேகம் தெரிவித்துள்ளனர். அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–11)

# சிறுமியை தாக்கியவருக்கு விளக்கமறியல்

13 வயது சிறுமியைத் தாக்கிய இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.
கொடிகாமம், நாகநாதன் வீதியைச் சேர்ந்த 13 வயது சிறுமி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த இருவரைப் பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரணை செய்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கமாறு உத்தரவிட்டார். (ற–9)

# வலி.கிழக்குப் பிரதேசத்தில் பாதீனியச் செடி பெருக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
வலி.கிழக்குப் பிரதேசத்தில் பாதீனிய செடிகள் பெருக்கம் மீண்டும் அதிகரித்துக் காணப்படுகின்றன. கடந்த மாதத்தில் பெய்த கோடை மழையை அடுத்து பாதீனியங்கள் முளைத்துப் பெருகிக் காணப்படுகின்றன.
கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நிலவிய கடும் வறட்சியினால் இந்தப் பாதீனியங்கள் ஓரளவு வெயிலில் காய்ந்து அழிந்து காணப்பட்டன. பாதீனியங்கள் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து மீண்டும் பெருகியுள்ளன. கூடுதலாக நீர்வேலி மேற்குப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் பாதீ னியம் பெருகிக் காணப்படுகின்றது. (த–17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பளம் அமைப்பது தொடர்பில் ஆராய்வு

திருமலை, ஜூன் 10

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சின்னக் கரச்சை களப்பில் உப்பளம் ஆரம்பிப்பதற்கு கடந்த பல வருடங்களாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கும் உப்பள உரிமையாளர்களுக்கும் இடையில் கும்புறுப் பிட்டி கிராம பொதுக்கட்டடத்தில் கலந்துரையாடலொன்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது,

குச்சவெளி பிரதேச உதவி பிரதேச செயலாளர் எஸ்.அமலினி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கும்புறுப்பிட்டி வடக்கு மற்றும் கிழக்கு, நாவற்சோலை, இறக்ககண்டி ஆகிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்கள், சிறுகடல் தொழி லாளர் சங்கம் ஆகியவற்றை சேர்ந் தோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொது மக்கள், 'ஏற்கெனவே குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவில் பெரியகரச்சை களப்பு தனியார் உப்பளக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டது. அந்த நிலையில், பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் போது, ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில்வாய்ப்பு தருவதாக வாக்குறுதி வழங்கி அக்கம்பனியினால் எமக்கு எந்தப் பயனும் இல்லை. 650 ஏக்கர் மட்டுமே தமக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் 1,000 ஏக்கருக்கும் அதிகமாக நிலங்களை எடுத்துள் ளனர்.

40 பேர் மட்டுமே இந்தக் கம்பனியில் பணியாற்றுகிறார்கள். இவ்வாறான நிலையில் மேலும் நிறுவனத்துக்கு சின்னக்கரச்சை களப்பை வழங்குவதன் மூலம் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்' எனத் தெரிவித்தனர்.

இப்பகுதியில் உப்பளம் அமையுமானால் நிலத்தடி நீர் உவர் தன்மையடையும். மேலும் கடல் உயிரினங்களான நண்டு, இறால் போன்றவற்றின் உற்பத்தி இல்லாது போகும். விவசாய காணிகள் பாதிக்கப்படும். கால்நடைகளுக்கு நீர் இல்லாது போகும். மேலும் பெரிய கரச்சையில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் சின்னக்கரச்சையில் தொழில் செய்கிறார்கள். அவர்களும் பாதிக்கப்படுவார்கள். எனவே, சின்னக்கரச்சை உப்பளத்தை அவ்விடத்தில் நிறுவாது அம்மக்களின் பாரம்பரிய தொழிலை செய்ய அனுமதிக்குமாறு தெரிவித்தனர். (த)

# 100 நாள் வேலைத்திட்டத்தில் கூட்டுறவுத் தொழில் வங்கி

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் 100 நாள் வேலைத்திட்டத்தின் போது கூட்டுறவுத் தொழில் வங்கி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டுறவுத் தொழில் வங்கிக்கு இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்தார்.

கூட்டுறவுத் துறைக்கு வேலை தேடி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் விரைவில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். இதில் தகுதியானவர்களுக்கு அதற்கேற்ற வகையில்வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பணியாளர் வெற்றிடமாகவுள்ள சங்கங்களில் இவர்களுக்குத் தகுதிக்கு ஏற்ற வகையில் நியமனம் வழங்கப்படும்.

சங்கங்களின் எதிர்கால நடவடிக்கை அதன் அபிவிருத்தி போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சங்கங்களின் பதவிகளில் இருக்கும் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தக் கூட்டுறவு தொழில் வங்கிக்கு இதுவரைக்கும் 200க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். (த-17)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனைக்கு**

இராச வீதியில் (நல்லூரில் இருந்து 2km) 25 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் கொள்வனவு செய்யமுடியும்.
தொடர்பு : 077 151 2032

**மணமகள் தேவை**

யாழ் நகரில் வசிக்கும் கௌரவ குடும்பத்தவரான 19.03.1985 இல் பிறந்த றோமன்கத்தோலிக்க மணமகனுக்கு மணமகள் தேவை. காட்வெயார் கடை ஒன்றில் பணிபுரிகிறார். இதே சமயத்தைச் சேர்ந்த அரச உத்தியோ கத்தில் உள்ள மணமகளை எதிர்பார்க்கின்றோம். பிள்ளைகளற்ற இளம் விதவையும் ஏற்றுக்கொள்ளப்படும். 077 828 6654 என்ற எண்ணுக்கு மாலை 6மணிக்குப்பின்னர் தொடர்பு கொள்ளவும். (60846)

**வீடு வாடகைக்கு தேவை**

அரச உத்தியோகம் புரியும் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு அனெஸ் ஆக வீடு தேவை.(யாழ் நகரை அண்டிய பகுதியில் விரும்பத்தக்கது) .
தொடர்பு:- 077 828 7415 (60841)

**காணி விற்பனைக்கு**

38,(8/2) பேரின்பநாயகம் வீதி, பரப்பு 7, குளி 5¼ (யா/கச்சேரியிலிருந்து 300 மீற்றருக்குள்) காணிவிற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 679 4190 (60847)

**POWER OF ROCK MINISTRIES PRESENTS**

நாளை முதல்......
WAKE UP AND RISE (EPH.5:14)
விழித்தெழு! (எபேசி 5:14)
தெய்வீக சுகத்தையும் விடுதலையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள இன,மத, மொழி, சபை வேறுபாடின்றி வாரீர்.
ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மாவட்ட ரீதியில்
வியாழன், வெள்ளி, சனி, ஆகிய நாள்களில்
* உபவாச ஜெபமும் வேதப்படிப்பும் மு.ப. 10.30-12வரை
* தீர்க்க தரிசன எழுப்புதல் கூட்டம் மாலை 5.30-7வரை
11,12,13 திகதிகளில் (சிவன்முதியோர் இல்லத்துக்கு அருகில்)
இடம்: 8ஆவது ஒழுங்கை, இல.12A, எல்லப்பர் மருதங்குளம், வவுனியா.
தொடர்புகளுக்கு: 0775970800 (P.சுரேஸ்)

**ஓம் சக்தி ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
**சிவசங்கர் ஜோதிடர்**
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**பக்த அடியார்களே!**

சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் வெகு சிறப்பாக இடம் பெற்று வருவதால் நாளைய தினம்
10 ஆம் திருவிழா உபயதினத்தன்று
காலை 9.30 மணியளவில்
மங்கல வாத்தியக்கச்சேரியும் அதனைத்தொடர்ந்து மூலஸ்தான பூசை, வசந்த மண்டப பூசை இடம்பெறும் அதனைத்தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.
பின்னர்
மாலை 3.30 தொடக்கம் 4.30 வரைக்கும் மங்கல வாத்தியக்கச்சேரியும் அதனைத்தொடர்ந்து
தென்னிலங்கை புகழ்பூத்த சிவகுமாரின் இசையில் வழங்கும்
**அக்கினி இசைக்குழுவின்**
இன்னிசை கானங்கள்
(பிரபல பாடகர்களுடன் இணைந்து)பி.ப 4.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை இடம் பெறும்).
(அதேவேளை இரவு 7.00 மணியளவில் அம்மன் முத்துச்சப்பறத்தில் பவனிவருவார்)
எனவே அனைவரையும் அணிதிரண்டு வருகை தந்து நிகழ்வுகளை பார்வையிட்டு அன்னையின் அருளைப் பெறுவீர்களாக.
(C 17614) 10 ஆம் திருவிழா உபயகாரர்.

**யாழ். நகரில் பிரபல்யமான கணினி திருத்தும் பாடநெறி Computer Repairing Course**

- ★ ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- ★ சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- ★ தனிப்பட்ட கவனிப்பு.
- ★ 1000 இற்கு மேற்பட்ட கணினி திருத்தும் இரகசியங்கள்.
- ★ சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக இரகசியங்கள் அடங்கிய (CD), கையேடு வழங்கப்படும்.
வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது.
June 13ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 13,14,15,16 ஆகிய நான்கு தினங்களில்
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
பாடநெறிக் கட்டணம் 8500/= / பதிவுக் கட்டணம் 2000/=
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
(C16500)(10.6.1)
0777 444 225 BTEC #21, Sirimbiyadi Lane, (off Stanley Road), Jaffna

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
நேரடியான உரையாடற்பயிற்சியின் மூலம் உங்களாலும் மூன்றே மாதங்களில் ஆங்கிலம்பேச முடியும்.
யாழில் சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.06.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
சங்கானையில் - 13.06.2015 சனிக்கிழமை மாலை 03.00மணி
நெல்லியடியில் - 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணி
பாடப்புத்தகங்கள் மற்றும் DVD என்பன இலவசமாக வழங்கப்படும்.
SAAMSON Experts in English Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 3313 077 621 4567

**நூற்றாண்டு விழா தொடர்பான கலந்துரையாடல்**

யா/நாரந்தனை கணேச வித்தியாலயமானது ஆரம்பித்து நூற்றாண்டை அடைந்துள்ளது. இந்த விழாவைக் கொண்டாடும் முகமாக கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்களையும், பாடசாலை சமூகத்தினரையும், நலன்விரும்பிகளையும், சமூக ஆர்வலர்களையும், கிராமம் சார்ந்த அமைப்பு பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
காலம்:- 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
இடம்:- யா/நாரந்தனை கணேச வித்தியாலய பிரதான மண்டபம்
பாடசாலைச் சமூகம்,
யா/நாரந்தனை கணேச வித்தியாலயம்,
நாரந்தனை, ஊர்காவற்றுறை.
(60833)(10.6.3)

**மாபெரும் ஏல விற்பனை**

100 ற்கும் அதிகமான டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள்



❖ உழவு இயந்திரம் ❖ டிமொ பட்டா
❖ முற்சக்கரவண்டி ❖ மோட்டார் சைக்கில்
❖ இருச்சக்கர உழவு இயந்திரம்
**2015 ஜூன் 16 ம் திகதி**
புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம் வவுனியா
ஜூன் 13,14,15 ஆம் திகதிகளில் வாகனங்களைப் பார்வையிடலாம்
அழையுங்கள் : 011 511 81 81
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

**ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனி உடனுறை நடராஜ இராமலிங்க சுவாமி திருக்கோயில் பஞ்சதள இராஜகோபுர பிரதிஷ்டா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

ஆலயத்தில் பர்வதவர்த்தனி அம்மைக்கு பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பஞ்சதள இராஜகோபுர பஞ்சகுண்ட பட்ச நூதன பிரதிஷ்டா கும்பாபிஷேகம்
காலம் : 12.06.2015 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 8.20 - 10.30 மணி
ஆசியுரை: * நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
* கலாநிதி ஆறுதிருமுருகன்
* ச. லலீசன் (விரிவுரையாளர்)
விஷேட மங்கல இசை:- * பாலமுருகன் குழுவினர்
* இணுவில் சின்னராசாவின் புதல்வன் சுதாகர் குழுவினர்.
அடியார்கள் கலந்துகொண்டு அருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.
ஆலய தர்மகர்த்தா சபையும், திருப்பணிச் சபையும்.
(C/17610)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் 1103 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேறவில்லை

போர் முடிந்து ஆறு வருடங்களான போதிலும், அம்பாறை மாவட்டத்தில் 1,103 குடும்பங்கள் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாது வாழ்ந்துவருவதாக கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ரி.கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று செவ்வாய்க் கிழமை விடுத்துள்ள அறிக்கையில், திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாகாமத்தில் 126 குடும்பங்களும், காஞ்சிரங்குடாவில் 68 குடும்பங்களும், கஞ்சிகுடிச்சாற்றில் 244 குடும்பங்களும், தங்கவேலாயுதபுரத்தில் 270 குடும்பங்களும், வன்னியிலிருந்து அம்பாறை மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்த 63 குடும்பங்களுமாக 771 குடும்பங்களும் மீள்குடியேற்றப்படாதுள்ளன.

மேலும், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சாந்திபுரத்தில் 108 குடும்பங்களும், பொத்துவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கனகர் கிராமத்தில் 178 தமிழ், சிங்கள குடும்பங்களும், நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சவளக்கடை, கம்பிக்காலையில் 46 குடும்பங்களும் மீள்குடியேற்றப்படாதுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# போர்க் குற்ற ஆதாரங்களை வழங்க புதிய அப்ளிகேசன்

கொழும்பு, ஜீன் 10

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க புதிய மொபைல் அப்ளிகேசன் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

போர் இடம்பெற்று வரும் நாடுகளைச் சேர்ந்த பொதுமக்கள் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமான ஆதாரங்களைத் திரட்டி பகிரக்கூடிய வகையில் இந்த மொபைல் அப்ளிகேசன் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போரின் போது கையடக்கத் தொலைபேசி மூலம் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பிலான ஆதாரங்கள் திரட்டப்பட்டிருந்தன.

இதனைஅடிப்படையாகக்கொண்டே புதிய அப்ளிகேசன் உருவாக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான கையடக்கத் தொலைபேசி வீடியோ ஆதாரங்கள் அண்மைக் காலமாக சமூக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.

எனினும், இந்த வீடியோ ஆதாரங்களின் உண்மைத் தன்மையை உறுதிசெய்ய முடியாத நிலைமை நீடிப்பதுடன் இதனை நீதிமன்றில் ஓர் ஆதார மாக சமர்ப்பிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஆதாரங்கள் போலியான வையா, உண்மையானவையா என்பதனை உறுதிசெய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் சர்வதேச சட்டத் தரணிகள் ஒன்றியம்இந்தமொபைல் அப்ளிகேசனை உருவாக்கியுள்ளது. (த-சி)

## போதைப்பொருள்

தொடர்பான வழக்கு சட்ட மா அதிபர் திணைக்களத் தினால் கடந்த ஜனவரியில் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

அது தொடர்பான வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது சந்தேகநபர் தன்மீதானகுற்றத்தை ஏற்றுக்கொண்டார். கஞ்சாவைத் தன் உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை என்பனவே அவர் மீதான குற்றச்சாட்டு.

அதனையடுத்துநீதிபதிதனதுதீர்ப்பை வாசித்தார். அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

போதைவஸ்து கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஹெரோயின், அபின், மோபின் என்பனவற்றை உடைமையில் வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்த குற்றவாளிகளாகக் காணப்படும் நபருக்கு சாவுத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கச் சட்டம் பரிந்துரைக்கிறது. மிகச் சிறிய தொகையான 2 கிராம் ஹெரோயின் அல்லது மோபின் அல்லது அபின் என்பனவற்றை உடைமையில்வைத்திருந்தால்அவர் மேல் நீதிமன்றில் குற்றவாளியாகக் காணுமிடத்து அவருக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்படும்.

2 கிராமுக்குக் குறைவான ஹெரோயின் அல்லது மோபின் அல்லது அபின் வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தால் கடூழியச் சிறையும் தண்டமும் விதிக்கப்படும். இவை சமூகத்தைப்பாதிக்கக்கூடியதாகவும்பலவீனமாக்கக் கூடியதாகவும் இருப்பதனாலேயே இவ்வாறான தண்டனை விதிக்கப்படுகிறது.

மாணவர்கள், வேலையில்லாத இளைஞர்கள் போன்றவர்களைப் பாதுகாப்பதற்காகவே போதைப் பொருள் கட்டளைச் சட்டம் இறுக்கமான, கடுமையான தண்டனைகளைப் பிரகடனப்படுத்தியுள்ளது. போதைப்பொருள் பாவனை அவற்றைத்தன்உடைமையில்வைத்திருத்தல், விற்பனை செய்தல் என்பன இறுக்கமான சமூகக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியும், ஒரு சமூகத்தை அழிக்கக்கூடிய சக்தியைக் கொண்ட பெரும் குற்றமாகும்- என்று தீர்ப்பில் தெரிவித்துள்ளார். குறித்த அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் குற்றவாளியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 75 ஆயிரம் ரூபா பணத்தை அரசுடமை ஆக்குமாறும் அவர் தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (உ-4)

## ரயில்

முற்பாக நேற்று காலை 9.20 அளவில் இடம்பெற்றது. விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குமாரன் ஜெயச்சந்திரன் (வயது 55) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலே அவரை மோதியது.

ரயில் வருவதனை அவதானிக்காமல் குடும்பஸ்தர் ரயில் பாதையைக் கடக்க முயன்றார் என்றும் இதனைப் பலர் கண்டனர் என்றும் அவரை நோக்கி எச்சரிக்கைக் குரல் எழுப்பினர் என்றும் அருகிலுள்ள வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் அதனைப் போட்டுவிட்டு அவரை நோக்கி அவலக் குரல் எழுப்பியபடி ஓடினார் என்றும் அதற்கிடையில் ரயில் அவரை மோதித் தள்ளியது என்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ரயிலால் பலமாக மோதுண்ட ஜெயச்சந்திரன் தண்டவாளங்களுக்கு இடையிலேயே வீழ்ந்தார். உடனேயே அவரது உயிர் பிரிந்தது. கோப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-4)

## பேகர்

நோர்மன் மல்தஷார் நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்வியில் அக்கறை காட்டாமை, கலப்புத் திருமணம், புலம்பெயர்வு, கலாசாரத்தை கைவிட்டமை, பொருளாதார வீழ்ச்சி, அரசியல் ஆதரவு இல்லாமை போன்ற காரணங்களால் பேகர் இனம் பல சவால்களை எதிர்கொண்டு அழிவடையும் நிலையில் உள்ளது என்று எஞ்சியுள்ள பேகர் இன மக்கள் கவலைப்படுகின்றனர்.

அவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு விரைவில் யாழ்ப்பாணத்திலும் பேகர் சமூக அமைப்புஏற்படுத்தப்படுவதுஅவசியமென பேகர் மக்கள் சார்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (உ-135)

## மேலும்

டிருந்தனர்.

முதலில் 33 சந்தேகநபர்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களும் மன்றில் தோன்றியிருந்தனர். இரண்டாவது வழக்கில் பதினான்கு சந்தேக நபர்கள் முற்படுத்தப்பட்டனர். மன்றில் சமுகமாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னான்டோவும்யாழ்.தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லரும் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு பிணை வழங்குவதற்கு பொலிஸாருக்கு ஆட்சேபனை இல்லையெனவும் நீதிமன்றம் பொருத்தமான பிணையில் அவர்களை விடுவிக்கலாமெனவும் தெரிவித்தனர்.

பிணையில் விடுவிக்கப்படுபவர்கள் பொலிஸாரின் விசாரணை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் எவ்விதமான குற்றச்செயல்களிலும் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனைவிதிக்கப்பட்டது.

மாணவர்களென உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் சத்தியக்கூற்றை இணைத்திருந்த 15 பேருக்கு நீதிவான் பெ.சிவகுமார் பிணை வழங்கினார். ஒவ்வொரு சந்தேகநபரும் தலா 500, 000 ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையாளிகளின் பிணையில்முதல் வழக்கிலும், தலா 200,000 ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையாளிகளின் பிணையில் இரண்டாவது வழக்கிலும் விடுவிக்கப்பட்டதுடன் பிணையாளிகள் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்தி பிரதேச செயலாளரினால் மேல் ஒப்பமிடப்பட்ட கிராம சேவகரினது கடிதத்தை அணைக்க வேண்டுமெனவும் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் ஒன்பது மணிக்கும் பன்னிரண்டு மணிக்கும் இடையில் யாழ்ப்பாண பொலிஸ்நிலையத்தில் கையொப்ப மிட வேண்டுமென்வும் நிபந்தனை விதிக்கப்பட்டது. சந்தேக நபர்கள் மாணவர்கள் என்பதால் அவர்களுடைய எதிர்காலத்தை கருத்தில் கொண்டே பிணையில் விடுவிக்கப் படுவதாகவும் மாணவர்கள் என்ற அந்தஸ்து குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான அனுமதிப்பத்திரம் அல்ல என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் எதிர் காலத்தில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டால் பிணைரத்துச் செய்யப்பட்டு வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும்வரை விளக்க மறியலில் வைக்கப்படுவர் எனவும் நீதிவான் எச்சரிக்கை செய்தார்.

ஏற்கனவே பிணை கோருபவர்கள் சத்தியக் கூற்றுக்களை இணைக்க வேண்டுமென நீதிமன்றினால் கடந்த தவணைகளில் அறிவுறுத்தப்பட்டிருந்தபோதும் பெரும்பாலான சட்டத்தரணிகள் சரியான ஆவணங்களுடன் சத்தியக்கூற்றுக்களை சமர்ப்பிக்காததால் அதனைச் சுட்டிக்காட்டிய நீதிவான் ஏனைய சந்தேக நபர்களை பிணையில் விடுவதற்குரிய அதிகாரம் நீதிமன்றத்திற்கு இல்லை என்பதால் ஏனையவர்களை 18.06.2015 வரையும்விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (உ-103)

## மது

மாகாண அவைத் தலைவரினால் அவசர பிரேரணை ஒன்று வடக்கு மாகாண அவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வடக்கில் அதிகரித்து வரும் மானுட நேயமற்ற வன்மச் சம்பவங்களுக்கு, இங்கு இடம்பெறும் அதிகரித்த மதுபான மற்றும் போதைப் பொருள் பாவனையே காரணம் என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றது என அந்தப் பிரேரணை சுட்டிக்காட்டியது.

"தாராளமாக மதுபான விற்பனை செய்யும்கடைகள்மதுவரித்திணைக்களத்தின் வழிகாட்டல்களை மீறிய வகையிலேயே உரிமங்களைப் பெற்றிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. வழிபாட்டுத் தலங்கள், கல்விக்கூடங்கள், பொது அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் போன்றவற்றை அண்மித்ததாக பல மதுபான விற்பனை நிலையங்கள் உரிமம் பெற்று இயங்குவதைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே, வடக்கில் உரிமம் வழங்கப்பட்ட சகல மதுபான விற்பனை நிலையங்களும் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு உட்பட்டு வழங்கப்பட்டுள்ளனவா என்பதை முழுமையாக ஆராய்ந்து விதிகளுக்கு முரணான உரிமங்களை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கும்படி நிதி அமைச்சர், மதுவரி ஆணையாளர் நாயகம், மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர்கள், மாவட்ட அரச அதிபர்கள் ஆகியோரைச் சபை கோருகின்றது" என்று பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆலயங்கள், கல்விக் கூடங்களிலிருந்து 500 மீற்றர் தூரத்தினுள் மதுபான நிலையம் அமையக் கூடாதென்று சொல்லப்பட்டுள்ள போதும் மதுபான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று சபை உறுப்பினர்களும் பிரேரணையை ஆதரித்தனர். அவற்றைக் கண்டுபிடித்து அவற்றின் உரிமங்களை இரத்துச்செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

விளையாட்டுக் கழங்கள், விடுதிகளில் மதுபான பாவனைக்கு அனுமதியைப் பெற்று சில்லறை வர்த்தகத்தில் மதுபானங்களை விற்பனை செய்வதையும் தடுக்க வேண்டும் என்று சபையில் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் பிரேரணை ஏகமனதாக தீர்மானமாக்கப்பட்டது. (உ-5)

## வடக்கில்

மீள்குடி யேற்றம் மாகாண சபையினால் செய்யப்படுவதே பொருத்தமாக இருக்கும். ஆனால் தற்போது அரசு பல குழுக்கள் மூலம் இதனை செய்ய முன்வந்திருப்பதால், இந்தப் பணியைச் செய்யும் பொறுப்பை எமது சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

'வடபகுதியிலிருந்து இடப் பெயர்வினால் வெளியேறி மீளக்குடியேறவுள்ள மக்களை குடியேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தலைமையில் வடக்கு மாகாண சபையே மேற்கொள்ள வேண்டும். இந்த மீள்குடியேற்றத்துக்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வடக்கு மாகாண சபை ஆயத்தமாக உள்ளதென்பதையும் இச்சபை ஏற்றுக் கொள்கின்றது' என்று முன்வைத்த பிரேரணை, சபையின் ஏகமனதான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (த-5)

## வவுனியா

எழுந்தனர். சகல உறுப்பினர்களும் தவிசாளர் முன்பாக சபா பீடத்தின் நடுவே கூடினர். இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா அரச அதிபர் இந்த வருட ஆரம்பத்தில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளை அவமரியாதை செய்யும் விதத்தில் நடந்து கொண்டார், இது தொடர்பில் மாகாணசபையில் ஏற்கனவே பேசப்பட்டது, கண்டனமும் தெரிவிக்கப்பட்டது. அரச அதிபரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆனாலும், முதலமைச்சரோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளோ இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. இந்த விடயத்தில் உடனடித் தீர்வு தேவை" என்று வலியுறுத்தினர்.

ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிடுகையில், "வவுனியா மாவட்ட அரச அதிபர் சிங்களவர் என்பதால் நாம் இந்தப் போராட்டத்தைச் செய்யவில்லை. தமிழராக இருந்தாலும், மக்கள் பிரதிநிதிகளை அவமரியாதை செய்யும் அரச உத்தியோகத்தர்களை அனுமதிக்க முடியாது. நாம் அதற்காகவே கவனவீர்ப்பு செய்கின்றோம்" என்று குறிப்பிட்டனர்.

இதன் பின்னர் அவைத் தலைவர், இது தொடர்பில் மாகாணசபையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட பிரேரணையைக் கூட்டமைப்பின் தலைமைப் பீடத்துக்கு அனுப்பி வைத்துள்ளமை தொடர்பில் சுட்டிக்காட்டி இந்த விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். இதன் பின்னரே உறுப்பினர்கள் தமது ஆசனங்களுக்கு திரும்பிச் சென்று அமர்ந்தனர். (உ-5)

## மோதிவிட்டு

மீன்பிடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே உதயநாதன் விபத்தில் சிக் கினார். அவ்வழியே சென்ற பொது மக்கள் அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்துவிட்டார்.

இந்த நிலையில் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் உதயநாதனை மோதியது ஓட்டோ என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரின் ஓட்டோவைக் கைப்பற்றியுள்ளனர். அதனது சாரதியையும் கைது செய்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் சந்திப்பில் பேசியவை என்ன?

## விமல் வீரவன்ஸ கேள்வி



கொழும்பு, ஜூன் 10

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, விடுதலைப்புலிகள் ஆதரவு அமைப்பான உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த அருட்தந்தை இம்மானுவேல் மற்றும் நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் லண்டனில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு என்ன காரணம் உள்ளது? இவர்கள் அங்கு பேசியது என்ன?

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு, நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அரசு ஒருபக்கத்தில் 300 வரையான கடும்போக்கு விடுதலைப் புலிக் கைதிகளை விடுதலை செய்யத் தயாராகின்றது. ஏற்கனவே சிலருக்குப் பிணை வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகங்களுக்கு வழங்கியுள்ள அறிவிப்பிலிருந்து இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருபக்கத்தில் கடும்போக்கு விடுதலைப்புலிச் சந்தேகநபர்களை இல்லை, இல்லை பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உள்ள விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மறுபக்கத்தில் அருட்தந்தை இம்மானுவேலுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர லண்டனில் பேச்சு நடத்தியுள்ளார். இந்தப் பேச்சுக்களில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் பங்கேற்றுள்ளார். அதேபோல் சொல்ஹெய்மும் பங்கேற்றுள்ளார்.

சொல்ஹெய்ம், சுமந்திரன், பார்தர் இம்மானுவேல், மங்கள சமரவீர ஆகிய நான்கு பேரும் ஒன்றுசேர்ந்து பேசுவதற்குரிய விடயதானம் என்னவுள்ளது? இவர்கள் முன்நகர்த்த முனையும் நிகழ்ச்சித் திட்டம் என்ன? மீண்டும் சர்வதேசத்துக்கு ஏற்றவகையில் இலங்கைப் பிரச்சினையில் தலையீடு செய்வதற்கு இடமளிக்கும் செயலையல்லவா இவர்கள் செய்கின்றனர்.

இங்கே சந்திரிகா அம்மையாரிடம் சகவாழ்வை ஏற்படுத்தும் பிரிவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. சொல்ஹெய்மையும் உள்ளடக்கிக் கொண்டு லண்டனில் பார்தர் இம்மானுவேலுடன் மங்கள சமரவீர பேச்சு நடத்தியுள்ளார். இவர்கள் நாட்டை எங்கே கொண்டு செல்லப் பார்க்கின்றனர்.

தற்போது முன்நகர்த்தப்பட்டுள்ள நடவடிக்கைகளை நோக்குமிடத்தே அடுத்த பொதுத்தேர்தலில் இவர்கள் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றினால் பிரிவினைவாத வேலைத்திட்டம் மீண்டும் வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்லப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதேவேளை, ஒருபக்கத்தில் சர்வதேச விசாரணைக்கு ஒத்துப்போகும் வகையில் உள்ளக விசாரணை நடத்தப்படுகின்றது. யு.என்.டி.பியின் இலங்கைப் பிரதிநிதியின் அறிக்கையின் படி இந்த உள்ளக விசாரணைக்கு ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் தலைமைத்துவம் வழங்கும் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒத்துழைப்பு, தொழில்நுட்ப உதவி போன்ற விடயங்களும் அதில் உள்ளன. ஆனால், அதற்கு மேலாக இந்த விசாரணைக்கு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தலைமைத்துவம் அளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தலைமைத்துவம் வழக்கப்படுகின்றது என்பதனால் அர்த்தப்படுத்தப்படுவதென்ன? உள்ளக விசாரணையை சர்வதேச விசாரணைக்கு ஈடாகக் கொண்டுசெல்லுகின்ற விசாரணை என்பதாகும். அதிலும் செப்ரெம்பரில் ஜெனிவாவில் வழங்கப்படும் தீர்ப்புக்கு ஈடான தீர்ப்பு வழங்கப்படும். கூட்டுப்படுகொலை இடம்பெற்றதாக நாமே ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும். இலங்கையில் நடக்கும் விசாரணையிலேயே தமிழினக் கூட்டுப்படுகொலை இடம்பெற்றதாக ஏற்றுக்கொண்டதாகிவிடும்.

கூட்டுப்படுகொலை இடம்பெற்றதாக ஏற்றுக்கொள்வதே இந்த நாட்டில் தமிழர்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டுள்ளதாகக் கூறி தனிநாடொன்றை ஸ்தாபிப்பதற்கு அவர்களுக்கு உரிமையுள்ளதெனக் நியாயப்படுத்துவதற்கு வழிகோலியதாகிவிடும்.

சர்வதேச அரங்கில் இந்த நியாயப்பாட்டைவலுவுள்ளதாக்கும்வேலைத் திட்டம் குறித்தே லண்டனில் இவர்கள் கூடிக் கதைக்கின்றனரல்லவா? தடைசெய்யப்பட்ட அமைப்பான உலகத் தமிழ் பேரவையுடன் பேச்சு நடத்தியமைக்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைக் கைதுசெய்யவேண்டும் –என்றார். (த–சி)

# பாக். இராணுவத் தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 10

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரஹீல் ஜரீப் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இரு நாடுகள் மற்றும் வலய ஒத்துழைப்பு குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)

# சம்பூர் நாகதம்பிரான் கோயிலில் 10 வருடங்களின் பின் வழிபாடு



திருமலை, ஜூன் 10

திருகோணமலை, சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவருகின்ற மக்கள், பத்து வருடங்களின் பின்னர் சம்பூரிலுள்ள நாகதம்பிரான் கோயிலில் பொங்கி வழிபாட்டில் ஈடுபட்டனர். கிளிவெட்டி, கட்டைப்பாஞ்சான், மணற்சேனை, பட்டித்திடல் ஆகிய நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்ற மக்களே இவ்வாறு வழிபாட்டில் ஈடுபட்டனர். (த)

# 20 ஆவது திருத்தத்தின் புதுக்கணக்கை ஏற்கோம்

## கூறுகின்றார் மனோ கணேசன்

அமைச்சரவையில் பிரதமரினால் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட 20ம் திருத்த யோசனையில் உள்ளடங்கியுள்ள தொகுதிகள் 125+ மாவட்ட விகிதாசாரம் 75+ தேசிய விகிதாசாரம் 25 என்ற புதிய கணக்கை தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்காது என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எங்கள்கூட்டணியின்கடும்எதிர்ப்பை நமது பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்துக் கூறியுள்ளார் எனவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது:–

புதிய நிலைமைகளை ஆராய்வதற்காக சிறு கட்சிகளின் பேரவைக் கூட்டம் நாளை கூட்டப்படவுள்ளது. கடந்த திங்கட்கிழமை காலை வரை நாம் ஜனாதிபதியால் கட்சித் தலைவர்களுக்கும், அமைச்சரவைக்கும் வழங்கப்பட்ட யோசனைகளையே பரிசீலித்து வந்தோம். அந்த யோசனையில் தொகுதிகள் 165 + மாவட்ட விகிதாசாரம் 31+ தேசிய விகிதாசாரம் 59 என்றே இருந்தது. இந்நிலையில் திடீரெனத் திங்கட்கிழமைமாலை புதிய கணக்கு அமைச்சரவைக்கு வந்துள்ளது.

20ஆவது திருத்தத்தின் அடிப்படை விருப்பு வாக்கு முறைமையை அகற்றுவதும், தொகுதிக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதும் ஆகும். இதை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

அதில் மீள் நிர்ணய ஆணைக்குழுவின் மூலம் வடக்கு–கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்குப் புதிய தனித் தொகுதிகளும், பல்–அங்கத்தவர் தொகுதிகளும் உருவாக்கித் தரப்படும் என்று உறுதி வழங்கப்பட்டது. 165 தொகுதிகள் என்று சொல்லும் போது அதற்குள் புதிய தனித் தொகுதிகளும், பல்–அங்கத்தவர் தொகுதிகளும் வழங்கப்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், புதிய கணக்கின்படி 125 தொகுதிகளுக்குள் புதிய தனி மற்றும் பல்–அங்கத்தவர் தொகுதிகள் உருவாக்க இடமில்லை. எனவே புதிய யோசனையை நாம் ஏற்க மாட்டோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தப் புதிய யோசனைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். இது பற்றி இன்று நான் அவரிடம் பேசி, எமது எதிர்ப்பைத் தெரிவித்தேன். தான் இந்த யோசனையை ஐ.தே.க யோசனையாக அமைச்சரவையில் சமர்பிக்கவில்லை எனவும், ஏற்கனவே சமர்பிக்கப்பட்ட பல்வேறு யோசனைகளை சமநிலைப் படுத்தவே இந்த யோசனைகளை தான் சமர்ப்பித்ததாகவும் அவர் எனக்குப் பதில் கூறியுள்ளார்.

மேலும் இவற்றைச் சிறுபான்மையினர் ஏற்க மறுப்பதால் சிறுபான்மைக் கட்சிகளுடன் ஒரு கலந்துரையாடலை ஜனாதிபதி நடத்தவேண்டும் எனவும் தான் ஜனாதிபதிக்கு யோசனை கூறியுள்ளதாகவும் பிரதமர் என்னிடம் கூறினார். எனவே நமது கூட்டணி ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளது.

இதை நாம் அனுமதிக்க முடியாது. இதுபற்றி நான் இன்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுடனும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் கலந்துரையாடியுள்ளேன். நாளை வியாழக்கிழமை, நமது சிறு கட்சிகளின் பேரவையை கூட்டி, தொகுதிகள், மாவட்ட விகிதாசாரம், தேசிய விகிதாசாரம் பற்றிய நமது யோசனையையும், இரட்டை வாக்கு முறைமை பற்றியும் இறுதி முடிவுகளை எடுக்க தீர்மானித்துள்ளோம்–என்றார். (த)

## சஜின் வாஸ் பிணை கோரி மனுத் தாக்கல்



கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, கொழும்பு உயர் நீதிமன்றத்தில் பிணை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

ஏற்கனவே சஜின் வாஸ் குணவர்த்தன தாக்கல் செய்திருந்த பிணை மனுவைக் கொழும்பு கோட்டே நீதிவான் பிரியந்த லியனகே நிராகரித்து எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்திருந்தார்.

உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

# மனைவியை துன்புறுத்திய கணவனை குதறியது நாய்

## 35 இடங்களில் காயம்



கம்பளை, ஜூன் 10

மனைவியை அடித்து துன்புறுத்திய கணவனை அவர்களின் வளர்ப்பு நாய் கடித்துக்குதறிய சம்பவம் ஒன்று கம்பளையில் இடம்பெற்றுள்ளது.

தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வரும் குறித்தநபர் மனைவி, பிள்ளைகளுடன் சண்டையிடுவார்.

இந்தச் சந்தர்ப்பங்களில் அம்மு என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படும் குறித்த நாய், இடை நடுவே புகுந்து குரைப்பதும் அந்த நபரைக் கடிப்பது போல் பாசாங்கு காட்டியும் வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை வழமைபோல் சண்டை நடந்த வேளை குறித்த நாய் பலமாக குரைத்தும் சண்டை நிற்காததையடுத்து, அந்த நபரின் மீது ஆவேசமாகப் பாய்ந்து கடித்துக் குதறியுள்ளது.

படுகாயமடைந்த நபர் கம்பளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த நபரின் உடலில் 35 இடங்களில் நாய் கடித்துக் குதறிய காயங்களுடன், கீறல் காயங்களும் உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

காயங்களுக்கு 21 தையல்களும் இடப்பட்டுள்ளதாகக்கூறப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

அ.பொன்கலன் ஞாபகார்த்தக் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று புதன் கிழமை பி.ப. 3மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் லயன்ஸ் அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதவுள்ளது.

*யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்*

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடர் தற்பொழுது நடைபெற்றுவருகிறது.இந்தத்தொடரில்இன்றுபுதன்கிழமைஇடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

*13 வயதுப்பிரிவு பெண்கள்*

13வயதுப்பிரிவின் பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி பிற்பகல் 3 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

*15வயதுப்பிரிவு பெண்கள்*

15 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இந்து மகளிர் கல்லூரி அணி பிற்பகல் 4.15மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

*15வயதுப்பிரிவு ஆண்கள்*

15வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி பிற்பகல் 4.15 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

*17வயதுப்பிரிவு ஆண்கள்*

17வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது. (ம-23)

**கொலின்ஸ் வி.கழகத் தொடர்**

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று புதன் கிழமை கழக மைதானத்தில் இடம் பெறும்ஆட்டங்களில்பி.ப 3மணி- அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் அணி பிற்பகல் 3 மணிக்கு மோதவுள்ளது. பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில்கட்டைக்காடுசென்.மேரிஸ் அணியை எதிர்த்து வல்வை ஆதி சக்திஅணிமோதவுள்ளது.(ம-108)

**கலைவாணி வி.க.தொடர்**

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும், 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று புதன் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடற் கல்வி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பி.ப.4.30 மணிக்கு இடம்பெறும்ஆட்டத்தில்இளவாலை சென். ஹூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மோத வுள்ளது. (ம-108)

## திரில் வெற்றியுடன் அடுத்த சுற்றுக்குள்

# இமையாணன் மத்தி



கரணவாய் ஜூன் 10

பலத்த போராட்டத்தின் பின்னர் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தை சமனிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம்.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதின.

இரண்டு அணிகளிலும் பெரும்பாலான வீரர்கள் இளம்வீரர்களாக மாற்றப்பட்டிருந்த காரணத்தினால் ஆட்டத்தில் ஆரம்பம்முதலே சிறந்த துடிதுடிப்புத் தன்மை காணப்பட்டது. இதன் பயனாக ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் இமையாணன் மத்திய அணியின் வீரன் தனுசாந் மைதானத்தின் மத்திய பகுதியில் வைத்து கோலொன்றை விளாசி வித்தை காட்டினார். 1:0 என்ற அடிப்படையில் இமையாணன் ஆதிக்கம் செலுத்திய போதிலும் இந்த ஆதிக்கம் மிகவும் குறுகிய நிமிடங்களே நிலைத்திருந்தது. ஆட்டத்தின் கலைவாணி அணியின் வீரன் கோலொன்றை அடித்து பழிதீர்க்க, ஆட்டத்தில் சமநிலை பேணப்பட்டது. இந்த நிலைமை நீடிக்க முதல்பாதியின் முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தனர்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் மீண்டும் ஒரு கோலுக்காக படாத பாடுபட்டனர். ஆனாலும் எந்த அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இந்த நிலைமை ஆட்டத்தின் முடிவுவரை நீடிக்க ஆட்டம் சமநிலையானது. ஆட்டத்தின் வெற்றிதோல்வி முடிவு சமநிலைத் தகர்ப்பு உதைகளிடம் தஞ்சமடைந்தது.

வாய்ப்பைச் சரியாகப்பயன்படுத்திய இமையா ணன் மத்தி 3:2 என்ற அடிப்படை யில் வெற்றிபெற்று அடுத்த சுற் றுக்கு தகுதியானது.

இதைவிட கடந்த சனிக்கழமை நடைபெற்ற ஆட்டங்களில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் வல்வை விளையாட்டுக் கழகத்தை 2:0 கோல் கணக்கிலும் மானிப்பாய் ரெட்ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்தை 6:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.(ம-108)

## வடமாகாண உதைபந்தாட்டத் தொடர்

## போராடி வென்றது தெல்லிப்பழை மகாஜனா




வலி வடக்கு, ஜூன் 10

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெண்கள் உதைபந்தாட்ட அணி இரண்டாவது தடவையாகவும் வட மாகாண கிண்ணத்தைக் கைப்பற்றி அசத்தியுள்ளது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்ட தொடரின் இறுதி ஆட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாதகல் சென். ஜோசப் றோமன் கத்தோலிக்க வித்தியால யமும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் மோதிக் கொண்டன.

நடப்பாண்டில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற வலயம் மற்றும் மாவட்டம் தொடர்களில் ஏற்கனவே மோதிய இந்த இரண்டு அணிகளும் மீண்டும் மாகாண மட்டத்திலும் மோதிக் கொண்டமையால் ஆட்டம் அனல் பறந்தது.

ஆட்டத்தின் முதல்பாதியில் மகாஜனக் கல்லூரியின் வீராங்கனை சானு தனது அணிக்கான முதலாவது கோலை அடிக்க 1:0 என்று மகஜனா முன்னிலை வகித்ததுடன் மகாஜனாவின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவடைந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் மகாஜனாவின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்து ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற முனைப்பில் சென்.ஜோசப் வீராங்கனைகளும் மற்றொரு கோலைப் பதிவு செய்ய வேண்டும் அல்லது குறைந்தபட்சம் சென்.ஜோசப்பை கோலடிக்க விடாது தவிர்க்க வேண்டும் என்ற முனைப்பில் மகாஜனாவும் தீவிரமாக ஈடுபட்டன. இரண்டாம் பாதியில்இரண்டு அணிகளாலும் ஒரு கோலையும் பதிவுசெய்ய முடியவில்லை.

முடிவில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் மாதகல் சென்.ஜோசேப் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தை வெற்றி பெற்று சம்பியனாகியது. (ம-86)

## யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன், 10

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள்

15வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இந்து மகளிர் கல்லூரி அணி 16:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.இந்துக்கல்லூரி அணி 50:37என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.இந்துக்கல்லூரி அணி 63:48 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## சிங்கர் கிண்ண துடுப்பாட்டத் தொடர் மகாஜனா அபார வெற்றி

வலி வடக்கு, ஜூன் 10

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் சிங்கர் கிண்ணத்துக்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் மூன்றாம் பிரிவு 15 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையே நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்றில் மகாஜனக் கல்லூரி 89 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி பலப்பரீட்சை நடத்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 09 இலக்குகளை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சர்மிலன் 16 பவுண்டரிகள் அடங்கலாக 105 ஓட்டங்களையும், ரிசாந் 10 பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களையும், பக்ரதன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நெல்லியடி மத்திய கல்லூரி சார்பில் விஜிபன் 3 இலக்குகளையும் ஸ்ரீ கிருஸ்ணா 02 இலக்குகளையும் ஹம்சன், தர்சிகன், அபிசன் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

300 பந்துகளில் 266 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்குதுடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி 39.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களை மட்டுமே பெற்று 89 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக தர்சிகன் ஆறு பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்சருடன் 60 ஓட்டங்களையும் அபிதன் 28 ஓட்டங்களையும் சிந்துஜன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி சார்பில் றேனுஜன் 3 இலக்குகளையும் ரிசாந் 02 இலக்குகளையும் நீல்ஜோன்சன், கிரிசன், சர்மிலன் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஜூன் 10 புதன்கிழமை உதயன்



விராட் ஹோக்லி

# பாகிஸ்தானின் பரிதாப நிலைமையா இந்தியாவுக்கும்
# இந்தியா பங்களாதேஷ் தொடர் இன்று

இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவதும் இறுதியானதுமான ஒரேயொரு டெஸ்ட் ஆட்டம் இன்று பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ளது. இன்றைய ஆட்டத்தைப் பொறுத்த மட்டில் பலம்மிக்க இந்திய அணியினை

### சதத்தில் சாதனையை நோக்கி ஹோக்லி

ஆஸ்திரேலியா – இந்தியா தொடரில் விராட் ஹோக்லி 4 சதங்களை விளாசினார். தலைமைத்துவத்தில் மட்டும் 3 சதங்களை எடுத்தார். இந்த நிலையில் பங்களாதேஷுக்கு எதிரான இன்றைய தொடரில் இன்னமும் ஒரு சதம் அடித்தால் முதல் 3 டெஸ்டில் 4 சதங்களை அடித்த முதல் தலைவர் என்ற வரலாற்று சாதனையை படைப்பார். இதனால் இன்றைய ஆட்டத்தில் ஹோக்லி மீதும் எதிர்பார்ப்புக்கள் எகிறியுள்ளன.

பங்களாதேஷ் அச்சுறுத்தும் நிலைப்பாடு காணப்பட் டாலும் ஆச்சரியப்படுவதுக்கு இல்லை என்ற நிலைமையே பரவலாக வுள்ளது.

உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்க்கு முன்னர் இருந்த பங்களாதேஷ் வேறு தற்போதுள்ள பங்களாதேஷ் வேறு. சகல துறைகளிலும் மிரட்டிக்கொண்டிருக்கும் பங்களாதேஷுற்கு சொந்த மண்ணின் பலமும் இன்று கைகொடுக்கும். ஒவ்வொரு அணியும் தமது மண்ணில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அணிகள் தான். இதற்கு பங்களாதேஷ் விதிவிலக்கல்ல. கிட்டத்தட்ட இந்தியாவுக்கு நிகரான பலமுடைய பாகிஸ்தானை தமது சொந்த மண்ணில் வைத்து புரட்டியெடுத்த பங்களாதேஷ் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை முழுமையாகக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனையை படைத்திருந்தது. அதே உத்வேகத்துடன் பங்களாதேஷ் செயற்படும் பட்சத்தில் இன்றைய ஆட்டத்தில் இந்தியாவையும் திணறடிக்கலாம்.

இதைவிட உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா பங்களாதேஷ் அணிகள் மோதிய காலிறுதியாட்டத்தில் ரோகித் சர்மாவுக்கு முறையற்ற பந்து ஒன்றை நடுவர் பிழையாக தீர்ப்பளித்தது பங்களாதேஷின் தோல்விக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக மாறியது. இந்த நிலையில் இன்றைய ஆட்டத்தில் உலகக் கிண்ணத் தொடரில் இருந்து தாம் வெளியேறக் காரணமாக விருந்த இந்தியாவை பழிதீர்த்தேயாகவேண்டும் என்ற கட்டாயத் தில் உள்ளது பங்களாதேஷ்.

ஆனால் இந்தியா என்றால் சும்மாவில்லை. ஆக்ரோஷமான ஹோக்லியின் தலைமையில் பெரும்பாலான இளம் வீரர்களைக் கொண்ட அணி களமிறங்குகிறது. ஐ.பி.எல். தொடரின் அசத்தல் கள் எல்லாம் வீரர்களின் திறன்களை இரட்டிப்பாக்கிவிட்டிருக் கின்ற காரணத்தினாலும் இதற்கு முன்னர் இந்த அணிகளுக் கிடையில் நடைபெற்ற அத்தனை தொடரையும் இந்தியாவே கைப்பற்றிய காரணத்தினாலும் இந்திய அணி தனது தொடர் சாதனைகளை அவ்வளவு எளிதில் விட்டுவிடாது. (ம)

### அரைச்சதத்தில் சாதனையை நோக்கி மொனிமுல்

தொடர்ச்சியாக 11 டெஸ்ட் ஆட்டத்தில் அரைச்சதம் விளாசியுள்ள மொனிமுல் ஹக் இன்றைய ஆட்டத்திலும் அரைச் சதத்தைப் பதிவுசெய்தால் தொடர்ச்சியாக 12 அரைச்சதம் பெற்றவர் என்ற வில்லியர்ஸின் சாதனையை சமன் செய்யலாம். இதனால் இன்றைய ஆட்டத்தில் மொனிமுலின் பெறுபேறை பங்களாதேஷ் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த் துள்ளார்கள்.

## மெஸ்ஸியின் குழந்தையாக கிறிஸ்டியானோ ரொனால்டோ இணையத்தில் கலாய்ப்பு


தற்போதைய கால்பந்து உலகில் போர்த்துக்கல் அணித் தலைவர் ரொனால்டோவும் ஆர்ஜென்டினா அணித் தலைவர் மெஸ்சியும் முன்னணி நட்சத்திர வீரர்களாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் ரொனால்டோ ரியல்மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். மெஸ்சி பார்சிலோனா அணிக்காக விளையாடுகிறார். இந்த நிலையில் சம்பியன்ஸ் லீக் கால் பந்து தொடரில் நடப்பு சம்பியனான ரியல்மாட்ரிட் அணி அரையிறுதியில் ஜுவான்டஸ் அணியிடம் தோல்வியடைந் தது.

அதோடு கோபா டெல்ரே, ஸ்பெயின் தொடர்களிலும் ரியல்மாட்ரிட் அணி கிண்ணத்தை வெல்ல முடியவில்லை. மிக முக்கியமான இந்த 3 தொடர்களிலும் பார்சிலோனா அணி தான் தற்போது சம்பியனாகியுள்ளது.

இதனால் தொடர் தோல்விகளை சந்தித்த ரொனால்டோ வையும் அவரது ரியல் மாட்ரிட் அணியையும் மெஸ்ஸியின் ரசிகர்கள் கிண்டலடித்து வருகின்றனர். இந்த வரிசையில் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்துடன் மெஸ்சி தனது மகனுடன் இருப்பது போன்ற படங்கள் அண்மையில் வெளிவந்தன. தற்போது அந்த படத்தில் மெஸ்சியின் குழந்தையை நீக்கி விட்டு அதில் ரொனால்டோவின் முகத்தை மாற்றி ரொனால்டோ மெஸ்ஸியின் குழந்தை என்பதனைப்போல சித்தரித்து படத்தை வெளியிட்டுள்ளனர். (ம)





## சர்வதேச கால்பந்து சம்மேளனத்துக்கு மேலும் நெருக்கடி

### கடந்த உலகக்கிண்ண தொடர்களிலும் ஊழல்



உலகக்கிண்ண கால்பந்து தொடரை நடத்தும் அனுமதியைப் பெறுவதற்கு தென்னாபிரிக்கா சர்வதேச கால்பந்து சம்மேளனததுக்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 170 கோடிகள் லஞ்சம் கொடுத்தமை தற்பொழுது வெளிவந்துள்ளமை சர்வதேச கால்பந்து சம்மேளனத்துக்கும் முன்னாள் தலைவரான செப் பிளாட்டருக்கும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ரஷ்யாவிலும் 2022 ஆம் ஆண்டு கட்டாரிலும் நடத்த திட்டமிடப்பட்டு குறித்த தொடர்களுக்கான உரிமங்களும் அந்தந்த நாடுகளிடம் கையளித்தாயிற்று. ஆனால் இந்த உரிமங்களை குறித்த நாடுகளுக்கு வழங்குவதற்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் லஞ்சம் பெற்றதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் உபதலைவர் உட்பட அதிகாரிகள் 7 பேர் இந்த ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள். எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து சர்வதேச கால்பந்து சம்மேளனத்துக்கு உலகெங்கும் பல எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்திருந்தன. பிளாட்டர் பதவி விலகவேண்டும் என்ற குரல்கள் வலுப்பெற்றன. இந்த நிலையில் கடந்த 2010ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்து தொடரை தென்னாபிரிக்கா நடத்துவதற்கு உரிமம் தருவதற்காக மட்டும் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 170 கோடிகளை சர்வதேச கால்பந்து சம்மேளம் வாங்கியதாக தென்னாபிரிக்கா முன்னாள் ஜனாதிபதியான தாபோ தெரிவித்துள்ளார்.

எனவே இவை அனைத்தும் நிரூபணமானால் 2018ஆம் ஆண்டு மற்றும் 2022ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரினை நடத்தும் உரிமத்தைப் பெற்றுள்ள ரஷ்யா மற்றும் கட்டாரின் உரிமங்கள் பறிமுதல் செய்யப்பட வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## ஹமில்டன் வலுவான ஆதிக்கம்



19 சுற்றுக்களாக நடத்தப்படும் உலக கார்ப்பந்தயத் தொடரின் ஏழாவது சுற்றில் நடப்புச் சம்பியனான லூயிஸ் ஹமில்டன் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த ஏழாவது சுற்று கனடா கிராண்ட்பிரீ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து வீரர் ஹமில்டன் பந்தய தூரத்தை 1 மணி 31 நிமிடம் 53.14 வினாடியில் கடந்து முதலிடத்தைக் கைப்பற்றினார். இரண்டாவது இடத்தை ஜெர்மனி வீரர் ரஸ்பேர்க் கைப்பற்றிய அதேநேரம் மூன்றாவது இடத்தை பின்லாந்து வீரர் போட்டஸ் கைப்பற்றினார்.

நடப்பு சம்பியனான ஹமில்டன் இந்த சீசனில் பெற்ற 4ஆவது வெற்றி இதுவாகும். அவர் ஏற்கனவே ஆஸ்திரேலியா, சீனா, பக்ரைன், நாடுகளில் வென்றுள்ளார். 7 சுற்றுகள் முடிவில் ஹமில்டன் 157 புள்ளிகள் பெற்று முன்னிலையில் உள்ளார். ரஸ்பேர்க் 134 புள்ளியுடன் 2ஆவது இடத்திலும், செயிஸ்டியன் வெட்டல் 108 புள்ளியுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர். எட்டாவது சுற்று ஆஸ்திரேலியாவில் வருகிற 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்கா சுமார்



இங்கிலாந்தின் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரிரல் சர்ரே அணிக்காக விளையாடிவரும் சங்கா நேற்று முன்தினம் 21 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பி சுமாரான பெறுபேற்றை வெளிப்படுத்தியுள் ளார்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த ஆட்டத்தில் சர்ரே அணியை எதிர்த்து லெய்–ஸ்ரியர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சர்ரே ஆரம்பத்தில் பலமான நிலையில் இருந்தாலும் சங்காவின் ஆட்டமிழப்புடன் சரிவு கண்டது. பின்னவரிசை வீரர்கள் முழுமையாக பத்து ஓட்டங்களை நிறைவு செய்யவே படாதபாடு பட்டு வெளி யேற முடிவில் சர்ரே 261 ஓட்டங்களில் சுருண்டது. இந்த ஆட்டத்தைப் பொறுத்த மட்டில் சங்காவின் பெறுபேறு சுமார்.

(ம)




## சர்வதேச ரென்னிஸ் தரவரிசை
## ஜோகோவிக், செரீனா தொடர்ந்தும் முதலிடத்தில்





பிரான்ஸ் ரென்னிஸ் தொடர்நிறைவடைந்த நிலையில் புதிய தர வரிசைப் பட்டியல் சர்வதேச ரென்னிஸ் சம் மேளனத்தால் நேற்று வெளியிடப்பட்டது.

*ஆண்கள் பிரிவு*

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் ஜோகோவிக் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் தோல்வியடைந்த போதிலும் அவரது அரியணையை யாரும் நெருங்கும் தூரத்தில் இல்லை. ரோஜர் பெடரர் இரண்டாவது இடத்திலும், ஆன்டி முர்ரே மூன்றாவது இடத்திலும், பிரான்ஸ் கிண் ணத்தை முதல் தடவையாக கைப்பற்றிய வாவ்ரிங்கா நான்காவது இடத்திலும் நிஷிகோரி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். வருட ஆரம்பத்தில் தரப் படுத்தலில் மூன்றாவது இடத்தில் இருந்த நடால் தொடர்ந்து சொதப்பி வரும் காரணத்தினால் பத்தாவது இடத்துக்கு பின்தங்கியுள்ளார். 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத் திற்கு பிறகு நடாலின் மோசமான தரவரிசை இதுவாகும்.

*பெண்கள் பிரிவு*

பெண்கள் ஒற்றையர் பிரிவில் 20 ஆவது சர்வதேச கிண்ணத்தை வென்று வலுவான ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் முதலிட சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்துள்ளார். செக்குடியரசின் பெட்ரா கிவித்தோவா 2 இடங்கள் ஏற்றம் பெற்று மீண்டும் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார். மூன்றாவது இடத்தில் சிமோனா ஹலேப் உள்ளார். நான்காவது இடத்தில் செரபோவாவும் ஐந்தாவது இடத்தில் வோஸ்னியாக்கியும் உள்ளனர்.

(ம)

Tamilcnn.com
TAMIL COMMUNITY NEWS NETWORKS
உண்மைகள் உடனடியாக உலகிற்கு...

## தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், மல்லாவி, மன்னார், தலைமன்னார், வவுனியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த விளம்பரம், செய்தி சேகரிப்பாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
North@Tamilcnn.com
021 222 3303, 077 88 66 832

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதியில் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் அருகில் (24 9ஆம் Km) சகல வசதிகளையும் கொண்ட,தற்போது UN HABITAT நிறுவனம் இயங்கி வரும் 3042 சதுர அடி கொண்ட மாடி வீடு 2015ஜூலை முதலாம் திகதிக்குப் பின்னர் வாடகைக்கு விடப்படும். அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
குமரன்- 077 230 6515
ரவி - 0047 911 666 90

உதயன் advt@uthayan.com 0215671111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

உதயன்

10 ஜூன் 2015 புதன்கிழமை

> வாழ்க்கையில் உண்மைப் பொருளை அறியாமல் இதுவும் அதுவும் செய்வதில் உயிரை மாய்த்துக் கொண்டு அமைதியிழந்து போவது மதியீனம்.
>
> — *மார்க்க அரேலியர்*

# வேள்வி

*ராஜராஜன்*

இந்து ஆலயங்களில் மீண்டும் மிருகங்களை வெட்டிக் காணிக்கை செலுத்தும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நடைமுறை சர்வ சாதாரணமாகவே இடம்பெற்று வந்தது. அப்போதெல்லாம் ஊர்தோறும் அண்ணமார், வைரவர், ஐயனார் போன்ற தெய்வங்களுக்கான ஆலயங்கள் பரவலாகக் காணப்பட்டு வந்தன. மக்கள் இந்தத் தெய்வங்களையே தமது காவல் தெய்வங்களாகவும் கருதி வழிபட்டு வந்தனர். வைகாசி



மாதத்தில் பலாப்பழம், மாம்பழம் உள்ளிட்ட பழவகைகள் தாராளமாகக் கிடைக்கும். இதனால் அனேகமாக இந்த மாதத்தில் மேற்கூறப்பட்ட ஆலயங்களில் வேள்வி என்ற பெயரில் பெரியளவிலான பூசை, வழிபாடுகள் இடம்பெறுவது வழமையாக இருந்தது. அப்போது இந்த ஆலயங்களில் மிருக பலியும் இடம்பெறுவது வழமையாகும்.

வேள்வி இடம்பெறப்போகும் நாள் நெருங்கி விட்டால் அந்த ஊரே விழாக்கோலம் பூண்டு விடும். பொருளாதாரக் கஷ்டம் உள்ளவர்கள் கூட அதனை மறந்து மற்றவர்களுக்கு ஈடாக மடை வைத்து தெய்வங்களுக்குப் படைப்பதில் முன் நிற்பார்கள். ஆலயங்களில் வெட்டிச் சரிப்பதுக்கென்றே ஆட்டுக் கடாக்கள் வளர்க்கப்படும். இவற்றுக்கு நல்ல உணவுகளைக் கொடுப்பதில் அவற்றின் உரிமையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள். வேள்வியில் தமது கடாக்கள் முன்னிலை பெற வேண்டும் என்பது இவர்களது பெருவிருப்பமாகக் காணப்படும். கடாக்கள் நன்கு போஷிக்கப்பட்டால் அவற்றை அதிக விலைக்கு விற்று விடலாம் என்ற எண்ணத்துடனும் சிலர் இருப்பார்கள்.

குறிப்பிட்ட தினத்தில் ஆலயத்தின் முன்பாக உள்ள ஒரு இடத்தில் கடாக்களை வெட்டும் நிகழ்வு இடம்பெறும். ஆலயத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பெரியதொரு கத்தியினால் கடாக்களின் தலைகள் உடலிருந்து தனியே விழும் வகையில் ஓங்கி வெட்டுவார். அப்போது குருதி கொப்பளித்து ஓடும். கடாவின் உடல் சில கணங்கள் துடிப்பதையும் காணமுடியும். ஒரே வெட்டில் கடாவின் தலை உருளும் போது அங்கு கூடி நிற்பவர்கள் கைதட்டியும், விசில் ஓசை எழுப்பியும் ஆரவாரம் செய்வார்கள். கோழிச் சேவல்களின் தலைகள் அறுக்கப்படும் போது அவற்றின் உடல்கள் சிறிது தூரம் அந்தரத்தில் பறந்து செல்வதையும் காணமுடியும். பின்னர் அங்கு வந்தவர்கள் கடாக்கள் மற்றும் கோழிகளின் உடல்களை விலை பேசி எடுத்துச் செல்வார்கள்.

இத்தகைய நடைமுறைகள் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. செ. இராசதுரை இந்து கலாசார அமைச்சராக இருந்த போது இந்து ஆலயங்களில் மிருகங்களை வெட்டிச் சாய்ப்பதுக்குத் தடை விதித்திருந்தார். இந்த நிலையில் வேள்விகள் இடம்பெற்ற ஏராளமான ஆலயங்கள் இந்து மதத்தின் பிரதானமான கொள்கையான கொல்லாமையைப் பின்பற்றத் தொடங்கியதுடன் அவற்றின் பெயர்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இதற்கு காலப்போக்கில் இந்து மதத்தைத்தழுவி நிற்கின்றவர்களின் மனங்களில் ஏற்பட்ட மாற்றங் களே பிரதான காரணமாகிவிட்டது. இவர்கள் விரதங்களை அனுஷ்டிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொணடதாலும் வேள்விகள் இடம்பெறுவது தானாகவே குறைந்து விட்டது. ஆனால் தற்போது குடாநாட்டிலுள்ள சில ஆலயங்களில் வேள்விகள் இடம்பெறுவதும் ஆடு, கோழி, போன்றவற்றை வெட்டிச்சாய்ப்பதும் இடம்பெற்று வருகின்றது. சிலர் இத்தகைய வேள்விகள் இடம்பெறாது தவிர்க்கப்பட்டதன் காரணமாகவே இங்கு பெரும் அழிவுகள் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். தெய்வங்களின் கோபமே இதற்குக் காரணமெனவும் கூறுகின்றனர். அவர்களின் நம்பிக்கையை விமர்சிக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது. ஒவ்வொருவருக்கும் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் செயற்படுவதற்கு உரிமையும் உண்டு. இடம்பெற்று முடிந்த வேள்விகள் கூட நீதி மன்றத்தின் வழிகாட்டுதலுக்கு அமையவே நடந்து முடிந்துள்ளன.

> **வேள்வி இடம்பெறப்போகும் நாள் நெருங்கி விட்டால் அந்த ஊரே விழாக் கோலம் பூண்டு விடும். பொருளாதாரக் கஷ்டம் உள்ளவர்கள் கூட அதனை மறந்து மற்றவர்களுக்கு ஈடாக மடை வைத்து தெய்வங்களுக்குப் படைப்பதில் முன் நிற்பார்கள். ஆலயங்களில் வெட்டிச் சரிப்பதுக் கென்றே ஆட்டுக் கடாக்கள் வளர்க்கப் படும்.**

இந்தியாவில் தோன்றிய திராவிட இயக்கங்கள் தெய்வங்களை வணங்குவது மூட நம்பிக்கை என்னும் கொள்கையைப் பிரதானமாகக் கொண்டவை. பெரியார் காலத்தில் தெய்வப்படங்களுக்கு செருப்பு மாலை அணிவிப்பதும், செருப்பால் அடிப்பதும் வழக்கமான நிகழ்வுகளாகக் காணப்பட்டன. ஆனால் திராவிட இயக்கங்களைப் பின்பற்றுபவர்களின் இன்றைய நிலை என்ன? தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா கூட திராவிட இயக்கத்தின் வழிவந்தவர்தான். ஆனால் அவர் இந்த இயக்கத்தின் கொள்கையைப் பின்பற்றுவதில்லை. மூடப் பழக்கவழக்கங் கள் எனத் தாம் சார்ந்த இயக்கத்தால் கூறப்பட்டவற்றை அவர் தவறாது கடைப்பிடித்து வருகின்றார். வாஸ்த்து சாத்திரத்தை அவர் தவறாது கடைப்பிடிக்கின்றார். எந்தக் காரியத்தை செய்வதுக்கு முன்பும், நல்ல நாள், நேரம் ஆகியவற்றைப் பார்க்கின்றார். ஆடைகள், ஆபரணங்கள், எழுதுகின்ற பேனா ஆகியவற்றில் கூட குறிக்கப்பட்ட நிறத்தைத் தேர்ந்தெடுக்கின்றார். ஆனால் இதை எவருமே விமர்சிப்பதாகத் தெரியவில்லை

ஆலயங்களில் மிருகங்களை வெட்டிக் காணிக்கை செலுத்துகின்ற வழக்கம் உலகின் ஒரேயொரு இந்து தேசமான நேபாளத்தில் இன்றும் தொடர்கின்றது. இதன் காரணமாகவே அங்கு கொடிய நிலநடுக்கம் ஏற்பட்டு பேரழிவுகளைச் சந்திக்க வேண்டியிருந்ததாகக் கூறுவோரும் உள்ளனர்.

இதை மறுப்பவர்களும் இல்லாமலில்லை. இந்துக்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்பவர்கள் புலால் உண்ணாமையை தமது மதத்தின் கோட்பாட்டுக்கமைவாகக் கடைப்பிடித்தால் எவருமே மிருகங்களை ஆலயங்களில் வெட்டி வீழ்த்துவதற்கு முன்வரமாட்டார்கள். இதில் தெய்வ நம்பிக்கையுடன் வியாபார நோக்கமும் கலந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. முதலில் வேள்வியையும், மிருகங்களை வெட்டுவதையும் குறை காண்பவர்கள் தமது மதத்தை சரிவரப் பின்பற்றப் பழக வேண்டும். நெற்றியில் திருநீறு அணிந்து கொண்டு புலாலைத் தேடி அலைவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. வேள்வி நடத்துவதும், மிருகங்களை வெட்டுவதும் ஆலயங்களில் இடம்பெற்றாலும் வெளியே தினமும் ஏராளமான மிருகங்கள் மனிதனின் புலால் தேவைக்காகக் கொல்லப்படுவதையும் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# வாலாயமாயமைந்த வைகாசி மாத கலையரங்கம்

மாதந்தோறும் ஒரு பெறுமதியான கலையரங்கை வடமாகாணம் தற்பொழுது பேறாக்கி வருகிறது. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய எல்லா மாவட்டங்களிலும் பாரம்பரிய கலைகளோடு இசை, நடனம், வாத்தியம், அரங்கேற்றம் என ஏதோவொரு கலையம்சம் மக்களுக்கு வரமாக்கப்படுகிறது. இந்தப் பணியில் மாகாண, வலய, கோட்ட பாடசாலைகளும், சம்பந்தப்பட்ட அமைச்சும் மேலும் தனியார் கலை மன்றங்களும் ஈடுபடும் நிலையில் குறிப்பாக வட இலங்கைச் சங்கீத சபையானது இதில் முதன்மை பெறுகின்றது. ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்தில் அமையும் சனியன்று இசையரங்கமும், நடன நிகழ்வும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், வைகாசி மாத நிகழ்வாக 30.5.2015 சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ச. விஜயருக் ஷாயினியின் இசை அரங்கமும், சிறப்பு இசை நிகழ்வாக சிதம்பரம் அண்ணாமலைப் பல் கலைக்கழக இசைவிரிவுரையாளர் சி.ஜி.சுந்தரம் தீட்சதரின் இசையரங்கும் மற்றும் கலைத்திறன் அழகியல் குடில் மாணவர்களின் நாட்டியாஞ்சலியும் வெகுசிறப்பாக நடைபெற்றன.

நேரம், மேடை, ஒலியமைப்பு, மண்டபம் யாவும் உரியவாறு பேணப்பட்ட நிலையில் தற்பரானந்தன் கலையரங்கு வரமீந்ததெனலாம்.

வித்தகி. செல்வி விஜயருக்ஷாயினி, ஹம்சத்வனி இராக, காவா கஜமுகா என்ற வி.வி. சுவர்ண வெங்கடேச தீட்சதரின் உருப்படியைப் பயபக்தியோடு பாடிய பாங்கானது, மண்டபத்தின் கட்டமைப்பை மகிழ்வுறச் செய்ததெனலாம். பிரதான உருப்படியாகத் தீட்சதரின் குருவே சரணம் என்ற சிம்மேந்திர மத்திம இராக உருப்படி மாலைப்பொழுதை இரம் மியமாக வரவேற்றதெனலாம். சரீர, சாரீர சுருதி லய அம்சங்களோடு அவரது ஏனைய உருப்படிகளும் இராக விழுமியங்களைப் பேணியதெனலாம். நல்லதோர் ஒத்துழைப்பை மிருதங்கக் கலைஞர் கண்ணதாசனும், வயலின் வித்தகி திருமதி கி. அகிலனும் அவர்களும் தமது பக்குவமான வாசிப்பின் மூலம் பாடகிக்கு வழங்கியிருந்தமை நயக்கக் கூடிய வையே.

தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைவிரிவுரையாளர் சி.ஜி.சுந்தரம் தீட்சதரின் மோகன இராசக வர்ண உருப்படியின் கனதியான சமர்ப்பணம் அரங்கைக் களைகட்டச் செய்தது. ஷண்முகப்பிரியா இராக ஆலாபனையும், நிர்மல பரசிவ என்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் உருப்படியும், கற்பனாஸ்வர வாலாயமும் மண்டபத்தைச் சரணடைய வைத்ததெனலாம். ஜெயராமன் அவர்களது வயலின், பாடகரின் மனோதர்மத்தைத் தூண்டிவிட கண்ணதாசனின் மிருதங்கலயப் பிரவாகம் கச்சேரியை இரம்மியமாக்கிற்று பாரதியாரின் சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மாவை அழைத்து உள்ளம் குளிர்ந்தார்.

எம்.எம்.தண்டபாணி தேசிகரை அரங்குக்கு வரவழைத்து, ஐயே மெத்தக் கடினம் என்று இரங்கிய விதம் உணரப்பட வேண்டிய தொன்றாகும்.

ஐந்நூறு இரசிகர்கள் இருந்து அனுபவிக்க வேண்டிய மண்டபத்தில், ஐம்பது பேர் மட்டும் குழுமியிருந்தமையால், யாழ்ப்பாணம் ஊக்கப்படுத்தப்படவில்லை என்று எவராலும் கூற முடியாது. மாணவர்கள் இதனைப் பேறாக்கியிருக்கலாம். சரஸ்வதியே நாக்கினில் உறைகின்ற பல வித்துவான்கள், மாணவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தும், இளைய தலைமுறையினர் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை நழுவவிட்டமை வருத்தப்படக்கூடியதே. போக வேண்டாம் என்று இந்த மண் ஒருபோதும் சொல்லாத, வரமும் வாழ்வும் வாலாயமும் இருக்கின்ற எமக்கு, சேர்.பொன். இராமநாதனின் அழைப்பும் அவரது பரந்த கலைநோக்கும் மருதனார் மடம் என்ற ஒரு புண்ணிய கேந்திர நிலையத்திற்கு வழி சமைத்ததெனலாம். வட இலங்கை சங்கீத சபையை மருதனார் மடத்தில் அமைக்க வேண்டுமென்ற தாற்பரியத்தை அமரர் தற்பரானந்தன் அவர்கள் முன்னெடுத்துச் சென்ற போது, சரஸ்வதி வையமெலாம் பூத்திருந்தாள். இந்த நிலையில் இசையுலகத்துக்கு ஒரு பெரிய பொறுப்புண்டு. ஒவ்வொருவரையும் சமூகம் எடைபோட்டவண்ணமிருக்கின்றது. தொண்ணூறு வயது அடையும் போது, இய லாமை என்று வரும் போது சுயபரிசோதனை செய்து என்ன பிரயோசனம்? நாம் என்ன செய்கிறோமோ அது எமது பிள்ளைகளாலேயே திருப்பித் தரப்படும். இதையுணர்ந்தால் கலைமகள் யாவரையும் அழைத்து வரமாட்டாளா?

நிறைவாக: திருமதி தமிழினி யோசேப்பின் தயாரிப்பில் மிளிர்ந்த நாட்டி யாஞ்சலி அவைக்குச் சுவை கூட்டியது. கலைத்திறன் அழகியற்குடில் மாணவர்களின் கோலாட்டம் அற்புதம். கண்ட நாள் முதலாய் என்ற கீர்த்தனை, துஷ்யந்தனின் குரலில் தவழ்ந்து நந்தகுமாரின் லயத்தில் விளைந்து, சியாம் கிருஷ்ணாவின் வயலினில் குழைந்து, தமிழினியின் நட்டுவாங்கத்தில் கனகச்சிதமாக அரங்கேறியது. எதிர்வரும் 27 ஆம் திகதி எம்.எம்.தண்டபாணி தேசிகரின் நினைவாக இசையரங்கு அமையும் என்ற செய்தியோடு, அரங்கு விடைபெற்றது.




# வாழ்வைச் செதுக்கும் ஒரு நிமிடம்



புகழ் என்பது உச்சாணிக் கொம்பின் தேன் மாதிரி. எட்டியெடுக்க, தேனடை விட்டு உதிரும் ஈக்கள் வந்து மனிதரைச் சுற்றிக் கொள்வதைப் போலவே புகழ் கொண்டோரைச் சுற்றி தலை கொத்தும் மனிதர்கள் ஏராளமாய் திரிகின்றனர். தான் வென்றதைக் காட்டிலும் பிறர் தோற்ற வலி ஆழமான வடுவைக் கொண்டதெனப் புரியாதோர் தலைகொத்தும் ஈக்களைத் தாமே தேடிக் கொள்கின்றனர்.

தேடித் தேடிக் கொணர்ந்து சிறுகச் சிறுகச் சேகரித்த தேனியின் உழைப்பைப் போலவே தனது லட்சியத்தை வெல்லப் போராடும் மனிதர்களின் உழைப்பும் கவனத்தில் கொள் ளத்தக்கது. ஒரு வெற்றி என்பது பலரின் தோல்வி எனும் நடுநிலையிலா தராசை யறுத்து தனது வெற்றியை பிறருக்கும் புரிய அல்லது பிறரும் மகிழத்தக்க அமைத்துக் கொள்வதென்பது ஒரு கலை. தான் வளரும்போதே தன்னோடுள்ளவர்களையும் வளர்க்க நினைப்பவர்களுக்கே அந்தக் கலை கைகூடுகிறது.

ஓட்டப்பந்தயத்திற்கென ஓடும் தெருவில் உடன் நிகராக ஓடுபவன் வீழ்ந்துவிடுகையில் சிரிக்கமுடியாத மன நிலையைக் கொண்டவருக்கு அந்தக் கலையும் புரியும். ஒரு சக மனிதரை எதிரியாகப் பார்க்காததொரு உணர்வு மட்டுமே மனிதத்தையும் வளர்க்கப் பயன்படும். வெற்றி ஒரு போதை, புகழுக்கான பாடு பொருள். ஆனால் நிலைத்தல் என்பது வாழ்தல். நாள்களை வருடங்களைக் கடந்து வாழ்தலே நிலைத்தல் ஆகும். நிலைப்பதற்கு வெற்றி வெறுமனே போதுமானதல்ல, உடனிருப்போரின் உணர்வை மதித்தலும் நிலைப்பின் பாடுபொருளாகும்.



[illegible]. வெற்றி நிலைப்புத் தன்மை கொண்டதல்ல; அது இடம் மாறிக் கொண்டேயிருக்கும். ஆனால் மனிதம் நிலைக்கும். மனிதமுடையோரின் புகழ் வான் கடந்து நிற்கும். காலத்தைக் கடந்தும் பேசப்படும். மனிதம் நிலைப்பின் பாடு பொருள்.

எனவே வெற்றியை எண்ணுங்கள். உங்கள் வெற்றியை மட்டுமே எண்ணாதீர்கள். தேன் என்பது இனிப்பு மட்டுமல்ல, அது இன்னொரு உயிரின் உழைப்பும் கூட. எனவே உழைப்பைக் களவாடி இன்பம் கொள்வதைக் காட்டிலும் இனிப்பை வேறெங்கேனும் தேடுங்கள். கடைசியில் அது மனிதம் நிலைக்குமிடத்தில் கிடைப்பதை உணர்வீர்கள்.

வெற்றி புகழைத் தரும், புகழ் சுயநலப் போதையை ஏற்படுத்தும். தேன் கூட போதை கொண்டது. சுயநல போதையை அதிகமாகக் கொண்டது தேன். எனவே தேன் வேண்டாம். வெற்றி வேண்டாம். வெறு மனே புகழ் மீதான ஆசை மட்டும் வேண்டாம். மனிதர் மீதான ஈரம் அந்த வெற்றியைக் காட்டிலும் அடர்த்தியானது. புகழை திரியாக்கி பிறருக்கு வெளிச்சம் தரும் விளக்காய் தம்மை மாற்றிக்கொள்ள முடிபவர்களுக்கு புகழ் எனும் தேனைவிடவும், அதைச் சுற்றியிருக்கும் தேனீக்களின் பசி இன்றியமையாத ஒன்றென்பது புரியும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியையும், அழகையும் வெளிப்படுத்தும்

## இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

## பிற்கால சுவரோவியங்கள்

து.துசியந்தன்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)
யாழ். கல்வி வலயம்



மாம்பழக்கதை

சமயமும், கலையும் சமூகத்தின் இரு கண்கள் போன்றவை. இந்த வகையில் கலைகளின் பிறப்பிடமாகவும் கோயில்கள் அமைந்துள்ளன. இந்தக் கலையே ஒரு சமுதாயத்தின் அடையாளமாகவும் கருதப்படுகின்றது. இருப்பினும் துரதிஷ்டவசமாக எம்மவர்களின் பழைய சுவரோவியங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு அல்லது அழிந்து போய் விட்டன.

தற்காலத்தில் வரையப்பட்ட சுவரோவியங்களைக் கொண்ட இடங்களில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இங்கு தற்போதுள்ள ஓவியங்கள் ஆர்ட்டிஸ்ற் மணியம் என்று எல்லோராலும் புகழ்ந்து அழைக்கப்படுகின்ற பெ.சுப்பிரமணியம் என்பவராலும் அவரது சீடர்களினாலும் வரையப்பட்டவை. ஆனாலும் இவரது ஓவியங்களுக்கு முற்பட்ட பழைமையான ஓவியங்களும் இங்கு இருந்ததாக கலாநிதி சிற்றம்பலம் யாழ்ப்பாண இராட்சியம் எனும் நூலில் குறிப்பிடுகின்றார். இவர் இந்நூலில் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் மன்னனும் பிரதானிகளும் வழிபடும் காட்சி ஓவியமாகக் காணப்பட்டதாகக் குறிப் பிடுகின்றார். ஆனால் இந்த ஓவியங்கள் இன்று அங்கு காணப்படவில்லை.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலானது இற்றைக்கு ஆறு நூற்றாண்டுகள் (600 ஆண்டுகள்) பழைமை வாய்ந்ததாகும். மேலும் அரச பரம்பரையோடு தொடர்புடைய பெருமையுடையது. யாழ்ப்பாண அரசின் சிம்மாசனப் பெயர்களில் ஒன்றான பரராஜசேகரன் என்னும் பெயர் தாங்கி நிற்கின்றது. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தை ஆரியச்சக்கரவர்த்திகள் ஆண்டு வந்தனர். அவர் களில் பதினோராம் தலைமுறையில் வந்த பரராஜசேகர மன்னன் இந்த ஆலயத்தை கட்டியதனால் இந்த ஆலயம் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் என்று அழைக் கப்படுகின்றது.

ஆரம்பத்தில் சுண்ணாம்புக் கட்டடமாக இருந்த ஆலயம் 1928 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 10 ஆண்டுகளின் பின் 1939 ஆம் ஆண்டளவில் கற்கோயிலாக்கப்பட்டது. எனவே முன்னைய பழைமையான ஓவியங்கள் சுண்ணாம்புக் கட்டடம் அகற்றப்பட்டபோது அழித்திருக் கக்கூடும் என கருதப் படுகின்றது.



அகத்தியரும் விநாயகரும்



அறுகம் புல்லின் மகிமை

இந்தக் கோயிலில் காணப்படும் தற்போதைய ஓவியங்களின் படைப்பாளியான பெ.சுப்பிரமணியம் பற்றி குறிப்பிடும் ஒரு விமர்சகர், பல நிறங் கொண்ட அற்புதமான வர்ணம் தீட்டும் முறையைப் பயன்படுத்தியவர். நீர் வர்ணத்தில் விதம் விதமான பரிமாணங்களை உருவாக்கியவர். உருப்பெருக்கம் மூலம் பல உயிரோவியங்களை வரைந்தவர் எனக் குறிப்பிடுகின்றார்.

நல்லூர் செட்டித் தெருவில் பெரிய தம்பி விசாலாட்சி தம்பதியரின் மூத்த மகனாக 1923 இல் பிறந்த சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் கனகரத் தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்ப,இடைநிலை, உயர்கல் வியை பயின்றார். இரண்டாம் உலகப் போரின்போது இலங்கை கடற்படையில் இணைந்து திருகோண மலையில் பணியாற்றியவர். பின்னர் அதிலிருந்து விலகிப் பொது வேலைப் பகுதியில் மேற்பார்வையாளராக சில காலம் கடமை புரிந்தார். 1940 களில் சகல வேலைகளிலும் இருந்து விடுபட்டு ஓவியத் துறையில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

1960 ஆம் ஆண்டு தமிழகம் சென்ற இவர் அங்கு ராமஜெயம் என்ற ஓவியரிடம் நிறக்கலவை மாற்றம் சம்பந்தமாக நேரடியான அவதானிப்புக்களை பெற்று அதனைத் தனது ஓவியங்களில் பரீட்சித்துப் பார்த்தார். சினிமாப் படங்களுக்கான பதாதைகளையும், வெட்டுருக்களையும் மிகப் பிரமாண்டமான அளவில் வரைந்ததன் மூலம் புகழ்பெற்றவர். இவருடைய சுவரோவியங்களிலும் திரைச்சீலை ஓவியங்களிலும் இந்திய புகழ் பெற்ற ஓவியரான இரவிவர்மாவின் செல்வாக்கு காணப்படுகின்றது. இவருடைய தெய்வப்படங்களில் மாயவாத முறைமையைக் காணக் கூடியதாக உள்ளது.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் வடக்குப்பக்க சுவரில் இவரது தற்கால ஓவியங்கள் காணப் படுகின்றன. இந்த ஓவியங்கள் 1990க்கு பிற்பட்ட காலப்பகுதியில் மணியத்தாலும் அவரது சீடர்களின் உதவியினாலும் வரையப்பட்டவை. இங்கு கஜமுகா சுரன் வதம், விநாயகர் மாம்பழம் பெற்ற கதை, யானையாக வந்த விநாயகர் வள்ளியைத் துரத்துதல், அறுகம்புல்லின் மகிமை, அகத்தியரும் விநாயகரும் போன்ற சம்பவங்கள் குறித்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

கஜமுகா சுரனை வதம் செய்யும் காட்சியை சித்திரிக்கும் ஓவியத்தில் வீராவேசத்துடன் தேரில் வரும் விநாயகரின் உருவமும், கஜமுகா சுரனும், விநாயகரும் சண்டையிடும் விதமும், சிறப்பாக காட்டப் பட்டுள்ளன. போர்க்காட்சிக்கு பொருந்தும் வகையில் சிவப்பு, மஞ்சள் வர்ணத்தை முதன்மைப் படுத்தி பின்னணி காட்டப்பட்டுள்ளதோடு அசுரனும்,விநாயகரும்பெரிய அளவில் காட்டப்பட்டுள்ளனர். இதில் அசுரன் விநாயகரின் தோற்றத்தை ஒத்த வகையில் யானைத் தலையுடன் கறுப்பு நிறத்தில் துரநோக்கும் கருத்துக்கு பொருந்தும் வகையில் காட்டப்பட்டுள்ளது.



வள்ளியை யானை துரத்துதல்



கஜமுகாசுரன் வதம்

இங்கு காணப்படும் இவரது சிறந்த ஓவியங்களில் ஒன்றான அகத்தியரும் விநாயகரும் என்ற ஓவியத்தில் அகத்தியரின் கமண்டலத்தைக் காகமாக வந்த விநாயகர் தட்டியதால் காவேரி ஆறு தோன்றும் கதை மூன்று சம்பவத் தொகுப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் காகத்தை துரத்தும் அகத்தியரும் சிறுவனாக மாறிய விநாயகரை அகத்தியர் துரத்திச் செல்வதும் பின்னர் சிறுவனாக வந்தது விநாயகரே என அறிந்து பணிந்து வணங்குவதும் இங்கு சிறப்பாக காட்டப்பட்டுள்ளது. இதில் காவேரி நீரின் பெருக்கெடுப்பு ஊடாக தூரதரிசன வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன.

இங்கு காணப்படும் மற்றுமொரு சிறந்த ஓவியமான வள்ளியைத் துரத்தும் காட்சியில் யானை துரத்துகின்ற விதமும், யானையாக வந்தது விநாயகர் என அரூபமாக வெளிப்படுத்த முற்பட்ட விதமும், பயத்தை வெளிப்படுத்தும் வள்ளியின் நிலையும் சிறப்பானதாகக் காணப்படுகிறது. இதில் வயோதிபராக வந்த முருகனை வள்ளி அணைத்திருக்கும் விதம் சினிமாப் பாணியின் தாக்கத்தை வெளிப்படுத்துகிறது.

அறுகம்புல்லின் மகிமையைக் காட்டும் ஓவியத்தின் மத்தியில் காணப்படும் பெரிய தராசில் ஒரு புறம் அறுகம்புல்லும் மறுபுறம் தங்க ஆபரணங்களும் காட்டப்பட்டிருக்கிறது. இதில் பச்சை நிறம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதோடு அறுகம்புல்லை விநாயகரோடு தொடர்புபடுத்த விநாயகரின் உருவமும் பச்சை வர்ண சாயலில் காட்டப்பட்டுள்ளது.

விநாயகர் மாம்பழம் பெற்ற கதையைக் காட்டும் ஓவியத்திலும் விநாயகர் சிவனையும் பார்வதியையும் மூன்று முறை சுற்றி மாங்கனியை பெற்றுள்ள விதம் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. கைலாசத்தைக் காட்ட சாம்பல் நிறச் சாயலை அதிகம் பயன்படுத்தியுள்ளார்.

விநாயகருடைய சரிதத்தை அடிப்படையாகக் கொண்ட ஓவியங்களை கொண்ட பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் ஓவியங்கள் தரம் 10 சித்திரபாட பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த சிறப்பு மிக்க ஓவியங்களை எதிர்கால சந்ததிக்காகப் பாதுகாப்பது எமது கடமையாகும். கலைப் படைப்புகள் காலம் செல்லச் செல்ல பொலிவு இழக்கத் தொடங்கினாலும் அவற்றின் பெறுமதி உயர்ந்தே செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கவிதைக்குச் சிகரமான கலாசாகரன் கல்வயல் வே.குமாரசாமி



நாய்களுக்குத்தான் இப்புநடப்பு அதிகம் நம் நாட்டில்
தாய்,பிள்ளை,தம்பிசகோதரங்கள் எல்லாமே
நாய்க்குப் பிறகுதான் நாங்களும் கூடத்தான்
என்ன சொகுசு, அவைக்கு எல்லாம் சுகபோகம்!
பஞ்சுமெத்தை, கட்டில், படுக்க அறைகட்டி
அஞ்சாறு சாதிவிசுக்கோத்துவிட்ட மின்கள்
கொஞ்சம் அதுசோர்ந்துகிடந்தால் உடன் காட்ட
டாக்குத்தர் ஊசிமருந்துக்கு
வங்கிக் கணக்கில் தனியான வைப்பொன்று
காலைப்பொழுதுகளில் கூட விளையாட
வேலையாள் ஒன்று விடியக் குளிப்பாட்ட
வாசனைச் சோப்புவகை காரிலோமுன்சீற்
கனவேலைப்பாடுஅதற்கு!

ஆச்சியோ! இங்கே அரைவயிற்றுக் கஞ்சிக்கு
மூச்சிழுக்கக் கூனி முதுகு உளைய ஊரான்
வயலிலே நெல் பொறுக்கி வாடித் துவழுகிறாள்!
புயலில் அடிபட்டபூவாய்ச் சுருளுகிறாள்
நாய்க்குப் பிறகுதான் நம் நாட்டில் தாய்பிள்ளை
நாய்களுக்கு வந்த நடப்பு மனிசரைப்
பேயிலும் கீழாய்ப் பின்தள்ளி வைக்கிறது.
அலவன்சு, இன்சூரன்ஸ் ஆதியனவும் இப்ப
பல் வகை நாய்களுக்கும் பாஸ்பண்ணிவச்சிருக்கு.
சட்டப்படி அவைக்குத் தக்கபடிகிடைக்கத்
திட்ட மிட்ட வாக்கெடுப்பில் சிலபேர் வெளிநடப்பு
எண்பதுமேலதிகவாக்கால் நிறைவேறி
அண்மையில்தான் அஃது நடைமுறைக்குவந்திருக்கு

நாய்களுக்கு இப்ப நடப்பு, திமிர் அதிகம்
போய்வாற எல்லா இடமும் பொறுப்பின்றி வாய்வைக்கும்
கண்டபடி 'வக்'கென்று ஆள்மேலே பாய்ந்துகடித்துக் குதறி
உயிர் எடுக்கும் ஆரும் எவரும் அதுபற்றிக் கேட்கேலா.

'காய்...சூய்' என விரட்டல் கண்டால் உடன் அரசோ
காவலுக்குவிட்ட வற்றையார் கலைச்சார்!?
என்று பெரும்
கோவம் தலைக்கேறக் குற்றங்கள் சாட்டிக்
கொதிச்சுக் கிளம்பிக் கொலைத் தீர்ப்புக் கூறுகுது.

நாய்கள் இதனாலேநம்மைமதிப்பதில்லை.
சாப்பாடு,சாமான் தொடக்கம் உயிர் வரையும்
ஏப்பம் விடுகுதுகள் எவருமேகேட்கேலா!

நல்லநாய் என்றால் நமக்கென்னவந்தது.
'எல்லாமோ?!
நாமதனைஎப்படித்தான் சொல்லுவது!
நல்லாய் இதுகளைஎப்படிநாம் கொல்லுவது?

வேட்டைநாய்,வீணீர் வடிக்கும் விசர் நாய்கள்
காட்டுநாய்,காமவெறிநாய்கள்,நாக்குகளை
நீட்டி முழியைஉருட்டி விழிக்கின்ற
நீட்டுச் சொறிநாய்கள், நீர்நாய்கள்! ஊர்நாய்கள்!
நீட்டுக்கால் சட்டைகளைநித்தம் சலவை செய்து
மாட்டிவெளிவந்தால் மக்கள் மதிப்பாரோ?
ஆட்டுச் சிறுகுட்டிஅவற்றைமதித்திடுமோ?
பாய்ந்துஎழும்பிமுட்டிஅவைகொம்பால் இடியாதோ?
எல்லாம்! எமது! ஆம் அரசுகொடுத்த மதம்.
பொல்லாப்பைஆராயப் போதுசரியில்லை!.



கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி வடித்தசொல்லும் பொருளும் சுவை கூட்டப் பொலிந்த நாய்களுக்கு வந்த நடப்பு என்றஇந்தக் கவிதை, நாம் வாழும் காலத்தில் நாய்களுக்கு வந்தமவுசுகுறித்துக் கூறும் உண்மைகள் மலிந்த, இலக்கிய நயம் செறிந்த உன்னதமான ஒருகவிதையாகும். கவிஞர் வே.குமாரசாமி கல்வயல் தந்த கவிஞர்கள் வரிசையில் கவிஞர் முருகையன் அவரது சகோதரர் கவிஞர் சிவானந்தன் ஆகியோருடன் தனது கவித்துவத் தால்கைகோர்த்துநடந்த கவிவாணர். 1944ஆம் வருடம் தைத் திங்கள் முதலாம் நாள் வருடப்பிறப் பொடு வந்துதித்தவர் கல்வயலார். தமிழின் இனிமையைத் தமிழின் [illegible] சுவையைத் தனதுகவிதைகளுக் குள் ஒளிரச் செய்தவர்.

ஓசை நயம் பட உரைத்தல் உணர்ச்சிச் செறிவுடன் கருத்துப் பதத்துடன் கவிதைகளையாத்திடும் கவிஞராகப் பள்ளிசெல்லும் காலத்திலிருந்தே திகழ்பவர். பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலும், பயின்றவர். கலைமாணி பட்டத்துடன் முதுதத்துவமாணி பட்டத்தையும் பெற்றவர். கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளராக இருந்து பயன் விளைத்தவர். இவரது சிறப்பானகவிதைத்தொகுப்புகளான, சிரமம் குறைகிறது மரண நனவுகள், முறுகல் சொற்பதம் ஆகிய நூல்கள் இவரதுஆக்க இலக்கிய வளத்தை எடுத்துக் காட்டுகின்றன. இவரதுகுழந்தை இலக்கிய ஆக்க வெளிப்பாடுகளால்சிறுவர் கவிதையின் மகிமை பலராலும் போற்றப் படுகின்றது. சிறுவர்களின் வயதும் வளர்ச்சியும் பருவத்திற்கேற்ற சொல்வளமும் உச்சரிப்பும் பயன் தரும் வகைதேர்ந்த சிறுவர் கவிதைகளைஆக்கியுள்ளார். குழந்தைக் கவி ஆக்கும் வல்லமை அவரைப்புகழ் பெற்ற அழ.வள்ளியப்பா போன்ற இந்தியக் கவிஞர்களின் மேல்நிலைக்கு உயர்த்தியுள்ளது. இவரால் எழுதப்பட்ட சிறுவர் கவிதைகள் பாலர் கல்விக்கு உரம் தருவனவாகும். சிறுவர் கவிதைகளில் செறிந்துள்ள சந்தம், இசைப் பெருக்கு என்பன வாசிக்கவும் பாடவும் பாலர்களைத் தூண்டுகின்றன. அசைவூட்டி இசை கலந்து பாடப் பெற்ற இவரது சிறுவர் கவிதைகளை ஆறுதல் இறுவெட்டுக்களில் வெளியிட்டுள்ளதோடு இவருக்கு கலாசாகரன் என்றபட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது. கவிமாமணி, கலாபூசணம் ஆகியபட்டங்களைப்பெற்றவர். கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் மகரந்தச் சிறகு விருதையும் பெற்றுக் கொண்டார். மணிப்பா, பாலர்பா, பாடுபாப்பா, பாப்பாப்பா ஆகிய சிறுவர் பாடற் தொகுப்புக்கள் இவரால் வெளியிடப்பட்டுள்ளன. எல்லோரையும் இன் முகத்தோடு வரவேற்று உபசரிக்கும் பண்புடையகல்வயலார் வயது முதிர்ந்தநிலையிலும் கவிதை புனைவதில் கருத்தோடு ஈடுபட்டவாறு தமிழின் தொன்மைக்கும் புதுமைக்கும் பாலமிட்டுள்ளார். ஈழத்தின் சமூக கலாசார வளர்ச்சிப் போக்குக்கு இடையூறாக விளங்கியகாலத்தின் நெருக்கீடு களுக்குள்ளும் தன்னை ஒரு சிறந்த கவிஞராக வெளிப்படுத்தியவாறே இலக்கியப் பணியாற்றிவந்தார். இன்றும் அவ்வாறேவாழ்ந்துவருகின்றார்.

# மிஜுந்தி செல்வராஜாவின் முதல் முயற்சி மூன்றாம் முத்தம் குறுநாவல்



அழகிய வண்ண முகப்பு. அர்த்தம் பல விரிக்கும் தலைப்பு. அரியாலையூர் செல்வி மிஜுந்தி செல்வராஜா அவர்களின் எழுத்தாற்றலால் விளைந்த மூன்றாம் முத்தம் என்ற குறுநாவல் நூலின் முகப்புத் தோற்றம்.
இந்தக் குறுநாவல் நூல் ஈழத்து எழுத்திலக்கிய வானில் ஒரு பெண் இலக்கியவாதியைத் தோற்றுவித்துள்ளது.
குடும்பம், அன்பு, ஆதரவு, அர்ப்பணிப்பு, உறவுகளின் இன்ப துன்பங்கள் எனத் தோன்றும் வாழ்வை விளக்கும் வகை தேர்ந்த எழுத்தின் வடிவம் உள்ளத்தை இனிக்கச் செய்கிறது.
நாவலை வாசிக்கத் தூண்டும் எழுத்தாளரின் இலக்கைத் தொடரச் செய்யும் வாக்கிய அமைப்புக்கள், வாசிப்பவனின் சிந்தனையை நாவலுடன் இணைத்துப் பிணைத்து நூலின் இறுதிவரை இட்டுச் செல்லும் சம்பவக் கோவைகள் எல்லாமே நாவலின் ஆக்கச் சிறப்புக்கு ஆதாரமாகின்றன.
வித்தியா என்ற இளம்மங்கையின் எண்ணங்களோடு அவளது தாயாரான வள்ளியம்மையின் உறவுப் பிணைப்பில் தோன்றும் வார்த்தைகளின் வலிமை கதையைப் பல வழிகளிலும் ஓட்டிச் செல்லுகின்றது. வித்தியாவின் கருத்தும் அவள் தாயார் மீது கொண்டுள்ள பாசமும் தாயார் அவள்மீது கொண்டுள்ள கண்டிப்பும் கவனிப்பும் சேர்ந்த பார்வைகளும் வார்த்தைகளும் வாசகரின் கவனத்திலும் கருத்திலும் பதியும் சம் பவங்களாகித் துலங்குகின்றவை.
நாவலை வாழ்வின் இயல்பான சம்பவங்களோடு நகர்த்திச் சென்றாலும் வாசகரை மொழியின் வளம் காணச் சேர்த்திருக்கும் சொற்கள் மனங் கொள்ளத் தக்கவை.
இன்றைய மாலைப் பொழுது கூட, என் வேதனையைப் பார்த்துத்தானா இவ்வளவு சிவப்பாக மாறியது?
காலைப் பொழுததனை வரவேற்க வந்த கதிரவனின் ஒளி வான் வெளியை மட்டுமல்ல பூமிக்கும் அள்ளிக் கொடுத்து வித்தியாவின் வீட்டுக் கூரைக்குள்ளும் ஊடுருவி நுழைந்து ஒளி கொடுத்தது போன்ற வாக்கியங்கள் செல்வி மிஜுந்தி செல்வராஜா பார்த்த காட்சியின் கோலத்தை நயம்பட உரைக்கத் துணிந்த சாட்சியான இலக்கிய எடுத்துக்காட்டுகளாகும்.
அவசரத் திருமணங்கள், இடப்பெயர்வுகள், தொலைந்த உறவுகள், விதவைகள் எனப் பலரும் அடையும் கோலங்களையும் அவை நிகழும் எமது துயர்க்கால சந்தர்ப்பங்களையும் நாவலின் பக்கங்கள் தெளிவு படுத்துகின்றன.
முத்தங்கள் விளைக்கும் மகிழ்வின் கனதியையும் மூன்றாம் முத்தம் எந்தச் சந்தர்ப்பத்தில் மகிழ்வு தந்தது என்பதையும் நாவலின் இறுதியில் காண்கிறோம். வாசிக்கத் தூண்டும் ஒரு வண்ணக் குறுநாவல் இது.
உணர்வு வெளிப்பட ஆக்கப்பட்டுள்ள சொற்கூட்டங்களோடு எழுத்தாளரின் எழுத்தின் வலிமையைப் பல பக்கங்களில் பார்க்கின்றோம்.
சினிமாப் பாணியில் முடிவுகளைக் காண்பிக்க முயல்வது நாம் அதிகமாகச் சினிமாப் படங்களைப் பார்ப்பதன் பிரதிபலிப்பாகவும் இருக்கலாம். உதயன், வலம்புரி ஆகிய பத்திரிகைகளில் கவிதை கட்டுரை எனக் கனதியான ஆக்கங்களை எழுதிவருகின்ற செல்வி மிஜுந்தி செல்வராஜா ஒரு பட்டதாரி, முன்பள்ளி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர். அவரது முதல் நூல் இதுவாகும்.
நல்லதோர் குறுநாவல். இனிமை தரும் முதல்முயற்சி, தொடரும் வெற்றிகளுக்கு வழிகாட்டியுள்ளது எனலாம், பாராட்டுக்கள்.

மகேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E

புதன்பொய்கை

2015 | ஜூன் 10 | புதன்கிழமை

உதயன்

அற்புதன்

# சுய முன்னேற்றம்

மனித வாழ்வு என்பது இன்பம் மற்றும் துன்பம் இணைந்தே காணப்படும் இயல்பு கொண்டது. இத்தகைய அற்புத பிறவியில் சிறப்பாகச் செயல்பட்டு அழியாப் புகழை நிலை நிறுத்த வேண்டுமானால், நிலையான மகிழ்ச்சியுள்ள மனநிலையில் செயல்பட வேண்டும் என்பது உளவியல் வல்லுனர்களின் கூற்று. வெற்றியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளில் இருந்து அறிந்து கொள்ளக் கூடிய செய்தியும் அதுவே தான். ஆகவே வெற்றிகளை அடைய வேண்டுமானால், சாதனைச் சரித்திரத்தை உருவாக்க வேண்டுமானால், நாம் எத்தகைய சூழலிலும், அதாவது சாதக சூழலிலும், துன்ப அல்லது பாதக சூழலினும், மகிழ்ச்சியுடனும், முழு மனதுடனும் செயலாற்றுவது மிக அவசியம். எனவே வாழ்வில் சந்தோஷத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்ட என்னுள் சந்தோஷம் என்ன விலை? சந்தோஷம் எங்கு கிடைக்கும்? சந்தோஷத்தை எப்படி அடையலாம்? என எண்ணற்ற கேள்விகள் அலை மோதிக் கொண்டிருந்தன. அந்தக் கேள்விகளுக்கான விடை கண்டு தன்னம்பிக்கை கொண்ட வாசகர்களின் சந்தோஷத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற முடிவின் பயனே இந்த கட்டுரை.



போட்டிகள் நிறைந்த இயந்திரத் தனமான வாழ்க்கை முறை மிகுந்த உலக ளாவிய சமூக பொருளாதார சூழலில் சந்தோஷம் என்ன விலை? என்று கேட்கும் நிலைக்கு, மனித வாழ்க்கை முறை மாறி வருவது கண்கூடு.

ஆனால் சந்தோஷம் என்பது மனிதன் உயிர் வாழத் தேவையான அடிப்படைக் காரணிகளில் ஒன்று என்பது உளவியல் வல்லுனர்களின் ஆணித்தரமான நம்பிக்கை.

இன்று நடைபெறுகின்ற பல்வேறு கொலை, கொள்ளை, தற்கொலை, மணமுறிவு, மனநல பாதிப்பு, சண்டை சச்சரவுகளுக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்ப்போமானால், மேற்கண்ட தீமைகள் மூலம் ஒருவர் சந்தோஷத்தை தேட முயல்கின்றார் அல்லது மேற்கண்ட பிரச்சினைகள் மூலம் ஒருவர் தான் இழந்த சந்தோஷத்தை மற்றவர்களிடமிருந்தும் எடுத்துவிட வேண்டும் என்று செயல்படுகின்றார் என்பது தெரியவரும்.

தன்னம்பிக்கை மற்றும் துணிவு இல்லாத மூன்றாவது வகை மனிதர்கள் தங்கள் சந்தோஷம் போய்விட்டதை எண்ணியோ, அடுத்தவர் சந்தோஷமாக வாழ்கின்றதை நினைத்தோ, தங்களால் சந்தோஷத்தை அடைய முடியவில்லையே என்ற இயலாமையினாலோ, சந்தோஷத்தை தேடிப் புறப்படுவதற்குப் பதில், தங்கள் இயலாமையைத் துயரங்களாக மாற்றி, அபார சக்தி கொண்ட மனித மனத்தையே அடக்கி, ஒடுக்கி மனஅழுத்தம், மன நோய், தற்கொலை என தங்களைத் தாங்களே வருத்தி அழித்துக் கொள்கின்றனர்.

**சந்தோஷம் முக்கியமா?**

மனித சமுதாயம் செழிப்புடன், வளர்ச்சிப் பாதையை நோக்கி வீறுநடை போடுவது நமக்கெல்லாம் நன்மை பயக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் மனிதகுலம் மகத்தான சாதனைகள் நிகழ்த்த வேண்டுமானால், நிச்சயமாக மனித சமுதாயத்தின் மனங்கள் மகிழ்ச்சிப் பெருக்கோடு குதூகலமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று வரையிலும் மனிதகுலம் செய்த சாதனைகள், அனைத்துக்கும் காரணம் என்ன என்று தேடிப் பார்ப்போமானால், அந்தச் சாதனைகளை நிகழ்த்தியவர்கள், அத்தகைய சாதனைகளை நிகழ்த்துவதற்காக அனுபவித்த துன்பங்கள், தியாகங்கள், வலிகளை சந்தோஷத்தின் ஊற்றுக் களாக ஏற்றுக் கொண்டதே காரணம் ஆகும்.

வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமானால், அமெரிக்க தேசத்தை அடையாளம் காட்டிய கொலம்பஸ், தன் வாழ்நாள் குறிக்கோளுக்காக தன் தாய், தந்தை, மனைவியை இழந்ததுடன் தன் அன்பு மகன் டீக்கோவை அனாதை இல்லத்தில், பெரும் சோகம், வருத்தம், துக்கம் மற்றும் மனவலியுடன் ஒப்படைத்து விட்டு செயல்படப் புறப்பட்டார் என்பதைக் காணமுடிகிறது.

கொலம்பஸ் மேற்கண்ட துன்பங்களில் மகிழ்ச்சியை காணும் மனவலிமை மற்றும் மனநிலையில் தான் அமெரிக்க தேசத்தை அடையாளம் காட்டிய சாதனைக்காக இன்றளவும் மக்கள் மனதில் புகழோடு நிலைபெற்றிருக்கின்றார்.

அதே போன்று தான் ஒரு தாய், பத்து மாதம் கருவை வயிற்றில் சுமந்து, பல்வேறு துன்பங்களை ஏற்று, தன் உயிரினும் மேலான மழலைச் செல்வத்தைப் பெற்றெடுக்கக் காரணம் துன்பத்திலும் இன்பம், துயரத்திலும் சந்தோஷம் என்ற மனநிலையே.

உலகில் எந்த ஒரு சாதனையையோ, அற்புதத்தையோ, நல்ல செயல்களையோ, நிகழ்த்த வேண்டுமானால் துன்பங்களை இன்ப அனுபவங்களாய் ஏற்றே தீர வேண்டும். எவர் ஒருவரால் துன்பத்தில் இன்பம் காண முடியுமோ, துயரங்களில் சந்தோஷம் காண முடியுமோ, அவராலேயே சாதனை களை உருவாக்க முடியும். வெற்றிகளைக் குவிக்க முடியும். அற்புதங்களை நிகழ்த்த முடியும்.

ஆகவே இன்று மனித குலத்தின் மகத்துவமான வாழ்விற்கு வழிவகுத்த விமானம், கணிப்பொறி, விண்வெளி தொழில் நுட்பம் போன்ற அனைத்து முன்னேற்றங்களுக்கும் காரணம், பல்வேறு மனிதர்கள் துன்பங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுத் துணிவுடன், மகிழ்வுடன் தடைகளைத் தாண்டி செயல்பட்ட மகிழ்வு மனநிலையே. மட்டுமின்றி, எத்தகைய சூழலிலும் சந்தோஷ மனநிலையில் செயல்படுபவரால் அல்லது சந்தோஷ மனநிலையை உருவாக்க முடிப வரால் உழைப்பு, ஊக்கம் விடாமுயற்சி, உறவு, நட்பு, தன்னம்பிக்கை, உதவிகள், துணிவு, மன நிறைவு, அமைதி உடல்நலம் போன்ற பல்வேறு நேர்மறை விளைவுகளை அடைய முடிகின்றது.

ஆகவே இவ்வளவு அற்புதமான நன்மைகளையும், வெற்றிகளையும் வழங்கும் மகிழ்வு மன நிலையை உருவாக்க உதவும் உன்னத வழிமுறைகளை இக்கட்டுரை வாயிலாகப் பார்ப்போம்.

**மகிழ்ச்சிக்கான வழிமுறைகள்**

சந்தோஷத்தின் வழிமுறைகளை வரிசைப் படுத்தும் முன் உங்களுடன் சந்தோஷம் சார்ந்த மூன்று கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுவது நன்மை பயக்கும் என்று கருதுகிறேன்.

1. சந்தோஷம் என்பது ஒரு மனநிலை மட்டுமே
   இது நம் வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகள், கிடைக்கும் அனுபவங்கள், காணப் படும் சூழல்கள், நம்முடைய மனோபாவம் போன்ற பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. இதை விலை கொடுத்தோ, கடனாகவோ, நன்கொடையாகவோ நாம் அடைய இயலாது. இது எம்முள்ளிருந்து வெளியே வரும் ஒரு உணர்வே ஆகும்.
2. சந்தோஷம் என்பது நிலையான ஒரு காரணி அல்ல:
   ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போன்று, வாழ்வில் சந்தோஷ மன நிலையும் சந்தோஷமற்ற மனநிலையும் மாறி மாறி காணப்படுவது இயற்கை. துன்பமும் சந்தோஷமும் மட்டுமே நிலையாக இருப்பதற்கு வாய்ப்பே கிடையாது.
3. சந்தோஷத்துக்கு அடிப்படையானது, வெற்றி, சாதனை, பாராட்டு போன்றவற்றிக்கு அடிப்படை பிரச்சினைகள், தோல்விகள், அவமானங்கள், தடைகள் தாண்டிய முன்னேற்றமே :

இத்தகைய தடைகள் தாண்டிய வெற்றிப் பயணத்தைப் பயணிக்கும் போது நிச்சயம் பல்வேறு துன்பங்கள் ஏற்படுவது உறுதி. ஆனால் அத்தகைய துன்பங்களை எதிர் கொண்டு முன்னேறுபவர்களே வெற்றிக் கனியைப் பறிக்க முடியும். எனவே வெற்றி பெற வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டவர்களுக்குத் துன்பமும் இன்பமே. ஆகவே துன்பங்கள் இருந்தாலும், அவற்றை மீறி சந்தோஷ மனநிலையில் செயல்படுபவர்களே வெற்றிகளைக் குவித்து மேலும் மேலும் மகிழ்ச்சியைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

மேற்கண்ட கருத்துக்கள் உலகில் எல்லோர் வாழ்விலும் நிச்சயம் துன்பங்கள் மற்றும் இன்பங்கள் இணைந்து காணப்படுவதை உணர்த்துகின்றன. ஆகவே வாழ்க்கையில், துன்பங்களை முழுமையாக மாற்றி விட முடியாது என்பது அனுபவ பூர்வமான உண்மை. எனவே இந்தக் கட்டுரையில் சந்தோஷத்துக்கான மூன்று விதமான வழிமுறைகளை ஆராய்வோமா.

ஒன்று : துன்பங்கள் வரும் வாய்ப்பை குறைப்பதற்கான வழிமுறைகள்

இரண்டு : துன்பங்களின் தாக்கத்தை குறைக்க உதவும் உத்திகள்.

மூன்று : ஏற்படும் துன்பங்களை மகிழ்ச்சி மனநிலைகளில் செயல்பட்டு, எதிர்கொண்டு, வெற்றி கொண்டு சந்தோச மனநிலைக்குள் பிரவேசிக்க உதவும் செயல்கள்.

இத்தகைய சந்தோஷம் தரும் 50 வழிமுறைகள், உத்திகள், செயல்கள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டிருந்தாலும், நாம் சூழலுக்கு ஏற்ப, பிரச்சினைகளின் தாக்கத்திற்கு ஏற்ப, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சந்தோஷ வழிமுறைகளை பயன் படுத்தி நம் சந்தோஷத்தை உருவாக்கவோ அல்லது பெருக்கவோ செய்யலாம்.

தற்பொழுது சந்தோஷத்திற்கான 50 வழிமுறை கள் குறித்து ஆராய்வோமாக.

1. குறிக்கோள் கொள்க

மனித வாழ்வில் பிரச்சினைகள், மற்றும் துன்பங்கள் ஏற்படுவது இயற்கையான செயல். ஆனால் உறுதியான குறிக்கோள்களுடன் செயல் படுபவர்கள், அத்தகைய கடினமான சூழல்களிலும், மகிழ்ச்சியுடனும், இன்முகத்துடனும் தங்கள் இலக்கு நோக்கி உத்வேகத்துடன் செயலாற்றுகின்றனர். இவர்களால்,

(அ) எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழ முடிகின்றது.

(ஆ) மற்றவர்களிடம் சிறப்பான உறவு பாராட்ட முடிகின்றது.

(இ) உறவினர், நண்பர்கள் மற்றும் உடன் பணிபுரிவோரின் அன்பு மற்றும் ஆதரவுடன் வெற்றிகரமாக செயல்பட முடிகின்றது.

(ஈ) உறுதியான குறிக்கோளுடன் செயல் படுவதனால், லட்சியவாதிகளின் திட்டமிட்ட, சிறந்த செயல்பாடுகளினால்:

1. தெளிவான, உறுதியான மனநிலையுடன் செயல்பட முடிகின்றது.
2. திட்டத்தின் அடிப்படையில், அடுத்தடுத்த உறுதியான செயல்களை சிறப்பாக செயற் படுத்த முடிகின்றது.
3. உறுதியான, சிறந்த செயல்பாடுகளினா சாதனையை நோக்கிய பயணத்தி பல்வேறு சிறிய சிறிய வெற்றிகள் வச படுகின்றன.

உறுதியான செயல்திட்டம், திட்டமிட்ட வ முறைகள் மற்றும் தெளிவான மனநி யுடன் செயல்படும் லட்சிய புருஷர்களுக் எந்த சூழல்களிலும் (வெற்றியோ, தோ வியோ, இன்பமோ, துன்பமோ) உத்வே துடன், உற்சாகத்துடன் மகிழ்ச்சியோடு த கள் குறிக்கோளை நோக்கி செயல்பட மு கின்றது.

ஆகவே சந்தோஷத்தோடு செயல்பட் வெற்றிகளை ஈட்டி சாதனை சரித்திரத் உருவாக்கி மக்கள் மனதில் வாழ வேண் மானால், உடனடியாக ஒரு உயரிய கு கோளை ஏற்று, அந்த லட்சியத்தை நோ வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ளு கள். உறுதியான குறிக்கோளுடன் செயல் பவர்கள், எத்தகைய இடர்கள், தோல்விக துன்பங்கள், அவமானங்கள் அவர்கள் லட்சி பயணத்தில் குறுக்கிட்டாலும், சிறிதளவே மனவருத்தம் கொள்ளாமல், மேலும் உ சாகத்துடன், உத்வேகத்துடன் செயல் பட் அனுபவபாடத்துடன் தங்கள் உயரிய இலக் நோக்கிப் பயணிக்கின்றனர். ஆகவே லட்சி வாழ்க்கை வாழ்வோம். சந்தோஷத் நிலையான தாக்கிக் கொள்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்
எஸ். சிவலிங்கராஜா

# யாழ்ப்பாணத்து



## வாய்மொழி இலக்கியம்

எழுத்துருப் பெறாத– ஒருவரால் எழுதப்பெறாத (இயற்றப் பெறாத) பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாக வழங்கி வரும் இலக்கியத்தை, வாய்மொழி இலக்கிய உருவாக்க கர்த்தாக்களை அறியமுடியாது. இதனைச் சற்று விரிவாக நோக்குவதானால், தனி ஒருவராலோ அல்லது குழுவினராலோ உருவாக்கப்பட்டுத் தொடர்ந்து செவிவழியாகப் பரவி வாய்மொழியாக வழங்கிவரும் (கையளிக்கப்பட்டுவரும்) இலக்கியத்துக்குரிய வரைவிலக்கணத்தைச் சரியாக வரையறை செய்வது சற்றுக் கடினமானதே.

வாய்மொழி இலக்கியத்தை நாட்டார் இலக்கியம் என்றும், பாமரர் இலக்கியம் என்றும், ஏட்டில் எழுதப் பெறாத இலக்கியம் என்றும் பலவாறாக அழைக்கின்றனர். வாய்மொழி இலக்கியத்தின் தோற்றம், தொடர்ச்சி, பயில்முறை முதலானவை விரிவான ஆய்வுக்குரியவை. இவைபற்றி ஏலவே சில ஆய்வாளர்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலே பயில்நிலையில் உள்ள அல்லது வழங்கி வருகின்ற– வழங்கி வந்த வாய்மொழி இலக்கியம் பற்றிய சிறப்பாய்வுகள் மிக அருந்தலாகவே வெளிவந்துள்ளன.

எழுத்திலக்கியம் சொல்லாத, சொல்ல விரும்பாத, சொல்ல முடியாத பல விடயங்களை வாய்மொழி இலக்கியம் சொல்லும்– சொல்கிறது. ஒரு பிரதேசத்தின் – மக்கள் கூட்டத்தின் பண்பாட்டு பாரம்பரியம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வாய்மொழி இலக்கியங்களை, மரபுகளைத் தொகுப்பதும் அவசியமாகும்.

பொதுவாக வாய்மொழி இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்தோர், வாழ்க்கைவட்ட அடிப்படையிலே – பிறப்பு முதல் இறப்பு வரை பயின்றுவரும் பாடல்களையே குறிப்பிடுகின்றனர். வாய்மொழி இலக்கியம் என்ற வகையுள் பாடல்கள் மாத்திரமன்றிக் கதைகள், விடுகதைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் என்பனவும் அடங்குகின்றன. இந்த வகையிலே யாழ்ப்பாணத்தில் வழங்கிவரும் வாய்மொழிப் பாடல்களை மட்டும் முதன்மைப் படுத்தி இந்த அறிமுகக் குறிப்பைப் பதிவு செய்கிறோம்.

வாய்மொழிப் பாடல்களைப் பற்றிய ஆய்வைச் செய்யும் பொழுது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாண மாவட்டத்திலே வழங்கிவரும் வாய்மொழி இலக்கியங்களின் 'ஆதிமூலத்தை'த் தெளிவாக அறிந்து கொள்ள முடியாது. இங்கு வழங்கும் பாடல்களில் பல யாழ். மாவட்டத்துக்கு வெளியேயும் ஏன் தமிழ் நாட்டிலேயும் கூட வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு மொழி பேசும், ஒரு பண்பாட்டுக் கட்டமைப்புக்கு உட்பட்ட மக்கள் கூட்டத்தின் பரம்பலோடு அவர்களின் வாழ்வியல் அம்சங்களும் கூடவே பரவிவிடுதல் இயல்பானதே. இந்த வகையில்தான் நாம் யாழ். மாவட்டத்தின் வாய்மொழி இலக்கியத்தின் பயில்நிலையையும் நோக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் புவியியல், பொருளியல், பண்பாட்டியல் முதலியவற்றின் அடிப்படையில் இந்தப் பகுதிக்குரிய தனித்துவத்தோடு வழங்கிவரும் வாய்மொழி இலக்கியத்தை இனம் காண்பது இனங்காட்டுவது அவசியமாகும்.

நாட்டுப்புற இயல் ஆய்வாளர்களின் முறையியலுக்கு ஏற்ப பிறப்பு முதல் இறப்பு வரை வழங்கிவரும் பாடல்களையே இங்கு சுட்டிக் காட்டுகிறோம். நாம் சிறுவர்களாக இருக்கும் பொழுது பாடியவையும் கேட்ட வையும் இங்கு தரப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கிவரும் மருத்துவிச்சி வாழ்த்துப்பாடல் (அரிசிப் பொதியோடு) இலங்கை முழுவதற்குமான பாடலாகக் காணப்படுகின்றது. அதன் தோற்றத்தைத் தெளிவாக அறியமுடியாதுள்ளது. மருத்துவிச்சி வாழ்த்துப் பாடல் போலவே கொத்தியாத்தை (கொத்திப்பேய்) பாடல்களும் வழங்கியதாகக் கூறுகின்றனர். ஆனால் அவற்றைப் பெற முடியவில்லை.

யாழ்ப்பாணத்து வாழ்வியலையும் சூழலையும் பிரதிபலிக்கும் தாலாட்டுப் பாடல்கள் பல உள்ளன. இவை இந்தப் பிரதேசத்துக் குரியவை ஆகலாம் எனக் கருத முடிகின்றது. தாய் குழந்தையைத் தாலாட்டும் பொழுது பின்வருமாறு பாடித் தாலாட்டுவதாக ஒரு பாடலை உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம்.

"ஆராரோ ஆரிரரோ.................
தொட்டில் கட்ட வந்த அம்மான்
பட்டினியே போறானாம்
பட்டுடுத்த மாமி பசியோடை போறாளாம் "

மாமன் தொட்டில் கட்டுவதும் விருந்தயர்வதும் இன்றும் வழக்கில் உள்ளது. குடும்பப் பிரச்சினை காரணமாக தாய்மாமன் சாப்பிடாமல் போவதைத் தாலாட்டினூடு (கதையோடு கதையாக) தாய் சொல்லுகிறாள். இந்தப் பாடல் இன்றும் யாழ்ப்பாணத்தில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வாய்மொழி இலக்கிய மரபிலே சொற்கள் இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் மாறி மாறி இடம்பெறுவதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். ஒருவித 'வாய்ப்பாட்டுத் தன்மை' வாய்மொழிப் பாடல்களினால் வழங்கி வருவதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வாழ்க்கை வட்ட ஒழுங்கு வரிசையில் தாலாட்டுப் பாடல்களைத் தொடர்ந்து மழலைப் பாடல்களைக் குறிப்பிடலாம். தாய், பேர்த்தி, பேரன் முதலானோர் குழந்தையைத் தூக்கி வைத்து விளையாடுவர். (செல்லமாக) ஆண் குழந்தையாயின்,

**கூத்துக் கூத்துக் குமரப்பா**
**குரக்கனைக் கொட்டிக் கொண்டு மலைத்தா**

பெண் குழந்தையாயின்,

**தங்கச்சியம்மா தெய், தெய்,**
**தம்பிக்குத் தேத்தண்ணி வை, வை, வை**

பொதுவாகக் குழந்தைகளோடு மழலை பேசும் உறவினர்கள் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு பின்வரும் பாடலைப் பாடுவதை நாம் இளமையிலேயே பார்த்திருக்கின்றோம்.

**ஒன்று இரண்டு மூன்று நாலு**
**அஞ்சாம் நம்பரெடி**
**அஞ்சாம் நம்பர் வீட்டுக்குள்ளே**
**றங்குப் பெட்டியெடி**
**றங்குப் பெட்டியைத் திறக்கப்போன**
**சிங்கக் குட்டியெடி**
**சிங்கக் குட்டியைப் பிடிக்கப்போனா**
**சீறிப்பாயுதடி**

இந்தப் பாடலிலே இடம்பெறும் 'எடி' என்ற சொல் 'எடா' (சீறிப்பாயுதடா) என வழங்குவதும் உண்டு. குழந்தைகள் வளர்ந்ததும் தாமாகவே இந்தப் பாடலைப் பாடி விளையாடுவதும் உண்டு. ஆனால் இந்தப் பாடலின் 'ஆதிமூலத்தை'யும் சரிவர அறிந்துகொள்ள முடியாதுள்ளது. இத்தகைய பாடல்கள் பல இந்தப் பிரதேசத்திலே வழங்கி வந்தன. ஆனால் இன்று மறைந்துவிட்டன.

வாய்மொழிப் பாடல் மரபிலே மழலைப் பாடல்களைத் தொடர்ந்து குழந்தைகள் கூடிக் குலாவி விளையாடும் பாடல்களைக் குறிப்பிடுவர். விளையாட்டுப் பாடல்களிலே இந்தப் பிரதேசத்தை அடையாளம் காட்டும் பாடல்கள் பலவழங்கி வருகின்றன. குழந் தைகள் ஊஞ்சலாடும்பொழுது பின்வருமாறு பாடுவர்.

**கச்சாயிற் புளியிலே ஊஞ்சாலும் கட்டி**
**கனகரா வளவிலே தோட்டமும் செய்து**
**வெட்டாத செவ்விளனி வெட்டி மடைபோட்டு**
**ஊரியாத கற்[illegible] எரித்து மடை போட்டு**

இந்தப்பாடல் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு உரியது என அடையாளம் காட்டமுடியும்.

இவ்வாறே கீழ்வரும் பாடலும் அமைகிறது.

சுன்னாகச் சந்தையிலே பறங்கி
சுங்கானைப் போட்டுவிட்டான்
பாத்தெடுத்துக் குடுத்தால் – பறங்கி
பாதிச் சுங்கான் குடுப்பான்

இந்தப் பாடலின் அமைப்பில் நாம் ஏலவே குறிப்பிடப்பட்டது போல வாய்ப்பாட்டு ரீதியில் வழங்கும் இன்னொரு பாடலும் உள்ளது.

**ஆமணக்கம் தோட்டத்திலே**
**கோமணத்தைப் போட்டுவிட்டன்**
**பாத்தெடுத்துத் தந்தவைக்குப்**
**பாதிக்கோமணம் நான் தருவேன்**

இந்தப் பாடல்களைக் குழந்தைகளை விடப் பெரியவர்களே (ஓரளவுக்கு வயது வந்தவர்கள்) பெரும்பாலும் பாடுவர்.

குழந்தைகள் குதூகலமாக ஆடிப்பாடிப் பாடும் பல பாடல்களைக் குழந்தைகளே இயற்றி விடுகிறார்கள் எனலாம். பாட்டுக் கட்டுந்திறன் இயல்பாகவே குழந்தைக்கு கைவருவதுண்டு. வாய்மொழிப் பாடல் மரபில் இதனை நிறையைக் காணலாம்.

**கண்ணாரே கடையாரே**
**காக்கணவன் பூச்சியாரே**
**கோச்சி என்ன காச்சினா?**
**கூழ்**
**கூழுக்குக் கறியென்ன?**
**புழு**
**பெரும்புழுவாப் பிடிச்சுக்கொண்டோடிவா**

**இவ்வாறே**

**இவடம் எவடம்?**
**புங்கடி புளியடி**
**புங்கடி புளியடி**
**எங்கடி போறாய்?**

இவ்வாறு வினாவும் விடையுமாக அமையும் குழந்தைப் பாடல்கள் பல யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கி வந்தது. வழங்கி வருகின்றது.

குழந்தைகள் பாடும் நீண்ட பாடல்கள் பல இன்றும் வழங்கி வருகின்றன. உதாரணமாக "அம்புலிமாமா எங்கே போறாய்" என வழங்கும் பாடலையும் குறிப்பிடலாம். இது போலவே

**சின்னத்தம்பி உடையார் சீமானாம்**
**சிப்பிலிச் சந்தைக்குப் போனாராம்**
**அங்கை ஒருத்தியைக் கண்டாராம்**
**ஆவட்டம் சோவட்டம் போட்டாராம்**
**புளியமரத்திலே ஏறினாராம்**
**பூறுசிதம்ப விழுந்தாராம்.**

இந்தப் பாடலின் தொடர்ச்சியாக வேறு சில அடிகளும் இடம்பெற்றுள்ளன.

**"மாமா மாமா பன்னாடே**
**மாமியார் வீட்டை போகாதே**
**சுண்டங் காயைச் சப்பாதே**
**சூத்தை அரிச்சுச் சாகாதே"**

'சூத்தை அரிச்சுச் சாகாதே' என்பதற்குப் பதிலாக 'சூத்தில் ரண்டடி வாங்காதே' என்றும் வழங்குகின்றது. இவ்வாறே தேடித் தொகுக்க வேண்டிய பாடல்கள் பலவுள.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கும் வாய்மொழிப் பாடல் மரபிலே "காதற் பாடல்கள்" மிக அரிதாகவே காணப்படு கின்றன. ஈழத்து நாட்டார் பாடல்களில் கிழக்கு மாகாணம், மன்னார் மாவட்டம், வன்னிப்பிரதேசம் முதலான இடங்களில் காதற்பாடல்கள் பல வழங்கி வந்தன – வருகின்றன. ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளிப்படையான காதற்பாடல்கள் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணச் சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் அடிப்படையிலே சமூகவியல் நோக்கில் இவ்விடயம் அரங்கம் ஆராயப்பட வேண்டும்.

ஆனால் விரக தாபம், பாலியல் நோக்கு முதலானவற்றின் அடிப்படையிலே பல வாய்மொழிப் பாடல்கள் வழங்கிவந்தன – வருகின்றன. அவற்றின் பதப் பிரயோகம் காரணமாக இங்குஉதாரணங்களைத்தராது தவிர்த்தோம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் புவியியல், பொருளியல் பின்னணியிலேயே இந்தப் பகுதியின் தொழிற்பாடல்களை நோக்க வேண்டும். பெரு விவசாயம் இந்தப் பகுதியிலே இல்லை. சிறிதளவான விவசாயமும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையும் நடைபெறுவதால் குறிப்பிடக்கூடிய விவசாயத் தொழில் சார்ந்த பாடல்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. விவசாயம் சார்ந்த பாடல்கள் சில வழங்கி வந்தாலும் அவை இலங்கையின் வேறு பாகங்களிலும் வழங்குபவையாகக் காணப்படுகின்றன.

கடலினால் சூழப்பட்டிருக்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழில் தொடர்பான வாய்மொழிப் பாடல்கள் பல வழங்குகின்றன. இவை இந்தப் பிரதேசத்துக்குரிய தனித்தன்மை கொண்டவையாக வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்து அம்மாப் பாடல்கள் பற்றிய தொகுப்புக்களும் கட்டுரைகளும் ஓரளவுக்கு வெளிவந்துள்ளன.

நாகர்கோயில், செம்பியன்பற்று, தாளையடிப் பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவர்களைச் செவ்வி கண்டபோது தாங்கள் பாடும் பாடல்கள் சிலவற்றைக் கூறினார்கள். உதாரணமாகப் பின்வரும் பாடல்களைச் சுட்டிக்காட்டலாம்.

**கறுப்பி வாடி காரிலபோவம்**
**சிவப்பி வாடி ஜீப்பிலபோவம்**
**பருத்துறை மாப்பிள்ளை**
**உடுத்துறை பொம்பிளை**
**சுதுமலை மச்சாள் சுதியான பெட்டை**
**ஆரெடா சண்டியன் நேரில வாடா**

இவ்வாறான தொழிற்பாடல்கள் பல வழங்கி வருகின்றன. அவை தேடித் தொகுத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சைவ மறுமலர்ச்சி காரணமாக யாழ்ப்பாணத்தில் வணங்கி வந்த சிறு தெய்வ வழிபாடுகள் பற்றிய பாடல்கள் பல மறைந்துவிட்டன. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்துத் தொகுத்துத் தரவேண்டியது நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களின் கடமையாகும்.

யாழ்ப்பாணத்தின் தனித்துவமான வாய்மொழி இலக்கியமாக ஒப்பாரிப் பாடல்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து ஒப்பாரிப் பாடல்கள் ஏலவே இந்த நூலில் எழுதப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணச் சமூகத்தை முழுமையாக விளங்கிக் கொள்ள இந்தப் பகுதியில் வழங்கும் வாய்மொழி இலக்கியங்கள் தொகுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

எம் நினைவில் உள்ள சில பாடல்கள்:

**"கொக்குப் பறக்கிற தேசத்தைப் பாரடி**
**குஞ்சு மச்சாளின்ரை கோவத்தைப் பாரடி"**

**"காவோலை சரசரக்க**
**வண்டெண்டிருந்தேன்**
**காக்கொத்து மச்சாளைப் பெண்டெண்டிருந்தேன்"**

**"நாரை பறக்குதடி நாகம்மா – இது**
**நாட்டை வட்டம் போடுதடி நாகம்மா**
**ஊரைக் கலக்குதடி சுத்துதடி நாகம்மா – இது**
**உலகமெல்லாம் சுத்துதடி நாகம்மா"**

**"ஏ.பீ.சீ.டி. எங்கப்பன் தாடி**
**எப்பன செல்லப் புட்டுத்தாடி"**

**"கலோ மிஷ்டர் கந்தையா**
**கல்லுக்கு மேலே குந்தையா**
**பொரிச்ச மீனைத் தின்னையா**
**பிறுக்குப் பிறுக்கென்று பீச்சையா"**

**"மாமரத்துக்கும் பூமரத்துக்கும்**
**மயிலக் கண்ணாடி**
**மாடு மேய்கிற வடுகப் பிள்ளைக்கு**
**நானோ பெண்டாட்டி"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சியில் சனசமூக நிலையங்கள்




## தமிழரின் கலையையும் பண்பாடும் ஒரு பார்வை

அறியாயான்

எதிலும் தனித்துவமானவன் தமிழன். தமிழரின் கலைகளும் பண்பாடும் அவ்வாறே தனித்துவமானவை. தமிழரது கலைகளும், பண்பாடும்பற்றி பல நூல்கள் தமிழிலும், வேற்று மொழிகளிலும் வெளி வந்துவிட்டன. இவற்றுக்கு மேலாக, தனித்தனி கட்டுரைகளாக ஆங்காங்கே சஞ்சிகைகளிலும் சிறப்பு மலர்களிலும் வெளிவந்துள்ளவை ஏராளம். இன்னமும் வெளிவந்த வண்ணமுள்ளன. அதற்கும் மேலாக, இணையப் பக்கங்களிலும் இவை தாராளம்.

அத்தகைய சிறப்புமிக்க தமிழரின் கலைகளும், பண்பாடும் பற்றியும், அவற்றின் செல்நெறி பற்றியும் அவ்வப்போது மதிப்பீடு மேற்கொள்ளப்படவேண்டும். பெரும் ஆய்வு ரீதியாக இல்லாவிட்டாலும், சாதாரண அளவிலேனும் அவை விமர்சனத்திக்குட்படுத்தப் படல் அவசியம். அப்போதுதான், ஏற்பட்டுவரும் பண்பாடு, கலை சீரழிவு பற்றியும் அறிந்து கொள்ள இயலும்.

இத்தகைய பார்வைகளும், பகிர்வுகளும் அவசியமானவை. ஏனெனில் பண்பாடு என்பது செயலிழந்த அல்லது தறுக்கணித்துப் போகும் ஒன்றல்ல. அது இயங்கியற் சாத்தியமுடையது. அதனைப் பல காரணிகள் தீர்மானிக்கின்றன. எனினும் அது பாய வேண்டிய திசையை, போக வேண்டிய போக்கை ஆற்றுப்படுத்துகின்ற பொறுப்பு, தமிழின் பால் பற்றுக் கொண்ட ஊடகங்களின் பொறுப்பு. அதற்கு களமமைத்து, புத்திஜீவிகளை உள்ளீர்த்து கருத்துப் பகிர்வு மற்றும் விவாதங்களை ஏற்படுத்தி திசைக் கோட்படுத்துதல் இன்றியமையாத ஒரு தேவையாகும்.



தமிழர் கலையும், பண்பாடும் பரந்துபட்டவை. நிலம், புலம், இந்திய தாயகம், இலங்கை, மலையகம் என அவற்றின் பரிணாமம் விரிந்தது. அவற்றில் வேதனைக்கும், சோதனைக்கும் ஆளாகி ஆராயப்பட வேண்டிய நிலை யிலுள்ளது. ஈழத் தமிழர் கலையும் பண்பாடும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

பூகோளமயமாதல் துரிதமாக இடம்பெற்று வரும் இந்தக் காலத்தில், ஒன்றின் தாக்கம் மற்றொன்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் என்பதும் நாமறிந்ததே. அதனால் ஈழத் தமிழரது கலையும், பண்பாடும் பற்றிப் பார்க்கையில், அவற்றில் தமிழகம் மற்றும் புலம்பெயர் தமிழரது செல்வாக்குப் பற்றி பார்க்காமல் இருந்துவிடவும் முடியாது.

உலகில் எங்குமில்லாதவாறு சிறந்த கட்டுக் கோப்பையும், கலாசார விழுமியங்களையும், பழக்க வழக்கங்களையும் கொண்டது எமது தமிழினம் தான் என்பதை மார்தட்டிக் கூறக் கூடிய ஒரு நிலை இருந்தது. அந்த நிலை இப் போது உள்ளதா? அதனை மீளவும் கட்டியெழுப்ப முடியாதா போன்ற ஆதங்கங்கள் எம் முதியவர்களிடம் ஏற்படுகின்றன.

திட்டமிடப்பட்ட வகையில் கலாசார சீரழிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன என அரசியல் வாதிகளும், ஆன்மிகவாதிகளும் அங்கலாய்க் கும் நிலை ஒன்று தற்போது தோன்றியுள்ளது. 1950களில் தமிழ் சமூக மத்தியில், வாசிக சாலைகள், சனசமூக நிலையங்கள் ஒரு முக்கிய இடத்தை வகித்தன. பல புதிய நிலையங்கள் தொடங்கப்பட்டன. வாழ்வின் இன்றியமையாத ஒரு பகுதியாக அவை திகழ்ந்தன. சமூக ரீதி அடிப்படையிலும் கூட, சனசமூக நிலையங்கள் தொடங்கப்பட்டன. ஒரே சமூகத்தினர் பரந்துபட்டு இருக்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்கள் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யத் தொடங்கவும் தவறவில்லை.

இத்தகைய நிலையங்களின் பணி, அன்றாட விடயங்களை அறிந்து கொள்ளத் தூண்டு

> உலகில் எங்குமில்லாதவாறு சிறந்த கட்டுக்கோப்பையும், கலாசார விழுமியங்களையும், பழக்க வழக்கங்களையும் கொண்டது எமது தமிழினம் தான் என்பதை மார்தட்டிக் கூறக் கூடிய ஒரு நிலை இருந்தது.

வதற்கு நாளேடுகளை வாசிப்புக்கு இடல், வருடாந்த விளையாட்டுப் போட்டிகள், கலை, கலாசாரப் போட்டிகளை நடத்தி ஊக்குவித்தல், பாடசாலைகளில் பெறமுடியாமற் போன சிலபல அனுபவங்களை, வாய்ப்பு வசதிகளைப் பிள்ளைகளுக்கு அளித்தல் என பரந்துபட்டு இருந்தன. அல்லாமலும் தமது பண்பாட்டைப் பேணி, முடியுமானவிடத்து மெருகேற்றி, அடுத்த சந்ததிக்கு கையளிக்கின்ற ஒரு மாபெரும் பணியிலும் இந்த நிலையங்கள் ஈடுபட்டன. மறு வளமாக இது ஒரு பயிற்சிக்கூடமாக அமைந்து, பாட சாலைகளில் போட்டிகளிலும் கல்விச் செயற் பாடுகளிலும் சனசமூக நிலையங்கள் சார்ந்த அந்தச் சமூக மக்கள் முன்னிற்க வழிகாட்டியது எனலாம். பல சமூகங்களின் அசைவியக்கத்துக்கு இந்தச் சனசமூக நிலையங்கள் காரண மாக அமைந்தன. சமூக மேம்பாட்டில், கல்வி பிரிக்க முடியாத ஒரு சக்தி என்பதைக் கருத்தில் கொண்டு, கல்வி வாய்ப்பை அளிக்கின்ற செயற்பாட்டிலும் இந்தச் சனசமூக நிலையங்கள் ஈடுபட்டன. சமூகத்தில் பாட சாலை இடைவிலகலை தணிப்பதற்கு பணியாற்றின. மெல்லக் கற்போருக்கு, தம் அடைவை உயர்த்துவதற்கு உந்து சக்தியாக இத்தகைய நிலையங்களில் இடம்பெற்ற மாலை நேர மற்றும் வாராந்த வகுப்புக்கள் உதவின. தனியார் கல்விக் கூடங்கள் அறியப்படாத அந்த காலத்தில் கல்விச் செயற் பாடுகளில் இவை பெரிய பங்களிப்பை நல்கின. கலை, பண்பாட்டு செயற்பாடுகளையும் ஊக்குவித்தன.

அநேகமாக இவையனைத்தையும் சமூகத்தில் முன்னிலைப்படுத்தி செயற்படுத்துவதில், அவ்வப்பகுதி ஆசிரியர்கள் முதன்மை பெற்றிருந்தனர். அல்லது அவ்வாறான செயற்பாடுகளுக்கு அந்த பிரதேச, அல்லது சமூக ஆசிரியர்கள் தலைமை தாங்கினர். அதனால் ஆரோக்கியமான சமூகமொன்று தலையெடுத்தது. அத்தகைய சமூகங்களில் சீரழிவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றும்போது, சமூக உறுப்பினர்கள் அவற்றை இனங்கண்டு நசுக்கிவிடும் ஆற்றலுள்ளவர்களாகவும் இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரல்களால் நரம்புகளைச் சிலிர்க்க வைத்த

## கோபியின் சங்கமம் இசை அமுதம்

கே.எஸ்.சிவஞானராஜா

பின்னணி இசைக் கலைஞர்களின் விரல்களில் தவழ்ந்த லயச் சொற்கட்டுக்கள் எந்த விதத்திலும் சோடைபோகவில்லை. அவை இரசிகர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்ததெனலாம். ரமணனின் வலந்தலை நாதம், அவரது விரல்களின் விளையாட்டெனலாம். அவரது வாசிப்பு ஒரு தனி ரகம். சிவசுந்தர சர்மாவினது கஞ்சிரா வாசிப்பின் பக்குவமும் பலிதமும் மிகநன்று.



**ஒரு பார்வை:-**
சங்கமம் வயலின் வாத்தியக் கலையகத்தால் நடத்தப்பட்ட மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும், இசை நிகழ்வும் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தேனாகிப் பாய்ந்தது. அனைவரும் இசைத் தேனைப் பருகியதோடு மிகுதியை வீட்டிலும் கொடுத்துப் பசியாறி னர் எனலாம்.

**நேரம்**
காலதாமதமின்றி உரிய நேரத்தில் சங்கமம் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டமை மேற்படி கலையகத்துக்குப் பெறுமதி சேர்த்ததெனலாம். நேரத்துக்கு ரசிகர்கள் வரமுடியாது போனா லும் கூட சோர்வடையாது, நிகழ்வுகளை ஆரம்பிக்க வல்ல திறமையை யாழ்ப் பாணம் என்றும் வரவேற்கும். அந்த வகையில் சங்கமம் வயலின் வாத்தியக் கலையகம் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், சம்பிரதாயபூர்வமாக நேர காலத்தைப் பொன்னாக்கியது.

**மேடை**
மேடைக்கு ஒரு மேடை அலங்கரிக்கப்பட்டவிதம், சோடைபோகாத வண்ணம் சிவப்பு வர்ணம் மனதுக்கு குளுகுளு இரம்மியத்தை ஈந்ததெனலாம். கைலாசபதி அரங்கின் ஸ்திரத்தன்மைக்கு தலைமையுரையாற்றிய ச.லலீசனின் தமிழ் வார்ப்புக்கள் இதமளித்ததெனலாம்.

**அழைப்பிதழ்**
நன்கு வடிவமைக்கப்பட்ட, கண்கவர் மடல் வயலினால் அலங்கரிக்கப்பட்ட முத்திரையையும், பார்ப்பவர்களுக்குச் சௌகரியம் அளிக்கும் விதத்தில், இரம்மியமான பின்னணியில் துல்லியமான தமிழ் எழுத்துக்களால் மனதை ஆக்கிரமித்ததெனலாம். தம்புராவின் சுருதியில் பிரகாசிக்கும் பதினொரு வயலின்கள் சங்கம முத்திரைக்கு அணி செய்ய, இருபத்தாறு சங்கம வயலின் வாத்திய இளம் சிட்டுக்களின் சீரான வர்ணப்புகைப்படம் மடலை ஆராதனை செய்ய, எவகிறீன் அச்சகத்தார், யாழ். மதர் ஹெயர், ஹோட்டல் ஈரோ லங்கா பிறைவேற் லிமிட்டெட், லது டிஜிற்றல், ஷேகர் சவுண்ட், ஒ.எஸ், ஸ்தாபனங்கள் அனுசரணை வழங்க ரசிகப் பெருமக்களை கைலாசபதி மண்டபத்துக்கு வரவழைத்ததெனலாம். இன்னும் பல கலைஞர்களுக்கு அழைப்பிதழ்களை அனுப்ப ஆவன புரிந்திருக்கலாம் என்ற எண்ணம் அங்கு வந்திருந்த ஆர்வலர்களுக்கு ஏற்பட்டமை ஒன்றும் புதிதல்ல.

**குரு**
இலங்கையில் ஒரு தலைசிறந்த இசைப்பாரம்பரியத்தில் விளைந்த ஒரு முத்து, வயலின் கலைஞராக விளங்கும் சுந்தரமூர்த்தி கோபிதாஸ். தந்தையார் இலங்கையின் மூத்த நாதஸ்வரக் கலைஞராக மிளிரும் நாதஸ்வர ஞானமணி, கலாபூஷணம் சுந்தரமூர்த்தியின் புத்திரனே கோபிதாஸ். கலையைப் பற்றி இதற்கு மேலும் அவரைப்பற்றி சொல்லுவது நியாய மல்ல. கோபி ஒரு தலை சிறந்த முன்னணி வயலின்கலைஞர். யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட இசை விரிவுரையாளரும் கூட. இவரது குரு, வயலின் இசை மாமணி உ.இராதாகிருஷணன்.

**ஒலி அமைப்பு**
நன்கு பரிச்சயமான அனுபவம் மிக்க கலைஞர்களால் செவ்வனே ஒலி அமைப்புச் செய்யப்பட்டிருந்தமை நிகழ்வுக்கு வரம் சேர்த்ததெனலாம். ஒரு தடவை மட்டும் ஒலிக்கட்டமைப்பு மீறப்பட்டமை ஒரு பெரிய விடயமல்ல. பொதுவாகவே அணி செய் வாத்தியங்களின் ஒலிப் பிரவாக அளவைச் சற்றுக்குறைத்து வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ என்று எனது வயது அனுமானித்ததில் தவறு இருக்கலாமோ என மீண்டும் என்னை சுய பரிசோதனை செய்து கொண்டேன். மடிவில் சரியாகவே இருந்தது.

**நரம்புகள் சிலிர்த்தன**
இருபத்தாறு வயலின்களில் இருந்து பிரவாகித்துப் பீறிட்ட இசையால் கைலாசபதி அரங்கம், சங்கீத ஞானத்தின் சுரங்கமாக மாறியது. விரல் இசை ஆரம்ப நிகழ்வாக, சங்கமக் கலை வாரிசுகளாகி இடம் பெற்றவர்கள், கோவேந்தன் ஜெயசன், கோவேந்தன் அக்ஷயன், கோபிதாஸ் கலைக்கீரன், செல்வகுமார் ஆதுலன், இரவீந்திரன் ஆவர்த்தனா, சிவகுமார்சுவேதா, கேதீஸ்வர சர்மா அஹ்ஷயா, சக்திவேல் நாராயணி, சுகுமார் பிலஹரி, இளங்கோ சங்கவி ஆகிய பத்து இளஞ்சிட்டுகளின் வயலின் இசை வார்ப்புக்கள், சங்கீத பிதாமகரும், ஆதி குருவுமாகிய ஸ்ரீ புரந்தர தாஸரின் மாயா மாளவ கௌளை இராக சாம்ராஜ்ஜிய உலகுக்கு அழைத்துச் சென்றது. அற்புதமான கோர்வைகளாக, கார்வைகளோடு சேர்ந்த சேர்வைகளாக, பார்வையாளரின் கண்களில் அகப் [illegible] லின்களும் சுருதியில் ஒன்றாகி, அசைவினில் ஒன்றாகி, கமத்தினினில் ஒன்றாகி, லயத்தினில் ஒன்றாகிச் சங்கமித்த போது சபையின் கராங்கள் ஓங்கி ஒலித்தன. செம்மையான ஒத்திசைவும், ஒத்திகையும் கோபிக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் எனலாம். பின்னணி இசைக் கலைஞர்களின் விரல்களில் தவழ்ந்த லயச் சொற்கட்டுக்கள் எந்த விதத்திலும் சோடைபோகவில்லை. அவை இரசிகர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்ததெனலாம். ரமணனின் வலந்தலை நாதம், அவரது விரல்களின் விளையாட்டெனலாம். அவரது வாசிப்பு ஒரு தனி ரகம். சிவசுந்தர சர்மாவினது கஞ்சிரா வாசிப்பின் பக்குவமும் பலிதமும் மிகநன்று. செந்தூரனின் மோர்சிங் வாசிப்பு லாவகமானது. அவருக்கு அமைக்கப்பட்ட ஒலிவாங்கியின் ஒலியளவைச் சிறிது கூட்டுவதற்கு என்னிடம் ஏதாவது வசதிகள் இருந்திருக்குமாயின், டாக்டர் கோவிந்தராஜனின் இசையரங்குக்கு வாய்த்ததுபோல் இரம்மியமாக்கியிருப்பேன். அவரது நாதம் லயத்தைத் தட்டிச் செல்லும் போது, மோர்ச்சிங் வாசிப்புக்கு நிகர் வேறொன்றுமிருக்கமுடியாது. செந்தூரனின் வாசிப்புக்கு உற்ற துணையாக ரவிசங்கரின் கடம் மண்டபத்தைச் சமச்சீராக நிரப்பியது. சௌக்கியமாக வாசிப்பு மிளிர்ந்தது. விமல் சங்கரின் தபேலா பவ்வியமாகப் பாலித்தது. கண்ணதாசனின் கைகளுக்கு மிருதங்கம் எப்போதுமே வரமாக அமைவது வழக்கம். பிசிறல் இல்லாத வாசிப்பு.

**நரம்புகள் உதிர்த்தன**
அரவிந்தன் அபிராம், கிரிதரன் அனுஷாகர், சிவசிவா சிவோதயன், சிவசிவா சிவேதன், கோபிதாஸ் கலைமகன், சுரேஷ்குமார் மயூரகி ஆகியோரின் மனோரம்மிய வாசிப்பும், ஜன்னிய இராகங்களின் ஆட்சியும், கர்நாடக ஹிந்துஸ்தானி இராக ஜீவன்களை அனுபவிக்க வல்ல முக்கனிச்சாற்றில் ஊறிய கற்கண்டுகளாய் உதிர்ந்தன. இலங்கையில் வயலின் வாத்திய சாம்ராஜ்ஜியம் ஒன்றை உருவாக்க வல்ல காலத்தின் கடமையை கோபி சரியாகப் புரிந்துள்ளமை யாழ்ப்பாணத்தின் பேறெனலாம். நேரிய பாதை தெரிகிறது. இனி விரல்களின் பயணம்நலமாக அமையும். எனக்கு முன்பாக இருந்த மாணவிகள் தமது தொலைபேசி ஒலிவாங்கியில் ஜகன்மோகினி, அமீர்கல்யாணி, பௌதாரி, சுத்த தந்நியாசி, பிலஹரி, நீலாம்பரி இராகங்களை பதிவு செய்து கொண் டிருந்தபோது தான், கேள்விஞான முள்ள பிள்ளைகளின் தேடல் தெரிந்தது. ஏனைய ஆர்வலர்களுக்காக இராகங்களைக் கூறுவதும் சபையின் தர்மமாக இருக்குமோ என எண்ணத் தோன்றிற்று. அரங் கேற்றங்களில் உருப்படிகளின் விவரம் தரப்படுவது இதனாலன்றோ!

**நரம்புகள் பூத்தன**
வைகுந்தன் உமா, பிறேமகிருஷ்ணா ஆரபி, சுரேஷ்குமார் துவாரகி மூவரின் வயலின் வாத்திய சங்கமம் நரம்புகளைப் பூத்துக்கொலுவேற்றியது எனலாம். (ப்) பாவம், ததும்பிய விரல்களின் பயணத்தில் நாமும் இணைந்து கொண்டோம். விரல்களாலும் பேச வைக்க முடியும் என்பதை கோபி மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியே விட்டார்.

**நரம்புகள் இனித்தன**
தொடர்ந்து வாத்திய பிருந்தகானம் நன்கு திட்டமிடப்பட்டு, படிமாணப் படுத்தப்பட்ட சுருதிப்பிடிப்பான பரிபூரண நிகழ்வாக இனித்தது எனலாம். நந்தகுமார் விது, ஜனார்த்தனன் கிருசானு, பரமேஸ்வரன் மகிழ்ந்தினி, கருணா பவனுஷா, கோபிதாஸ் கலையெழில், சிவானந்தசர்மா கீதஸ்ரீ, நந்தகுமார் அகிலினி, சுரேஷ்குமார் மயூரகி, அனுஷாகர் கிரிதரன், அரவிந்தன் அபிராமி, சிவசிவா சிவேதன், சிவசிவா சிவோதயன், கோபிதாஸ் கலைமகன் வைகுந்தன் உமா, பிரேமகிருஷ்ணா ஆரபி, சுரேஷ்குமார் துவாரகி ஆகிய பதினாறு பேரின் விரல்களில் கசிந்த இசை வாயூறவைத்ததெனலாம். அற்புதம்– ஆனந்தம்.

**ஹிந்துஸ்தானி இசை செறிந்தது**
சாஸ்திரபதி இசுறு கொண்ட சிங்கவின் விஸ்தாரமான ஹிந்துஸ்தானி சங்கீதம், வயலினது நரம்புகளை முத்தமிட்டு பேரின்பத்தை அளித்தது. பிரசங்கிக கலாவதி பாவரா நவமினாவின் தபேலா வாசிப்பு அடக்கமானது. ஆனால், அபரிதமானது. வாலாயமாய் அமைந்தது எனலாம்.

மதிப்பீட்டுரையை காத்திரமாகவும், பெறுமதியாகவும் சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை ஐயா சுவைபடக் கூறினார். சங்கமம் வயலின் வாத்திய கலையகத்தின் ஸ்தாபகர் கோபிதாஸ் (கோபி) அவர்களை வணங்கி ஒரு வயலின் சாம்ராஜ்ஜியம் உருவாகிறது. காலத்தின் தேவையும் அதுவாகும்.

சங்கமம் வயலின் வாத்தியக் கலையகம் ஒரு ஸ்தாபனமாகப் பதியப்படவேண்டும். அதற்கு என்று ஒரு கலைக்கூடம் அமைய வேண்டும். மிருதங்கக் கலைஞர்கள் பல்கிப் பெருகி வருவது போல், வயலின் கலைஞர்களும் பல்கிப்பெருகிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org